Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 20 புதன்கிழமை (04.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 277

















# வற்றியது இரணைமடுக் குளம்

# பத்தாயிரம் ஏக்கர் பாதிப்பு



(கிளிநொச்சி)

தற்போதைய கடுமையான வரட்சி காரணமாக இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளதால் குளத்தை நம்பி சிறுபோகச் செய்கையை மேற்கொண்டுள்ள நெற்காணிகளுக்கு நீர் வழங்க முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளங்களிலுள்ள நீரைக்கொண்டு சுமார் 13 ஆயிரம் ஏக்கர் காணிகளில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன்படி இவ்வருடத்தில் இரணைமடுக் குளத்தை நம்பி கடந்தவருடத்தை விட மேலதிகமாக மூவாயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டிருந்தனர். எனினும் இரணைமடுக் குளத்திலுள்ள நீர் சிறுபோக நெற்செய்கை அதிகரிக்கப்பட்டதனால், விநியோகிக்கப்பட்ட வகையிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையாலும், சடுதியாகக் குறைவடைந்துள்ளது. தற்போது இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 15 அடியிலிருந்து 13 அடிக்கு கீழ் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஆணின் சடலம் வவுனியாவில் மீட்பு

(கொழும்பு)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் உள்ள நகரசபைக்கு சொந்தமான திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் உள்ள கிணற்றிலிருந்து ஆணின சடலமொன்றினை வவுனியாப் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர். பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலினைத் தொடர்ந்து பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி எரிக்பெரேரா மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சடலத்தினை பார்வையிட்டதுடன் மாவட்ட நீதவான் முன்னிலையில் சடலம் மீட்கபபட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர.

## முன்னாள் கடற்படை அதிகாரிக்கு கனடாவில் புகலிடம் மறுப்பு

இலங்கையைச் சேர்ந்த முன்னாள் கடற்படை அதிகாரி ஒருவருக்கு கனேடிய அரசாங்கம்புகலிடம் வழங்க மறுத்துள்ளது. நடராஜா குருபரன் என்ற முன்னாள் கடற்படை கொமாண்டரே இவ்வாறு கனடாவில் புகலிடம் கோரிய நிலையில் புகலிடம் மறுக்கப்பட்டுள்ளது. குறித்த கடற்படை அதிகாரி யுத்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் புகலிடம் வழங்க முடியாது என கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குருபரன் மற்றும் அவரது மனைவி, பிள்ளைகள் இவ்வாறு புகலிடம்கோரியுள்ளனர். இலங்கைக் கடற்படையில் கடமை

19 ஆம் பக்கம் பார்க்க

## பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் உள்வாங்கப்படாதோருக்கு பதிவு

### இன்றும் நாளையுமென அறிவிப்பு

பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் உள்வாங்கப்படாதவர்களின் விபரங்கள் இன்றும், நாளையும் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அலுவலகத்தில் பதிவு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிலுநர் பட்டதாரி நியமனம தொடர்பாக விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு கடிதம் கிடைககப்பெறாதவர்கள், விண்ணப்பிக்க தவறியவர்கள், நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய போதும்

19 ஆம் பக்கம் பார்க்க



## விசாரணைகளில் திருப்தியில்லை அடையாள வேலைநிறுத்தம்

### யாழ். வைத்தியர் சங்கம் முடிவு

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளில் தமக்குத் திருப்தியில்லை எனவும், இது குறித்து தாய்ச் சங்கத்துடன் கலந்துரையாடலை நடாத்திய பின்னர், எதிர்வரும் வெள்ளிக்கிழமை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக, யாழ். மாவட்ட வைத்தியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கும் பணிப்பாளருக்கும் இடையில் நிலவுகின்ற முரண்பாடுகள் தொடர்பாக சமாதான நிலையை ஏற்படுத்துவற்கு

நிர்வாக நிலையில் உள்ள அதிகாரியாகிய வைத்தியக் கலாநிதி ஆனந்த குணசேகர யாழ் போதான வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் வருகைதந்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் 15 ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர்

### ஐ.சி.ஆர்.சி. தெரிவிப்பு

இலங்கையில் கடந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 15780 பேர் காணாமல் போயுள்ளதாக ஜெனிவாவை தலைமையகமாகக் கொண்ட சர்வதேச செஞ்சிலுவை குழுவின் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைவிட காணாமற் போனவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையே இதுவாகும் என சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் தலைவர் யகொப் ஹெலன்பேர்க்கெர் தெரிவித்துள்ளார். காணாமற் போனவர்களில் அதிகமானவர்கள் ஆண்களாவர். இவர்களில் 1494 சிறுவர்களும் 754 பெண்களும் காணாமல் போயுள் ளனர்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்கள் குழு போரின் போது 40ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதையும் சர்வதேச செஞ்சிலுவை குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இறுதி போரின் போது 2 இலட்சத்து 80ஆயிரம் பொதுமக்கள் இட[illegible]ர்ந்து அரசாங்கம் அமைத்த முகாம்களில் தங்க வைக்கப்[illegible] எனவும் தெரிவித்துள்ளது.

## மூதூரில் படுகொலையான பணியாளருக்கு இழப்பீடு

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 உதவிப் பணியாளர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென கொழும்பிலுள்ள பிரெஞ்சுத் தூதரகம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. பிரெஞ்சு தொண்டர் நிறுவனமான அக்சன் பெய்ம் நிறுவனத்தில் பணியாற்றிய இந்த 17 பணியாளர்களும், கடந்த 2006 ஆம் ஆணடில் மூதூரில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலைகள் குறித்து மீள்விசாரணை நடத்தப்படும் என்று கடந்த மார்ச் மாதம்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஊழலை மூடி மறைக்க வேம்படிக்கு புதிய அதிபர்

### கல்லூரி சமூகம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஊழல் சோசடி நடவடிக்கையை மூடிமறைக்கும் நடவடிக்கையாகவே புதிய அதிபர் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போதைய அதிபருக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றும் வேம்படி மகளிர் கல்லூரி சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று வேம்படி மகளிர் கல்லூரி சமூகம் கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர்கள் இவ்வாறு கோரியுள்ளனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டினை வேம்படி மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் குழு, அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகள் கல்லூரியின் நலன்விரும்பிகள் ஒழுங்கு செய்திருந்தனர். யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வேம்படி மகளிர்

19 ஆம் பக்கம் பார்க்க

# கல்வி வளர்ச்சி மட்டும் போதாது மக்கள் நிறைவாக வாழ வேண்டும்

### ஈ.பி.டி.பி.யின் வலி. கிழக்கு அமைப்பாளர் ஐங்கரன்

கிராமம் மென்மேலும் வளர்ச்சி அடைய மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாது மக்களது அனைத்து தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவை நிறைவேற்றப்படுகின்ற பொழுதுதான் அவர்கள் உண்மையான தங்களுடைய வாழ்க்கையை வாழமுடியும் என வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. , கிழக்கு இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் மத்தி இராசன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா கடந்த மாதம் 30 ஆம் திகதி சனசமூக நிலையத் தலைவர் பு.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,


ஒரு கிராமத்தினுடைய எதிர்கால வளர்ச்சி அப் பிரதேசத்தில் கல்விகற்கின்ற மாணவர்களுடைய கரங்களிலும் அவர்களை வழிநடத்துகின்ற பெற்றோர்களின் கைகளிலும் தான் தங்கியுள்ளது எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிராம உத்தியோகத்தர் எஸ்.பாலசுந்தரம் -

இந்தப் பிரதேசத்தினுடைய வளர்ச்சிக்கும் இம் மக்கள் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்ற சந்தோசமான இவ் வாழ்விற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளரும் வலி. கிழக்கு பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவருமாகிய ஐங்கரன் எடுத்த முயற்சியின் பலனாகும்.

அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்ததுக் கொண்டார்.

மேலும் ஏற்கனவே பலருக்கு வீட்டுத் திட்டத்தினைப் பெற்றுக் கொடுத்தீர்கள். அதே போல் இக்



கிராமத்தினுடைய வீதியினையும் எஞ்சியிருக்கின்ற பயனாளிகளின் வீட்டுத் திட்டத்தையும் பெற்றுக் கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

# இலங்கை வங்கியின் 11 கிளைகள் இன்று திறப்பு

இலங்கை வங்கியின் 73 ஆம் ஆண்டு நிறைவைக்கொண்டாடும் முகமாக வடபகுதியில் 11 வடிக்கையாளர் சேவை நிலையங்கள் இன்று மருதங்கேணி, மந்திகை, சாவல்கட்டு, ஓமந்தை, யாழ். பல்கலைக்கழகம், கல்வியங்காடு, கிளிநொச்சி கச்சேரி, கரணவாய், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் திறந்துவைக்கப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் வடபிராந்திய பிரதிப்பொது முகாமையாளர் சுமணசிறி தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் இவ்வாறான சேவை நிலையங்கள் திறக்கப்படுவதனால் முப்பது வருடகாலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் கட்டி எழுப்பப்படுவதுடன் வடபகுதி அபிவிருத்தியில் தன்னிறைவைக் காணக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். (02)

# பனை மீள் நடும் முயற்சி மாநகர சபைக்கு வெற்றிதருமா?



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பணம் பொது நூலகத்திற்கு பின்புறமுள்ள பனை மரங்கள் பாதை அகலிப்புக் காரணமாக குறித்த இடத்தில் இருந்து அகற்றப்பட்டு நூலகத்திற்கு முன்பாக உள்ள வீதியில் யாழ் மாநகர சபையினால் மீள நடப்பட்டு வருகின்றது.

இந்த பனை மர நடுகை தொடர்பாக மக்கள் மத்தியில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளது. இயற்கையாக காணப்பட்ட பனைமரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு குறித்த பகுதியில் நடுகை செய்யப்பட்டு வருகின்றது. இதனால் பனைமரங்கள் முளைக்கும் தன்மை குறைவானதாக இருக்கும் என்றும் அனுபவஸ்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவிக்கையில்,

இது தொடர்பாக சபையிடம் எந்த விதமான அனுமதியும் பெறப்படவில்லை. அத்துடன் இந்த பனை மர நடுகையானது எந்தளவிற்கு வெற்றி பெறும் என்று தெரியவில்லை கொழும்பு காலி முகத்திடலில் 5 அடி உயரமான பனை மரம் நடுகை செய்யப்பட்டது.

பனை மரத்தின் வளர்ச்சிக்கு உரிய மருந்துகள் மற்றும் இரசாயனப் பசளைகள் என்பன பயன்படுத்தப்பட்டு வந்தன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் பைக்கோ மூலமே நடுகை மேற்கொள்ளப்பட்டு வருவதால் வேர்கள் அறுந்து முளைக்கும் தன்மை குறைவானதாக இருக்கும் என்றார்.

இது போன்ற ஒரு திட்டத்தை வவுனியா புளியங்குளம் பகுதியில் மேற்கொண்டபோது இதனால் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார். (02)

# நாளை ஆளுநருடன் சந்திப்பு இல்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுடனும் தொழில்நுட்ப ஆசிரியர்களுடனும் நாளை வடமாகாண ஆளுநருடன் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம்பெற மாட்டாது எனவும் அவர்களுடனான மறு சந்திப்புக்கு உரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

# புதுக் காருக்கு காற்று போனதால் விபத்து

பருத்தித்துறை வீதி நீர்வேலிப் பகுதியில் முன் சில்லு காற்றுப் போனதால் வேகக் கட்டுப்பாட்டை இழந்த புதுக்கார் ஒன்று அருகில் இருந்த மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்து கோப்பாய் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

புதிதாக கொள்வனவு செய்த காரில் சன்னதி கோயிலுக்கு குடும்பத்துடன் சென்று திரும்பிக் கொண்டிருக்கையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (02)

# உணவகங்களில் தரச் சான்றிதழ் காட்சிப்படுத்த பின்னடிப்பு

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டத்திலுள்ள உணவு கையாளும் நிலையங்களுக்கு சுகாதாரப் பகுதியினரால் வழங்கப்பட்ட தர நிர்ணய சான்றிதழ்கள் உரிய முறையில் உணவகங்களில் காட்சிப்படுத்தப்படவில்லை என பல பொதுமக்களினால் குறை கூறப்பட்டுள்ளது.

உணவகங்களில் இச்சான்றிதழ்கள் பொதுமக்களின் பார்வைக்கு தெரியும்படியாக தெளிவான முறையில் முன்பக்கத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்னும் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்கள் பல உணவகங்களினால் அலட்சியம் செய்யப்பட்டுள்ளது.

உணவு கையாளும் நிலையங்களின் தரத்திற்கேற்ப ஏ,பி,சி என 3 வகைகளாக சுகாதாரப் பிரிவினர் உணவு கையாளும் நிலையங்களை தரம்பிரித்தனர். இவற்றுள் சி தர சான்றிதழ்களைப் பெற்ற உணவகங்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பி அல்லது ஏ தரத்திற்கு முன்னேறிவிட வேண்டும் எனவும் தவறின் அவை சீல் வைத்து மூடப்படும் என்றும் சுகாதாரப் பகுதியினரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள பல உணவகங்களில் இத் தரச் சான்றிதழ்களைக் கண்டு கொள்ள முடியவில்லை. ஏ தரச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட சில உணவகங்களில் மட்டும் இவைகளைப் பார்க்க முடிகிறது.

சில உணவகங்களுக்கு இன்னும் இச்சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என அவற்றின் உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர இடநெருக்கடி, சுகாதார சீரழிவு, வெற்று மேலுடம்பில் வியர்வை அழுக்கடைந்த உடையுடன் வேலையாட்கள், விறகுக் குவியலுடன் சமையலறை என பல குறைபாடுகளுடன் காணப்படும் உணவகங்களுக்கு பி அல்லது ஏ தர சான்றிதழ்கள் கிடைத்திருப்பதாக பல பொதுமக்களினால் குறை கூற[illegible] பட்டுள்ளது. யாழ். நகரப் பகுதியிலேயே இவை அதிகமாகக் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு தமது கடமை முடிந்து விட்டதாகக் கருதாமல் தொடர்ந்தும் உணவு கையாளும் நிலையங்கள் மீது சுகாதாரப் பிரிவினரின் கண்காணிப்பு இடம்பெறல் வேண்டும் எனப் பொதுமக்களினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (137)

# பதுக்கப்பட்ட மரக்குற்றிகளை மீட்டனர் சுன்னாகம் பொலிஸார்

(சுன்னாகம்)

கோண்டாவில் பகுதியில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை சுன்னாகம் பொலிஸ் நிலைய விசேட பொலிஸ் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து உடன் நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் நேற்று முன்தினம் மாலை 3.45 மணியளவில் சந்தேகத்திற்கிடமாக கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் பகுதியிலுள்[illegible] ஆட்கள் எவருமில்லாத வீடொன்றை சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இதன்போது அங்கே 26 முதிரை மரக்குற்றிகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை கண்டு பிடித்ததுடன், இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்து விசாரணை செய்து வருகின்றனர்.

தற்போது பொலிஸ் நிலையத்திலுள்ள சந்தேகநபரும், மரக் குற்றிகளும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (54)

# கசூரினாவில் கட்டணக் குளியல்

(யாழ்ப்பாணம்)

கசூரினா கடற்கரையில் நல்ல தண்ணீரில் குளிப்பதற்கு தற்போது 30 ரூபா அறவிடப்பட்டு வருகின்றது. இந்நடைமுறை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் நல்ல தண்ணீரில் குளிப்பதற்கு கடற்கரையில் உள்ள சிறிய கிணற்றில் இலவசமாக பாவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இப்போது குறித்த கிணற்றடியில் இருந்த வாளி அகற்றப்பட்டுவிட்டது. கடற்கரையில் நல்ல தண்ணீரில் குளிப்பதற்கு 30 ரூபா வீதம் அறவிடும் செயற்பாட்டின் மூலம் பிரதேச சபையினர் வருமானம் ஈட்டுவது நல்ல நடைமுறையென சுற்றுலாப் பயணி ஒருவர் தெரிவித்தார்.


## "தோற்காத ஆசிரியம் நாற்பத்தொன்று"

தோற்காத ஆசிரியம் தொற்றாமல் வென்றது,
ஏற்காத பதவிகளால் அடிமையாகி ஆண்டது,
கோற்காலிபோலக், குருவாகி நாற்பத்
தொன்றாகிப்
போற்றினேன் நல்லூரா, ஒரு ரூபாயுடன்
வெல்வதற்காய்
(உன்னோடு வாழ அது போதுமப்பா)

ஆசிரியர் சிற்றம்பலம் சிவஞானராஜா (1972)
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

(C/1584)



# கல்வியில் உயர்ந்து விளங்குவோரை கௌரவப்படுத்த வேண்டும்

## — வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் —

(வடமராட்சி)

எமது சமூகத்திற்காக எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற பொக்கிஷங்கள்தான் எங்களது ஆலயங்களும், பாடசாலைகளும். அவர்கள் நீண்ட நோக்கில் சிந்தித்து வரும்கால சந்ததிகளுக்காக பயன்படத்தக்க வகையில் அவற்றை அமைத்துள்ளார்கள் என வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளர் எஸ். சத்திய சீலன் தெரிவித்துள்ளார்.

யாழ்/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் "சிதம் பரதீபம்" பவளவிழா மலர் வெளியீட்டு விழா கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வித்தியாலய முதல்வர் டாக்டர். கே.கே. யோகநாதன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கயில், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தயாலயமானது 75 ஆண்டுகள் நிறைவிலே இந்த அவையிலே கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. இந்த அவையை பார்க்கின்ற போது நான் உண்மையிலே பெருமையடைகின்றேன். சிறப்பான முறையில் கொண்டாடிக் கொண்டிருக்கும் கல்விமான்களை பல அறிஞர்களை சிறப்பான பண்புமிக்கவர்களை நான் பார்த்தும் பெருமிதம் கொள்கின்றேன். அவர்களுடைய பெருமை பாடசாலைக்குரியது.

அந்த வகையில் மலருக்கு இந்த விழா ஏன் "சிதம்பரதீபம்" எனப் பெயர் வைத்துள்ளீர்கள் என்று கேட்டபோது அவர்கள் இந்தப் பாடசாலையின் ஸ்தாபகர் சிதம்பரப்பிள்ளை. ஆகவே தான் "சிதம்பரதீபம்" எனப் பெயர் வைத்தோம் என பதிலளித்துள்ளனர். அவருடைய கௌரவம் உண்மையிலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். மேலும் பாடசாலைகள், சமூகமையங்கள் சமூகத்தினுடைய சிப்பிகளாகவும் உள்ள சிறப்பான மனிதர்களை உருவாக்கிய அடித்தளங்களுக்குரியவை. அந்தப் பாடசாலையில் கடமையாற்றி சிறப்பான சேவையை வழங்கியவர்கள் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அவர்களது பெயர்களும் இதில் இடம் பெறவேண்டும். அவர்களை பெருமைப் படுத்துவதன் ஊடாக எங்களது மாணவர்கள் பிள்ளைகள் சமூகத்தில் அவர்கள் போல நாங்களும் வரவேண்டும் என்ற எண்ணம், உள்ளத்தில் அப்போது தான் வரும். அதற்கு சமூகத் தலைவர்களும் பெற்றோர்களும் முன்வர வேண்டும்.

பாடசாலைகள் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் அடைவு மட்டங்களை உருவாக்க வேண்டும். அப்போதுதான எமது மாணவச்செல்வங்கள் சகல துறையிலும் சாதனைபெற்று தலைநிமிர்ந்து வாழக்கூடிய ஓர் நற்பிரஜையாக சமூகத்தில் மிளிருவார்கள் என அவர் தெரிவித்தார். (116)

# இலங்கை வங்கி விரிவாக்கற்கிளை கரணவாயில் அங்குரார்ப்பணம்

(கரணவாய்)

இலங்கை வங்கி நெல்லியடி கிளையின் கரணவாய் விரிவாக்கற்கிளை அங்குரார்ப்பண நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 11.30 மணிக்கு கரணவாய் குஞ்சர்கடை சந்தியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வங்கி நெல்லியடி கிளை முகாமையாளர் க.ஆனந்தராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக இலங்கை வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க, இலங்கை வங்கி பொதுமுகாமையாளர் கே.தர்மசிறி, விற்பனை நெறிப் படுத்தல் பிரதிப் பொதுமுகாமையாளர் எச்.எம். முதியான்சே கிளை வங்கியியல் பிரதிப் பொதுமுகாமையாளர் டி.எம். குணசேகர, வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.டி.டி.சுமணசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி உதவிப்பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன், கரவெட்டி கமநல சேவை நிலைய செயலாளர் விசாலாட்சிதன பாலசிங்கம், நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெ.எம். டபிள்யூ. ஜெ. கங்கார, குஞ்சர்கடை இராணுவ முகாம் லெப்.கேணல் பி.எஸ். புத்ததாக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்ட விரிவாக்கற்கிளை சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (116,18)

# பருத்தித்துறை-தம்பசிட்டி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - தம்பசிட்டி வீதி நீண்டகாலமாக புனரமைப்புக்கு உட்படுத்தப்படாமல் மிக மோசமாக சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிக்கு காபற் போடுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தெரிவிக்கப்பட்ட நிலையில், 3 மாதங்களாகியும் அதற்கான எவ்வித வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிப்பகுதியில் 3 பிரபல பாடசாலைகள் அமைந்துள்ளதால் நாளாந்தம் மாணவர்கள் உட்பட பலர் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்தநிலையில் புனரமைக்கப்படாதுள்ள இவ்வீதியால் பயணத்தை மேற்கொள்வது பெரும் சிரமமாக உள்ளதாகவும் எனவே இவ்வீதியை விரைந்து புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (109)

# கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சட்டவிரோத மீன் பிடி முறைகளை தடை செய்வது பற்றிய கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கடற்தொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ண கலந்து கொள்ளவுள்ளதால் அனைத்து கடற்தொழிலாளர்கள், கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சமாசத்தலைவர் அறிவித்துள்ளார். (04)

# கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் ஆசிரியர் விடுதி திறந்து வைப்பு

(கற்சிலைமடு)

ஒட்டுசுட்டான் கற்சிலை மடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நீண்டகாலகுறையாக இருந்த ஆசிரியர் விடுதி கடந்த வாரம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

25 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி விடுதியானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கிட்டில் கட்டப்பட்டுள்ளது.

இவ் விடுதிக்கான நிதி ஒதுக்கட்டுக்கான வேண்டு கோளினை விடுத்து இவ் விடுதி அமையக் காரணமாக இருந்த அமைச்சர் ரிசாட் பதியூனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை கடந்த கால இடம்பெயர்வின் பின் மீளவும் ஆரம்பிக்கப்பட்டபின் 20 ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்திலிருந்து சென்று கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த பொழுதும் அவர்கள் தங்குவதற்கு இடவசதியின்றி பாடசாலையின் தாவாரங்களிலேயே அவர்கள் காலநிலை சீராய் இல்லாத காலங்களிலும் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை காணப்பட்டமை இதன் மூலம் ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது.

எனினும் பெண் ஆசிரியர்களுக்கென கட்டப்பட்ட இவ் விடுதியில் இட வசதியின்றி மிகவும் கஷ்டப்பட்ட ஆண் ஆசிரியர்கள் தற்பொழுது தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். பெண் ஆசிரியர்கள் பாடசாலைக்கு அருகில் உள்ள சிறிய வீடுகளில் அயலவர்களுடன் இணைந்து தங்கியிருக்கின்றனர்.

இவர்களுடைய பிரச்சினை தொடர்பாக பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்ட பொழுது, பாடசாலைத் தேவைகரு ஆண் ஆசிரியர்களின் பொருட்கள் வைக்க அனுமதித்த வகுப்பறை தேவையாக உள்ளதால் உடனடியாக விடுதியில் ஆண் ஆசிரியர்கள் தங்க வைக்கப் படுவதாகவும் "யுனிசெப்" நிறுவன திட்டத்தில் பாடசாலை பாரிய அளவில் பௌதிக வளங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அத்திட்டம் அடுத்த வருடம் பூரணமடையும் பொழுது பெண் ஆசிரியர்களுக்கான விடுதி வசதிப் பிரச்சினையும் தீர்க்கப் படும் என தெரிவிக்கப்பட்டுள் ளது. (42)

# கால்நடைகளின் தொல்லை பயிர்ச்செய்கை பாதிப்பு

(சாவகச்சேரி)

சாவக்சேரி பெரும்குளம் கிராம்புவில் வயல்வெளிகளில் கட்டக்காலிகால்நடைகளான ஆடு, மாடு,பன்றி போன்றவைகளின் தொல்லைகள் அதிகரித்து காணப் படுவதால் அதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர் நோக்குவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

தற்போது உப உணவுப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுவரும் நிலையில் உப உணவுப்பயிர்களை இக் கால்நடைகள் நாசம் செய்வதுடன் வற்றாளை,மரவள்ளி போன்ற கிழங்குவகைகளை பன்றிகள் உணவாக உள்கொள்வதால் பயனைப் பெறமுடியதாக நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவற்றை கட்டுப்படுத்தி பயிர்ச்செய்கையை பாதுகாக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிககை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (11)

# ஜெய்ப்பூர் நிறுவனத்தால் நடத்தப்பட்ட இறுதிச்சுற்றுப் பேச்சுப் போட்டிமுடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு கல்வித்திணைக்களத்தின ஒத்துழைப்புடன் வலய ரீதியாக நடத்தப்பட்ட 03 பிரிவுகளைக் கொண்ட இறுதிச் சுற்றுப் பேச்சுப் போட்டி முடிவுகள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வலயரீதியாக முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

யாழ்ப்பாண வலயம், கீழ்ப் பிரிவு.

ப.தர்மிகா(யாழ்.அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை), க.தேவஜெனா(யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி), - க.ரக்ஷிகா (யாழ்.கனகரட்ணம் ம.ம. வி),

மத்தியபிரிவு,

பெனஸ்ரிகா(யாழ்கனகரட்ணம் ம.ம.வி), ம.டினுசியா (யாழ். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை), தே.சுலக்சனா (யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

மேற்பிரிவு,

க.தேவராசா(யாழ்கனகரட்ணம் ம.ம. வி), க.அனிதத்தன் (யாழ். பெரியபுலம் ம.வி)

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 07.07.2012ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

வடமராட்சி வலயம், கீழ்ப் பிரிவு

அ.டென்சன்(மருதங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), சி.வைஸ்ணவி(யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை), ஜெ.யதுர்ஷனா(யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

மத்திய பிரிவு,

அ.லொ.ஜெஸ்ஸி(மருதங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), தி.நிதர்சனா(யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி), கு.டினேக்கா (மருதங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை),

மேற்பிரிவு,

த.கலைவாணி(யாழ்வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கரவெட்டி), த.சிந்துஜா (விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி), நி.விதுஷா (யாழ். வடமராட்சி இந்துக்கல்லூரி)

(தொடரும்)



கட்டைப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலய இரதோற்சவம் அண்மையில் நடைபெற்றபோது அம்பாள் தேரில் ஆரோகணிப்பதையும் அடியார் ஒருவர் தமது நேர்த்திக்கடனாக பறவைக்காவடி எடுப்பதையும் காணலாம். (137)

நல்லவனுக்கு நலம் நடக்கும் என மட்டும் நம்பாது வல்லவனாயும் வாழ்ந்துவிடு பாப்பா - பாரதியார்

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## அகம்பாவமும் அந்தரிப்பும்!

வடக்கிலே ஏ9 நெடுஞ்சாலை துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகிறது. வீதி நெடுகலாக புழுதி பறக்க கனரக வாகனங்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிகின்றன. புதிய மதகுகள் அமைக்கப்பட்டு மின்சார கம்பங்கள் அகட்டி நடப்பட்டு வீதியின் இரு மருங்கிலும் இடம் பிடிக்கப்பட்டு வேலைகள் கடுகதியில் இடம்பெற்று வருகின்றன. வடக்கிற்கான பழைய தொடருந்துப் பாதை இருந்த இடம் மீண்டும் கிளறி எடுக்கப்பட்டு புதிய பாதைக்கான தயார்படுத்தல்கள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது.

புதிய தனியார் வங்கிகள், அரச பணிமனைகள், என புதிதாக நவீன கட்டிட தொகுதிகள் திடீர் திடீரென எழுந்து வருகின்றன. தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஆங்காங்கே வானத்தை நோக்கி வளர்ந்துள்ளன. இவற்றிற்கு தகுந்தாற்போல தனியார் கடைகளின் புதிதாக வரையப்பட்ட பெயர்ப்பலகைகள் வர்ண ஜாலம் காட்டி நிற்கின்றன. இதற்கும் மேலாக இராணுவ பிரசன்னத்தின் விகிதம் கூட குறைந்திருக்கிறது...

இது வடக்கிற்கு "விசிற்" வந்துவிட்டுச் சென்ற புலம்பெயர் தமிழர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து நடத்தும் இணையத்தளம் ஒன்றில் எழுதியிருக்கும் வருணனை. மறைக்க முடியாத இவ்வளவையும் எழுதிவிட்டு, அவர் கடைசியில் சொல்லியிருக்கும் "கொமென்ற்"தான், நம்மவர்களால் இப்போது கூட எங்களிடமிருக்கும் அபத்தத்தை விளங்க முடியாதிருக்கும் அந்த உலக மகா குசும்பு: "எல்லாம் வெளிநாடுகளில இருக்கும் எங்கட ஆக்களின்ர அயராத உழைப்பால தான் இவங்கள் இந்தளவுக் கெண்டாலும் செய்யிறாங்கள்" என்றார் முதியவர் ஒருவர், என்று முத்தாய்ப்பு வைக்கிறார் அந்த வருணனைக்கு.

அதாவது ஜெனீவா மாநாடு, ஜனாதிபதியின் லண்டன் விஜயங்களின் போதெல்லாம் ஆர்ப்பாட்டங்களை நடத்தி, இலங்கை அரசாங்கத்தை ஒரு மிரட்டு மிரட்டி விட்டார்களாம். அதன்விளைவாக சர்வதேசத்திற்குக் காட்டுவதற்காகவே இலங்கை அரசு வடக்கில் இவைகளைச் செய்துவருகிறதாம்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் போதே, முன்னர் கொழும்புத் தமிழர்கள் தனியே சந்தித்தால் 'கதைத்து'க்கொண்டிருந்த சங்கதிதான் ஞாபகத்தில் வந்தது. "எங்கட பெடியள் இவைக்குக் குடுக்கிற கிலியாலதான் கொஞ்சமெண்டாலும் இங்க நாங்கள் நடப்பாத் திரியக் கூடியதாயிருக்கு. இல்லையெண்டால் சிங்களவன் இந்தளவுக்கும் நம்மை விடமாட்டான்..." இப்படித்தான் நாம் அப்போதும் கதைத்துக் கொண்டிருந்தோம்.

"அடுத்தகட்ட தீர்மானங்கள் தம்மை நோக்கி வருவதற்கு முன்னர் சிறீலங்கா அரசு பாரிய முன்னெடுப்புகளை செய்து வருகிறது. பொருளாதார நிலையில் தமிழ் மக்கள் யுத்தத்திற்கு முன்னய காலகட்டத்திலும் பார்க்க அரச கட்டுப்பாட்டின் கீழ் அதிவேகமாக முன்னேறி வருகின்றார்கள் என்று அனைத்துலகத்திற்கு போலியான தோற்றத்தைக் காட்டுவதிலே அரசு மிகக் கவனம் செலுத்துகிறது" என்று இப்போதும் நம் புலம்பெயர் கட்டுரையாளர் நாம் 'வீரமுடன் முன்னேறி வருவதை' எழுதுகிறார்.

நாம் ஆயுதங்களின் மூலமோ அல்லது இந்தியா மூலமோ அமெரிக்கா மூலமோ இலங்கை அரசைப் பயமுறுத்தித்தான் எமக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்வோம். அரசுடன் அல்லது இந்த நாட்டில் சேர்ந்தொன்றாய் வாழப்போகும் பெரும்பான்மை சமூகத்துடன் இணக்கம் கண்டோ பேச்சு நடத்தியோ எதையும் பெற மாட்டோம். அது நம் தமிழ் அகம்பாவத்திற்கு இழுக்காகிவிடும் என்ற நினைப்பிலேயே இன்னும் எவ்வளவு காலத்திற்கு அடிப்படை வசதிகளின்றி அல்லலுகளுடனேயே எமது மக்களை அந்தரிக்க விடப்போகிறார்கள்?

- ஆசிரியர்

# முறைகேடுகளின் பயமே அகதிகளின் வருகைக்கு காரணம்

சொந்த நாட்டில் எதிர் கொள்ளும் துன்புறுத்தல்களே அவுஸ்ரேலிய கடற்கரைகளுக்கு அகதிகளின் தொடர்ச்சியான வருகையை தூண்டி இருப்பதாக, அகதிகளும் ஆதரவாளர்களும் தெரிவிப்பதாக 'த அவுஸ்ரேலியன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த யூன் 24 ஆம் திகதியிலிருந்து 9 நாட்களுக்குள் 6 வள்ளங்களில், இரண்டு பதின்ம வயதினரை உள்ளடக்கிய முழுதாக 353 ஆண்களைக் கொண்ட குழு கிறிஸ்மஸ் மற்றும் கோகோஸ் தீவுகளை வந்தடைந்துள்ளது. 6 வள்ளங்களில் புறப்பட்ட அனைவரும் இலங்கையிலிருந்து நேரடியாகப் புறப்பட்டு, இந்து சமுத்திரத்தின் நீண்ட கடல் வழிப் பயணத்தை மேற்கொண்டு, அவுஸ்ரேலிய கடற்பகுதிக்கு வந்துள்ளனர்.

இது இரண்டு முதல் மூன்று வாரங்கள் வரை எடுக்கிறது. இரண்டாவதாக கடந்த புதன்கிழமை மூழ்கிய கப்பலில் யாரும் தவறவிடப்படவில்லை என்ற அவுஸ்ரேலிய தென்பிராந்திய பொலிஸாரின் அறிவிப்பினை தொடர்ந்து, அதிகளவான படகுகள் வருகை தருகின்றன.

மீட்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஒரு சடலத்தை விட மேலதிகமாக மூன்று சடலங்கள் இதுவரை மீட்கப்படவில்லை என்றே முதலில் கருதப்பட்டது.

காப்பாற்றப்பட்டவர்களுடனான நேர்முகத்தின் மூலம் அது தவறு என்றும் யாரும் காணாமல் போகவில்லை என்றும் அவுஸ்ரேலிய தென் பிராந்திய பொலிஸாரின் அதிகாரி 'நெவில் டோக்கறி' தெரிவித்தார். முடிவில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஒன்றும் காப்பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 130 ஆகும். வயது வந்த ஆணின் சடலத்தை காப் பாற்றபட்டவர்களால் அடையாளம் காணமுடியவில்லை. ஏனெனில் அவர் யாரென எவருக்கும் தெரியாதென பொலிஸ் அதிகாரி டோக்கறி தெரிவித்தார். பதிலாக பொறியியல் பதிவுகள் பயன்படுத்தப்படலாம்.

முதலாவதாக யூன் 21இல் மூழ்கிய படகிலிருந்து மீட்கப்பட்ட 15 சடலங்களில் இரண்டு மட்டுமே இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. முதலாவது படகிலிருந்து காணாமல் போன குடும்பங்கள் பற்றிய தகவல்களைப் பெறுவது கடினமாகவே உள்ளது.

அண்மையாக படகுகளில் வந்த 1475 புகலிடக் கோரிக்கையாளர்கள் கிறிஸ்மஸ் தீவின் பல இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டு வருகிறார்கள். 2009 ஆம் ஆண்டு இந்தோனேஷியாவின் மெராக் துறைமுகத்தில் 6 மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டிருந்த படகிலிருந்து தற்போது அவுஸ்ரேலியாவில் மீள்குடியேற்றத்திற்காக காத்திருக்கும் தமிழ் அகதி ஒருவர் இலங்கையிருந்து இன்னும் பலர் ஆபத்தான பயணத்தினை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

இந்தோனேஷியாவின் மேடானிலிருந்து பேசிய, தன்னை நிமல் என மட்டும் தெரியப்படுத்தும் அவர் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழர் இன்னும் துன்புறுத்தப்படுவதாக தெரிவித்தார். 'அங்கே அதிக வன்முறைகள் இருக்கின்றன. பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதன் காரணமாக தான் நாட்டை விட்டு வெளியேறி ஆபத்துக்கள்ளை எதிர்நோக்க வேண்டி உள்ளது என நிமல் தெரிவித்தார்.

அகதி ஆதரவாளர் 'ஈயன் ரிண்டெளல்' அதனை ஏற்றுகொண்டு, இலங்கை அரசாங்கம் தமிழர்களை துன்புறுத்துவதால் மேலும் இலங்கையிலிருந்து படகுகள் வரலாம் எனவும் தெரிவித்தார். இந்த வருடம் 1344 இலங்கையர்கள் படகுகள் மூலம் அடைக்கலம் தேடி அவுஸ்ரேலியாவை வந்தடைந்திருக்கிறார்கள். ஆனால் 2212 ஆன ஆப்கானியஸ்தர்கள் இவர்களை விஞ்சியிருக்கின்றார்கள் என 'த அவுஸ்ரேலியன்' பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போலிப் பட்டங்களை வழங்கி பணம் பெற்றவர் கைது

போலியான முறையில் முக்கிய பிரமுகர்களின் கையெழுத்துக்களை இட்டு பெறுமதியான பட்டங்ளை பல்வேறு அமைப்புகளின் பெயரில் வழங்கி இலட்சக்கணக்கில் பணம் பெற்றுவந்த கோடீஸ்வரரை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார நேற்றுக் காலை கைது செய்துள்ளதாக அம்பிட்டிய சுமண ரத்னதேரர் தெரிவித்தார்.

காலியை சேர்ந்த குறித்த நபர் பயணம் செய்தகாரிலிருந்து சமஸ்த லங்கா சம்மான உபாதி சரசவிய - சமஸ்த லங்கா நெண குண பதனம என்ற அமைப்பின் பெயரில் அரச இலட்சினை பொறிக்கப்பட்ட 300 போலியான நற்சாட்சிப் பத்திரங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு - மங்களராம ரஜ மஹா விகாரையின் விகாராதிபதியும் மட்டக்களப்பு - அம்பாறை வட்ட பிரதி பிரதம சங்கநாயக்கருமான அம்பிட்டிய சுமணரத்ன தேரரிடம் நற்சாட்சிப் பத்திரங்களில் கையெழுத்து பெற நேற்றுக் காலை வந்த போதே குறித்த நபரை விகாரையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

பளைப் பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றில் பாதுகாப்பாக புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை வெடிபொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவற்றில் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், ரீ56 ரக துப்பாக்கி ரவைகள் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டது. அத்துடன் விமானங்களை அழிக்கவல்ல அதிசக்தி கொண்ட 75, 000 குண்டுகளும், ஒரு இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரம் எம்.ஜி.எம்.ஜி குண்டுகள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெடிபொருட்கள் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# தமிழக புழல் சிறைக்கு எதிரில் இலங்கை பெண் தீக்குளிக்க முயற்சி

தமிழகத்தின் புழல் சிறைக்கு எதிரில் இலங்கை புகலிடப் பெண்ணொருவர் தனது மூன்று பிள்ளைகளுடன் தீக்குளிக்க முயற்சித்துள்ளார். காவாங்கரை பிரதேசத்தில் உள்ள புகலிட முகாமில் இருந்த 6 அகதிகளை புழல பொலிஸார் கைதுசெய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அந்த பெண் தீக்குளிக்க முயற்சித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தப் பெண், பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்ற புகலிடக்காரர் ஒருவரின் மனைவியாவார்.

தனது கணவரை கைது செய்து அழைத்து வந்தமை குறித்து, அந்த பெண் பொலிஸாரிடம் விசாரித்தபோது, தாம் அவ்வாறு எவரையும் அழைத்து செல்லவில்லை என தெரிவித்ததை அடுத்தே அவர் தீக்குளிக்க முயற்சித்துள்ளதாக கூறப்படுகிறது. பெண் தற்கொலை செய்து கொள்ள முயற்சி மேற்கொண்டதை அடுத்து, தாம் 6 பேரை கைது செய்துள்ளதாக புழல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட 6 இளைஞர்களின் பெயர்கள் வருமாறு,

சுரேஷ்குமார் - 3 பெண் குழநதைகளின் தந்தை, ரமேஷ் - திருமணமாகாதவர். உமேஸ் - திருமண்மாகாதவர், சுயா - திருமணமாகாதவர், சுதர்சன் - திருமணமானவர். மனைவியும் ஒரு மகளும் இலங்கையில் உள்ளனர். சுரேஷ் - திருமணமாகாதவர்

விசாரணைகளின் பின்னர், கைதுசெய்யப்பட்ட ஆறு பேரில் சுரேஷ்குமார், உமேஸ், சுயா, சுரேஷ் ஆகிய நால்வர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இரண்டு பேரை விடுதலை செய்யமுடியாது என பொலிஸார் கூறியுள்ளனர்.

தமிழக முகாம்களில் உள்ள புகலிடக்காரர்கள் கேரளா ஊடாக அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பி வைப்பதற்காக, கைதுசெய்யப்பட்ட இரண்டு பேர்களான ரமேஷ், சுதர்சன் ஏனையவர்களிடம் பணம் பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாகவும் அவர்களும் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் பொலிஸார தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள இரண்டு பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளது.

# தமிழினியின் கதை

- டி.பி.எஸ்.ஜெயராஜ்

சுப்பிரமணியம் சிவகாமி என்கிற தமிழினி, வெலிக்கடையிலுள்ள கொழும்பு காவல் சிறைச்சாலை (சி.ஆர்.பி) யிலிருந்து வவுனியா பூந்தோட்டத்திலுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் மறுவாழ்வு மையத்துக்கு (பி.ஏ.ஆர்.சி) ஜூன் 26இல் மாற்றம் செய்யப்பட்டார். கொழும்பு தலைமை நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி ஜூன் 22 முதல் நடைமுறையாகும் வண்ணம் விடுத்த கட்டளைப் பிரகாரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் (எல்.ரீ.ரீ.ஈ) முன்னாள் பெண் தலைமை அரசியல் பொறுப்பாளரான தமிழினி இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டார்.

பூந்தோட்டத்திலுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் மறுவாழ்வு மையத்தில் (பி.ஏ.ஆர்.சி) ஒரு குறிப்பிட்ட காலம் புனர்வாழ்வு பெற்ற பின்னர் இறுதியில் விடுதலையாகப் போகும் தமிழினியின் இந்த மாற்றல் உத்தரவு ஒரு முன்னோடியான செயற்பாடாக கருதப்படுகிறது.

எல்.ரீ.ரீ.ஈ யில் கேணல் தரத்திலுள்ள பதவி வகித்தவரான 40வயது நிரம்பிய தமிழினி, தற்போது கைதாகி காவலிலுள்ள புலிகள் அங்கத்தினர்களில் மிகவும் மூத்த பெண் அங்கத்தவராவார். தமிழினி, எல்.ரீ.ரீ.ஈயின் மகளிரணி அரசியற் பொறுப்பாளராகவும் மற்றும் புலிகளின் ஆண் அரசியல் பொறுப்பாளராக பதவி வகித்த பாலசிங்கம் மகேந்திரன் என்கிற நடேசனின் பெண் உதவியாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

எல்.ரீ.ரீ.ஈ யின் இறுதிக்கட்டப் போரில், கந்தையா ஞானபூரணி அல்லது விதுஷா என்று அழைக்கப்படும் மாலதி படையணியின் கட்டளைத் தளபதி, மற்றும் சோதியா படையணியின் கட்டளைத் தளபதியான துர்கா என்கிற கலைச்செல்வி பொன்னுத்துரை, என்பவர்களுடன் தமிழினியும் சேர்ந்து எல்.ரீ.ரீ.ஈயின் சிறந்த மூன்று முதல்தர பெண் அங்கத்தவர்களாக விளங்கினார்கள். அதே வேளை விதுஷா 1986இலும், துர்கா 1989இலும், தமிழினி 1991இலும் எல்.ரீ.ரீ.ஈ யில் இணைந்திருந்தார்கள்.


**பூந்தோட்டத்திலுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் மறுவாழ்வு மையத்தில் (பி.ஏ.ஆர்.சி) ஒரு குறிப்பிட்ட காலம் புனர்வாழ்வு பெற்றபின்னர் இறுதியில் விடுதலையாகப் போகும் தமிழினியின் இந்த மாற்றல் உத்தரவு ஒரு முன்னோடியான செயற்பாடாக கருதப்படுகிறது. இது, தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் விடுதலை பற்றிய முட்கள் நிறைந்த சிக்கலான விடயம் சம்பந்தமாக அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க நெகிழ்வான போக்கினை வெளிப்படுத்துவதற்கான அறிகுறியாகவே உள்ளது.**



பூந்தோட்டத்திலுள்ள மையத்துக்கு மாற்றல் பெறும் தமிழினிதான் முழு சுதந்திரம் பெற்றவர்களில் முன்னோடியாகத் திகழ்கிறார் எனக் கருதப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பூந்தோட்டத்தில், புனர்வாழ்வு பயிற்சி பெறுவதை அவர் எதிர்நோக்கியுள்ளார். அதன்பின்னர் முன்னாள் சுதந்திர பறவைகள் அமைப்பின் அங்கத்தவரான தமிழினி ஒரு சுதந்திரப் பறவையாக விடுதலையாவதற்கு சாத்தியம் உள்ளது.

தமிழினியின் கொழும்பிலிருந்து வவுனியாவுக்கான மாற்றல் உத்தரவு மற்றும் அவர் எதிர்நோக்கியுள்ள விடுதலை என்பன, தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் விடுதலை பற்றிய முட்கள் நிறைந்த சிக்கலான விடயம் சம்பந்தமாக அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்க நெகிழ்வான போக்கினை இந்தக் கட்டத்தில் வெளிப்படுத்துவதற்கான அறிகுறியாகவே உள்ளது. மிகவும் முக்கியமாக இந்த நிகழ்வுகள் இனிவரும் நாட்களில் எல்.ரீ.ரீ.ஈ யுடன் தொடர்புள்ளதற்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மற்றும் பலபேர்களின் விடுதலை சம்பந்தமாக நம்பிக்கை கொள்வதை எடுத்துரைக்கும் வாய்ப்பு உள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ யில் தமிழினி வகித்த பங்கு, அவரது கைது, தடுத்து வைப்பு, அவரது விடுதலைக்கான எதிர்பார்ப்புடனான மாற்றல் உத்தரவு என்பன, முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ தொண்டர்கள் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ யுடன் தொடர்புள்ளவர்களது தொடரும் தடுப்புக் காவல், மற்றும் சிறைவாசம் போன்ற அதி முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களின் தற்போதைய விவகாரங்களின் நிலை யில் சுவாரஷ்யமான ஒரு நுண்ணறிவுள்ள விடயம் இருப்பதை வெளிப்படுத்துகிறது. தமிழினியின் நிலை, தற்போது நிலவும்



சூழ்நிலையின் மனிதாபிமான பரிமாணங்களை எடுத்து விளக்குகிறது. அது தீர்க்கப்பட்டுவருவதிலுள்ள சாதகமானநிலை, உராய்வுள்ள பகுதிகளில் மோதலுக்குப் பதிலாக ஒரு ஒத்துழைப்பு உணர்வு தோன்றியுள்ளதை அடையாளப் படுத்துகிறது.

தமிழினியின் இயற்பெயர் சுப்பிரமணியம் சிவகாமி என்பதாகும். அவர் 1972 ஏப்ரல் 23இல் பரந்தனில் பிறந்தார். அவரது குடும்பம் தனது வேர்களை யாழ்ப்பாணத்தில் கொண்டிருந்தாலும், அது கிளிநொச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடையில் உள்ள பரந்தனுக்கு இடம் பெயர்ந்தது. பின்னர் அவரது குடும்பம் கிளிநொச்சி, உதய நகரில், கனகபுரம் வீதிக்கு அருகிலுள்ள ஒரு வீட்டுக்கு நகர்ந்தது. அவரது குடும்பத்தின் ஏனைய அங்கத்தினர்கள் அவரது தயாரும் மற்றும் இரண்டு சகோதரிகளும் ஆவர், சகோதரிகள் இருவரும் திருமணம் செய்திருந்தனர். தாயும் ஒரு சகோதரியும் கிளிநொச்சியில் வசிக்கும் அதேவேளை மற்றைய சகோதரி நோர்வேயில் வசிக்கிறார். அவருடைய மற்றொரு சகோதரியும் எல்.ரீ.ரீ.ஈயில் அங்கத்தவராகவிருந்து செப்டம்பர் 1998இல் பரந்தனில் நடைபெற்ற 'ஒப்பறேசன் சத்ஜய - 2' போரின்போது கொல்லப்பட்டார்.

சிவகாமி சுப்பிரமணியம் பரந்தன் இந்துக் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி பயின்றார். அதன் பின் தனது க.பொ.த உயர்தரக் கல்விக்காக கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் இணைந்தார். பாடசாலையில் புலிகளின் ஆட்சேர்ப்பாளர்களினால் நிகழ்த்தப்பட்ட பேச்சுக்களினால் கவரப்பட்டு அவர் எல்.ரீ.ரீ.ஈயின் மீது மோகம் கொண்டார். 1991 ஜுலை 27இல் அவர் முறைப்படி எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தில் சேர்ந்து, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த எல்.ரீ.ரீ.ஈயின் இரண்டு இராணுவ தளங்களான கிளாலி மற்றும் நீர்வேலியில் அவர் தனது இராணுவ பயிற்சியினை மேற்கொண்டார். தமிழினி என்கிற இயக்கப் பெயரை சிவகாமி ஏற்றுக் கொண்டார்.குடாநாட்டின் வலிகாமப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் அவர் தங்கியிருந்தார். பின்னர் அவர் கிளிநொச்சி மற்றும் கிளாலி பிரதேசங்களுக்கு நகர்ந்தார்.

ஆரம்பத்தில் தமிழினி எல்.ரீ.ரீ.ஈ யின் போராட்ட அமைப்புகளின் ஒரு அங்கமாகவிருந்து, அநேகமான சிறு சிறு சண்டைகளில் பங்குபற்றியிருந்தார். பெரிய போர் ஒன்றில் அவரது அனுபவம் இடம் பெற்றது, செப்ரம்பர் 1993இல் இராணுவம் ஆனையிறவில் இருந்துமுன்னேறி கிளாலியை கைப்பற்ற முனைந்த 'ஒப்பிறேசன் யாழ்தேவி' நடவடிக்கையின் போது தான். எல்.ரீ.ரீ.ஈ, நவம்பர் 1993இல் பூநகரி மற்றும் நாகதேவன்துறை முகாம்களை தாக்குவதற்காக 'ஒப்பறேசன் தவளை' என்கிற குறியீட்டுப் பெயருடன் நீரிலும் நிலத்திலும் தாக்குதல் நடத்திய போரிலும் அவர் பங்குபற்றியிருந்தார்.

தமிழினியுடன் ஒரு கலந்துரையாடல் நடத்திய எல்.ரீ.ரீ.ஈ யின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அவரது மனைவி அடேல் பாலசிங்கம் ஆகியோர், தமிழினியால் கவரப்பட்டு, அரசியல் பிரிவுக்கு அவரை மாற்றம் செய்வித்தனர். பெண்களால் நடத்தப்படும் ஒரு கயிற்றுத் தொழிற்சாலைக்கும் மற்றும் ஒரு பண்ணைக்கும் தமிழினி பொறுப்பாக நியமிக்கப்பட்டார். எல்.ரீ.ரீ.ஈயின் மகளிர் இதழான சுதந்திரப் பறவைகளின் ஆசிரியர் குழாம் அங்கத்தினர்களில் ஒருவராகவும் அவர் நியமிக்கப்பட்டார். அடேல் பாலசிங்கத்தினால் பெரிதும் செல்வாக்கு செலுத்தப்பட்ட தமிழினி ஒரு தீவிர பெண்ணியவாதியாக மாறினார்.

1995 - 96இல் இராணுவத்தால் நடத்தப்பட்ட 'ஒப்பறேசன் ரிவிரச' வின் வெற்றியை தொடர்ந்து எல்.ரீ.ரீ.ஈ முழுதாக வன்னிக்கு இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது. தமிழினிதொடர்ந்தும் அரசியல் பிரிவிலேயே கடமையாற்றினார். ஆனால் இராணுவம் வன்னியை திரும்ப கைப்பற்றுவதற்காக 1997 - 98 ல் 'ஒப்பறேசன் ஜயசிக்குரு' நடவடிக்கையை ஆரம்பித்தபோது, தமிழினி படைப் பிரிவில் இணையும்படி கட்டாயப் படுத்தப்பட்டார். அவர் மாங்குளம் பகுதியில் பணியாற்றி மிகவும் சிரமங்களை அனுபவித்தார்.

தமிழினி, பாலசிங்கம் மற்றும் எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் தலைவரான சுப்பையா பரமு தமிழ்செல்வன் ஆகியோரிடையே நல்ல அபிப்பிராயத்தை பெற்றிருந்தார். அது அவரை உயர் பதவிகளில் வேகமாக உயர்த்தி இறுதியில் ஜுன் 2000ஆம் ஆண்டளவில் அவரை பெண்கள் பிரிவின் அரசியல் தலைவராக மாற்றியது. இதை தவிர இராணுவம் 2001இல் ஆனையிறவை திரும்ப கைப்பற்றுவதற்காக 'ஒப்பறேசன் அக்கினிகில்ல' நடவடிக்கையை தொடுத்தபோது தமிழினி திரும்பவும் போராட்டத்தில் ஈடுபட வேண்டியதாயிற்று.

ஒஸ்லோ அனுசரணையுடனான யுத்த நிறுத்தம் 2002 பெப்ரவரியில் ஏற்பட்ட பின், எல்.ரீ.ரீ.ஈ நிரந்தரமான ஒரு அரசியல் செயலகத்தை கிளிநொச்சியில் ஸ்தாபித்தது. எல்.ரீ.ரீ.ஈ யின் கட்டமைப்புக்குள்ளேயே சமத்துவத்துக்காக போராடி அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருந்த தைரியமுள்ள பெண்ணியவாதியாக தமிழினி திகழ்ந்தார். முன்னர் பெண்களின் அரசியற் பிரிவு, பிரதான அரசியற் பிரிவின் ஒரு பகுதியாகவே நடத்தப்பட்டு வந்தது. இப்போது தமிழினி சுதந்திரமாக கடமையாற்றுவதற்காக போராடி அதைப் பெற்றிருந்தார். அவர் மேலும் தனது பதவிக்கான அந்தஸ்து அடையாளத்தையும் பெற்றிருந்தார். ஒரு டபிள் காப் வாகனம் அதை தொடரும் வாகன அணி மற்றும் மெய்ப்பாதுகாவலர்கள் என அந்த அந்தஸ்து அடையாளம் கொண்டிருந்தது.

யுத்த நிறுத்த காலமும் ஒரு வழியை விட பல வழிகளிலும் தனது எல்லையை விரிவு படுத்த தமிழினிக்கு பெரிதும் உதவியாக இருந்தது. கொழும்பில் நடைபெறும் பெண்ணுரிமை சம்பந்தமான கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களில் கலந்து கொள்வதற்காக அவர் எல்.ரீ.ரீ.ஈ பெண் அங்கத்தவர்களை கொண்ட ஒரு குழுவை வழி நடத்தி வந்தார். 2003 மற்றும் 2005இல் ஐரோப்பாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட தூதுக்குழுக்களிலும் அவர் பங்கேற்றார். ஐரோப்பாவில் இருந்த வேளையில் தமிழினி அநேக புலம்பெயர் குழுக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார். அநேகமான கூட்டங்களில் அவர் உரையாற்றி பார்வையாளர்களிடத்தில் பயங்கரமான தாக்கத்தையும் ஏற்படுத்தியிருந்தார்.

இந்தக் கட்டத்தில்தான் தமிழினிக்கும் ஒரு முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவருக்கும், அவரை நான் 'கே' என்று இங்கு குறிப்பிடுகிறேன், இடையில் ஒருவகையான காதல் உணர்வு அரும்புவிட்டது. முன்னர் எல்.ரீ.ரீ.ஈ தலை வர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆண் அங்கத்தவர்களையும் மற்றும் பெண் அங்கத்தவர்களையும் சோடி சேர்த்து அவர்கள் திருமணம் செய்ய அனுமதித்த போது, தமிழினி திருமணம் செய்ய மறுத்திருந்தார். இப்போது அவரது வெளிநாட்டு சொற்பகாலவாசத்தின் போது, தற்போது ஐரோப்பாவில் குடியேறியிருக்கும் முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவரான 'கே' நெருங்கிப் பழக நேர்ந்தது. அவர்களிடையே ஒரு பரஸ்பர கவர்ச்சி மற்றும் குறைந்தது, ஒரு வகையான கர்தல் உணர்வு ஏற்பட்டது. 'கே' யும் வன்னிக்கு வந்து கிளிநொச்சியில் சிறிதளவு காலம் தங்கியிருந்தார். அவர்கள் இன்னமும் திருமணம் செய்து கொள்ள்வில்லை.

(தொடரும்)

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு பெற்றோரின் கவனயீனமே காரணம்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த



இலங்கையில் சிறார்கள் துஷ்பிரயோகம் மற்றும் வல்லுறவுக்கு உள்ளாவதற்கு பெற்றோரின் கவனயீனமே பிரதான காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெரும்பாலான சிறார்கள் பலவித இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாக சிறார் மற்றும் பெண்கள் விடயங்கள் தொடர்பான அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

எனினும் சிறுவர்களுக்கான பாதுகாப்பை அரசாங்கத்தால் மாத்திரம் வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் இதுகுறித்து கருத்து தெரிவிக்கையில்;

இதற்கு பெற்றோரின் பங்களிப்பு மிக அத்தியாவசிமாக இருக்கின்றது. சிறார்கள் நாளாந்தம் வன்முறைகளுக்கு உட்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

சிலர் தமது பிள்ளைகளை வேறு ஒருவரின் பாதுகாப்பில் விட்டு வைத்து தமது பணிகளை செய்வதற்காக சென்றுவிடுகின்றனர். இவ்வாறு அவர்கள் தம்மை காத்துக் கொள்வதற்காக பிள்ளைகளைப் பலி கொடுக்கிறார்கள்.

இவ்வாறான நிலையில், பிள்ளைகளின் பயணங்கள், செயற்பாடுகள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகளை பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். அரசாங்கம் என்றவகையில் எங்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட வேலைத்திட்டங்களையே முன்னெடுக்க முடியும..

ஒவ்வொரு குழந்தையையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் பொறுப்புகளை ஏற்கமுடியாது. அதற்கு பெற்றோரே உரிய முறையில் பங்களிப்பினை செலுத்த வேண்டும். பிள்ளையை பெற்றெடுப்பது மாத்திரம் ஒரு தாயினதும் தந்தையினதும் கடமையல்ல.

சில தாய்மார்களோ, பாதுகாவலர்களோ தாம் தொலைக்காட்சி நாடகத்தை இர்சிப்பதிலேயே குறியாக இருக்கின்றார்கள். தமது பிள்ளைக்கு தேவையானவற்றையும், தேவையற்ற விடயங்களையும் விளக்கப்படுத்துவதற்கு அவர்களுக்கு நேரம் போதாத நிலைமை தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ளது என்றார.

# மின்னல் தாக்கி 5 வீடுகள் சேதம்

(குருநாகல்)

குருநாகல் பிரதேசத்தில் மின்னல் தாக்கியதன் காரணமாக ஐந்து வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இதன்போது காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடுப்பிலி தெரிவித்துள்ளார்.

கம்பளை கதிரான பகுதியை ஊடறுத்து நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்றினால் 16 வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நுவரெலியா பிரதேசத்தை ஊடறுத்து வீசிய கடும் காற்றினால் 10 வீடுகள் சேதமடைந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

# சுவிஸ் வங்கிகளில் இருக்கும் இலங்கையரின் இரகசிய கணக்குகள்



சுவிட்சர்லாந்து வங்கிகளில் இலங்கையர்கள் இரகசிய கணக்குகளை பேணிவருவதாக சுவிஸ் தேசிய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கை அரசாங்கம் அல்லது இலங்கையர்கள் சுமார் 85 மில்லியன் சுவிஸ் பிராங்குகளை இரகசிய கணக்குகளில் வைப்பிலிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைகளுக்கு 44 மில்லியன் பிராங்க் பொறுப்புக்கள் காணப்படுவதாகக்குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் யார் அல்லது எந்த நிறுவனம் வைப்புச் செய்துள்ளது என்பதுபற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

சுவிட்சர்லாந்து சட்டதிட்டங்களின் அடிப்படையில் கணக்கு வைப்பாளர்களின் பெயர்கள் விபரங்கள் வெளியிடப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

2002 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுமார் 200 நாடுகள் சுவிட்சர்லாந்து வங்கிகளில் முதலீடு செய்துள்ள தொகை மற்றும் பொறுப்புத் தொகைகள் ஆகியன பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2002ஆம் ஆண்டில் இலங்கையர்கள் சுவிட்சர்லாந்து வங்கிகளில் 22.9 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் வைப்பிலிட்டதாகவும், 2011 ஆம் ஆண்டில் இந்தத் தொகை 85 மில்லியன் பிராங்குகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையர்கள் முதலீடு செய்யப்பட்ட தொகைகளில் அநேகமானவை சேமிப்புக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

2002 ஆம் ஆண்டில் இலங்கையர்களுக்கு 36.3 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் பொறுப்பு காணப்பட்டதாகவும், 2011 ஆம் ஆண்டில் இந்தத் தொகை 44 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் அரசியல்வாதிகள் தேவையற்ற அச்சம்

(கொழும்பு)



காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் தொடர்பில், இலங்கை அரசியல்வாதிகள் தேவையில்லாத அச்சத்தை கொண்டிருப்பதாக, மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

13ஆம் திருத்தச்சட்டம் அமுலாக்கப்படும் என கடந்த 2008ஆம் ஆண்டு மே மாதம் அரசாங்கம் அறிவித்திருந்தது. எனினும் இன்னும் அது அமுலாக்கப்படவில்லை.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

13ஆம் திருத்தச்சட்டத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகார பகிர்வு தொடர்பில் இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளிடத்தில் தேவை இல்லாத அச்சம் காணப்படுகிறது.

இவ்வாறு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பிராந்திய ரீதியாக பகிர்ந்து கொண்ட பல்வேறு நாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் எந்த நாட்டிலும் இதனால பிரச்சினை ஏற்பட்டதில்லை.

அவ்வாறிருக்கையில், இலங்கையில் இவ்வாறு காணி அதிகாரத்தை பகிர்வதால் என்ன பிரச்சினை வந்துவிடப்போகிறது.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர், நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இணைய வேண்டும்.

இதன் மீது இரா.சம்பந்தனுக்கு நம்பிக்கை இல்லை என்றால், ஒருமுறை வந்து சோதித்து பார்க்குமாறு, தாம் தனிப்பட்ட முறையில் அவரை சந்தித்து கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





**மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில் பேரீச்சம் பழங்கள் பறிக்கும் நிகழ்வை உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்தார். பேரீச்சம் பழங்கள் பறிக்கும் நிகழ்வில் பிரதியமைச்சர்களான விநாயகமூர்த்தி முரளிதரன், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.**

**காத்தான்குடி பிரதான வீதியில் நடப்பட்டுள்ள இப்பேரீச்சம் பழமரங்கள் காய்த்து கனியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

# விபசாரங்களைத் தடுக்க பொலிஸார் கடும் பிரயத்தனம்

(கொள்ளுபிட்டி)

நடமாடும் விபசார நிலையமொன்றை முற்றுகையிடுவதற்காக மாறுவேடத்தில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கையை கடித்ததாக குற்றம்சுமத்தப்பட்ட பெண்ணை ஜூலை 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன உத்தரவிட்டார்.

இந்நிலையத்தை நடத்தியதாகவும் விபசாரத்திற்காக பெண்களை நியமித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபரான இப்பெண், கொள்ளுபிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரின் கையை கடித்தபின் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் அப்பெண்ணையும் இவ்விபசார நடவடிக்கையுடன் தொடர்புடையவராக கூறப்படும் மற்றொரு பெண்ணையும் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். மற்றொரு சந்தேக நபரை கைது செய்வதற்கு விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, விபசார நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் கார் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# சர்வதேச விதி பின்பற்றப்படாது விடின் ஜி.எஸ்.பி. சலுகை இழக்கப்படலாம்

(கொழும்பு)

சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம், கூட்டுப் பேரம்பேசும் சுதந்திரம் என்பவற்றுக்கு சாதகமான தொழில் சட்டங்கள் சுதந்திர வர்த்தக வலயத்தில் காணப்படாதபோதிலும் அமெரிக்கா இலங்கைக்கு ஜி.எஸ்.பி. சலுகையை தொடர்ந்தும் வழங்குவதாக சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுசேவைகள் ஊழியர்கள் சங்கம் கூறியுள்ளது.

இலங்கையில் காணப்படும் மோசமான தொழில சட்டங்கள்பற்றிய உண்மைகள் தெரியவந்தபின் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி:எஸ்.பி: பிளஸ் இலங்கைக்கு மறுக்கப்பட்டது என சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுசேவைகள் ஊழியர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அன்ரன் மாக்கோஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்களில் உள்ள சில பகுதிகளில் தொழிற் சங்கம் அமைக்க, கூட்டங்கள் நடத்த அல்லது தமது உரிமைகளை பெற்றுக்கொள்ள வேலை நிறுத்தம் செய்யும் உரிம்மைகள் ஊழியர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

இது பற்றி நாம் அரசாங்கத்துக்கு முறையிட்டுள்ள போதும் எதுவும் நடக்கவில்லை. ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை கிடைத்த போது முதலாளிமார் பெரும் இலாபமீட்டிய போதும் இதில் சொற்ப நன்மை கூட தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை. இப்போது ஜி.எஸ்.பி. சலுகை இலங்கைக்கு கிடைத்துள்ள போதும் சர்வதேச தொழில் நிறுவனத்தின் ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படாதுவிடின் இலங்கை ஜி.எஸ்.பி சலுகையை இழக்கக் கூடும் என்றார்.

இதேவேளை, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரான காமினி லொக்குகே கருத்து தெரிவிக்கையில்; இலங்கை இந்த சலுகையை இழக்கும் நிலைமையில் இருக்கவில்லை என கூறினார். இலங்கையின் நிலைமையை நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னரே அமெரிக்கா எமக்கு இந்த சலுகையை வழங்கியது என அவர் கூறினார்.

# அடிப்படை வசதிகளின்றிய செம்மலை வைத்தியசாலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை பிரதேச வைத்தியசாலை அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் இயங்கி வருவதால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வைத்தியசாலையில் பகுதிநேர வைத்திய சேவையே நடைபெற்று வருவதுடன், நாளாந்தம் 100 இற்கு மேற்பட்ட வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 20 நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இந்த நிலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு ஏற்ற வகையில் வசதிவாய்ப்புக்கள் எதுவும் இல்லாதுள்ளதாகவும், குறிப்பாக அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளர்களை காவிச் செல்வதற்கு காவு வண்டிகள் மற்றும் மின்சார வசதிகள் இல்லாத நிலையும் காணப்படுகிறது.

மேலும் தாதிய உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. குடும்பநல உத்தியோகத்தர்களே நோயாளர்களுக்கான தேவைகளை செய்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்களுக்கான உரிய விடுதிகள் இல்லாமையால் ஆண், பெண் நோயாளர்கள் வைத்தியசாலை கட்டடப் பகுதியிலேயே தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் வைத்தியர்கள் குறிப்பிட்ட நேரத்தில மட்டுமே சிகிச்சைகளை மேற்கொள்வதால் பொது மக்கள் வேறு வைத்தியசாலையை நாடவேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து உரிய வகையில் சிகிச்சை மேற்கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்களும் நோயாளர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# வடிகால் புனரமைப்பு




வட்டுத்தெற்கு கொட்டிசுட்டி கிராமத்தில் உள்ள வடிகால் புனரமைப்புப் பணிகள் தற்போது மிகவிரைவாக நடைபெற்று வருகின்றது.

மிக நீண்ட காலமாக கவனிப்பார் அற்ற நிலையில் காணப்பட்ட இவ்வடிகால், வேள்ட்விசன் நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மழைகாலம் நெருங்கிக் கொண்டிருப்பதால் இதன் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருவதுடன் இன்னும் சில நாட்களுக்குள் புனரமைப்பு பணிகள் நிறைவடையும் என தெரிவிக்கப்படுகிறது.

## பரமர் சங்கமம்



"புதியன புகுதலும் பழைய கழிதலும் வழுவன கால நியதி" என்பது முதுமொழி. காலத்துக்குக் காலம் புதியன தோன்றுவதைக் காண்கின்றோம். அதில் நல்லவையும் உண்டு; கெட்டவையும் உண்டு.

நல்லவை நின்று நிலைக்கும் கெட்டவை சோடாப் போத்தல் காஸ்போல வந்த வேகத்தில் மறைந்து விடும். இதில் காலத்தால் பழமையான் சில பத்திருபது வருடங்களின் பின்பாக தோன்றும் போது புதுமையாக அமையும்.

அதாவது இருபது வயதுக்குட்பட்ட இளசுகளுக்கு அது புதுமையாகத்தானே இருக்கும். எனக்கு இப்ப அறுபத்தெட்டு வயது தொடங்கி விட்டது. இதுவரை நானறிந்திராத புதுச் செயற்பாடொன்று கடந்த 20 ஆம் திகதி நடந்தேறி உள்ளது.

தெல்லிப்பளை கலை இலக்கியக் களம் அமைப்பினர் ஜூலை மாதத்தல் வெள்ளி விழாவினைக் கொண்டாட இருக்கின்றனர். அதனை முன்னிட்டு மாணவர் மற்றும் பலரும் கலந்து கொள்ளும் திறந்த போட்டியாக சிறுகதைப் போட்டி ஒன்றினை நடத்தினர்.

இதுவரை காலமும் பிரதிகளாகக் கோரப்பட்டு நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டி ஏலவே அவர்களால் கொடுக்கப்பட்டிருந்த மீள் குடியேற்றத்தை மையமாக வைத்து மூன்று மணி நேரத்துக்குள் நேரடியாக எழுதிச் சமர்ப்பிக்க வேண்டும்.

இதுதான் அந்தப் புதிய முறை. இதுகாலம் வரை நேரடியாக கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பொழுதே முதன் முதலாக சிறுகதைப் போட்டி நேரடியாக நடத்தப்பட்டுள்ளது.

அதுவும் யாழ்.இராமநாதன் கல்லூரி, கொழும்பு தமிழ்ச் சங்கம், நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்துக் கல்லூரி மண்டபங்களில் ஒரே நாளில் நடத்தப்பட்டிருக்கின்றன.

இதில் எழுதிக் கொடுத்த பிரதிகள் திரும்ப அந்தந்தப் படைப்பாளிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்பது முக்கிய மான் விடயம். அது போட்டியாளர்களுடன் பிரஸ்தாபிக்கப்பட்டது. போட்டி முடிவுகள் வெளி வந்த பின்பாக பிரதிகள் அவரவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு நல்லூர் ஆதீன மண்டபத்தில் இந்து சமயப் பேரவையால் நடத்தப்பட்ட ஆறுமுகநாவலர் நினைவு நேரடியாகக் கவிதை எழுதும் போட்டிக்கு எழுதப்பட்ட கவிதைப் பிரதிகள் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை.

பத்து மரபுக் கவிதை இலக்கண விதிமுறையில் ஒவ்வொருவராலும் ஒவ்வொன்றிலும் பத்துப் பத்து நான்கு வரிக் கவிதைகளாக எழுதி கையளிக்கப்பட்டிருந்தது. இதுவென்ன பரீட்சைக்கான கேள்விப் பேப்பர்களா விட்டுவிட?

ஒவ்வொன்றும் அந்ததந்தப் படைப்பாளிகளால் படைக்கப்பட்டு ஆவணப்படுத்தும் நூல்களில் சேர்க்கப்பட வேண்டிய பனுவல்களல்லவா? அவற்றின் பெறுமதியை மதிக்காதவர்களால் இத்தகைய போட்டிகள் நடத்தப்படுவதைக் கண்டிக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் இந்து சமயப் பேரவை செய்த பிழையை தெல்லிப்பளை கலை இலக்கியக் களம் செய்யக் கூடாது. அத்தோடு பேரவை அன்று நடத்திய போட்டிகளின் முடிவை வெளிப்படுத்தாமலும் பரிசளிப்பை நடத்தாமலும் இருந்து வருவது சுட்டிக் காட்டத் தக்கது.

தற்பொழுது டென்மார்க்கில் இருக்கும் கோகிலா மகேந்திரன் ஒரு படைப்பாளி. அவரது நெறியாள்கையில் நடைபெறும் இந்நிகழ்வு எந்தவிதக் குறைபாடுகளும் இல்லாமல் நிறைவு பெறுமென்று நம்பலாந்தான... இல்லையே பின்ன...

# அச்சுவேலி கலை பண்பாட்டு பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கலை பண்பாட்டு பேரவை புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தின் போதே இப்பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதில் நடப்பாண்டுக்கான நிர்வாகசபை தெரிவில் தலைவராக கோப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், உபதலைவராக வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் க.சந்திரபோஸ், இணைச் செயலாளர்களாக கு.கதிரமலைநாதன், பு.சாந்தரூபன், சி.முருகவேள், செல்வி பூ.சனிதா ஆகியோரும் பொருளாளராக கல்வி உத்தியோகத்தர் சு.ஸ்ரீகாந்த் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 8 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் 10 பேர் கொண்ட ஆலோசனைக்குழுவும தெரிவு செய்யப்பட்டது.

அச்சுவேலி பிரதேசத்தின் கலைப்பண்பாட்டு பாரம்பரிய அம்சங்களை பிரதிபலிக்கும் வகையில் பிரதேச செயலர் ம.பிரதீபனின் வழிகாட்டலுக்கு அமைய கலை பண்பாட்டு பெருவிழா நிகழ்வு எதிர்வரும் ஆகஸ்ட் மாத இறுதிப்பகுதியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேரவையின் உபதலைவர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதேச கலைஞர்கள், கல்வியாளர்கள், சமூகப் பெரியோர்கள், வலிகாமம் கிழக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் செல்வி அமிலாசினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொதுக் கூட்டம்

(வவுனியா)

வவுனியா வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டம் வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் அல்காஜ் பி. எஸ். அப்துல்லா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் சமுகமளிக்வுள்ளதனால் வர்த்தக நிலையங்கள் தொடர்பான சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதனால் அனைத்து வர்த்தகர்களையும் சமுகமளிக்கமாறு கோரப்பட்டுள்ளதுடன் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மாத்திரமே சமுகமளிக் முடியுமெனவும் வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (160)

## வசந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்குவேலி வெட்டுக்கட்டைப்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வசந்த உற்சவப் பெருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் தினமும் மாலை 5 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விழாக்கள் நடைபெறுவதுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று நிறைவு பெறவுள்ளது.

## முரசின் இன்றைய பலன்


(04.07.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 20 ஆம் திகதி. பிரதமை
முன்னிரவு 11.18 வரை. நட்சத்திரம் பூராடம். பிற்பகல் 3.58 வரை. அமிர்தயோகம்.
இராகுகாலம் 11.57 - 1.27 வரை. சுபநேரம் 04.27 - 05.57 வரை.
எமகண்டம் 07.27 - 08.57 வரை. குளிகைகாலம் 10.27 - 11.57 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கடவுள் பக்தி, வீண்குழப்ப நிலை, உடலில் தளர்ச்சி, சகோதரர் எதிர்ப்பு. |
| ரிஷபம் | நிதானம் தேவை, புத்திரபாக்கியம், வழக்குகள் விலகும், எதிர்ப்புகள் மறையும். |
| மிதுனம் | தொழில் வளம், சுபகாரியம் கை கூடும், தேவைக்கேற்ற பணவரவு, தேவைகள் பெருகும். |
| கடகம் | நற்காரியம், புத்திர வழியால் கவலை, போட்டிகளில் கவனம், உடல் ஆரோக்கியம். |
| சிம்மம் | வெற்றி தினம், பணப்பரிமாற்றத்தில் நிதானம, பொன்பொருள் சேரும், கால்நடையால் இலாபம். |
| கன்னி | ஆதரவு, சேமிப்பு உயரும், மருத்துவச் செலவுகள், பயணம் தவிர்க்கவும், |
| துலாம் | மகிழ்ச்சி, கூட்டுமுயற்சியில் தளம்பல், நிதானம் வேண்டும், திறமைக்குப் பாராட்டு. |
| விருச்சிகம் | உற்சாகம், கொடுக்கல் வாங்கலில் அவதானம், பிரயாணக் கஷ்டம், மனச் சஞ்சலம். |
| தனுசு | புகழ்ச்சி, வருவாயில் மகிழ்ச்சி, எதிலும் முன்னவதானம், கௌரவச் சிறப்பு. |
| மகரம் | மனத்தெளிவு, புதிய தொழிலில் நாட்டம், விவசாயத்தில் இலாபம், அன்னியர் சகவாசம். |
| கும்பம் | திடீர் நன்மை, முயற்சியில் தடை, வீண்விரயம், பந்தயத்தில் பலனுண்டு. |
| மீனம் | வருவாய் உயர்வு, சஞ்சலங்கள் அகலும், கூட்டு முயற்சியில் வெற்றி, மனதில் தெளிவு. |

# உலகின் தங்க மகன் உள்ளூரில் மீண்டும் தோல்வி



(ஜமைக்கா)

200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் உலகின் தங்க மகன் உசைன் போல்ட் உள்ளூரில் தோற்கடிக்கப்பட்டுள்ளார். ஒலிம்பிக் போட்டி லண்டனில் வருகிற 27ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டியில் பங்கேற்கும் ஜமைக்கா தடகள அணியினருக்கான தகுதி போட்டி அங்கு நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் ஜமைக்கா வீரர் யோஹன் பிளேக் 19.80 வினாடியில் பந்தயதூரத்தை கடந்து முதலிடம் பிடித்தார். சக வீரரும் உலக சம்பியனுமான உசைன் போல்ட் 19.83 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து 2ஆவது இடத்தை பிடித்து ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார்.

ஏற்கனவே 100 மீற்றர் ஓட்டத்திலும் யோஹன் பிளேக்கிடம், உசைன் போல்ட் தோல்வி கண்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டில்சான், சங்கக்கார சதம்

## சமநிலையை நோக்கி கொழும்பு டெஸ்ட்

(கொழும்பு)

இலங்கை,பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமநிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இதேவேளை, டில்சான், சங்கக்கார சிறப்பாக ஆடி சதம் அடித்தனர். இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.



இதில் முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி, அதன் முதல் விக்கெட்டை 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இழந்தது. இருப்பினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த டில்சான், சங்க்கார ஜோடி சிறப்பாக ஆடி பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களின் பந்துகளை வெளுத்துக் கட்டினர். இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 225 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இலங்கை அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டில்சான் 121 ஓட்டங்களைப் பெற்றார். இந்த ஓட்ட எண்ணிக்கையுடன் டெஸ்ட் அரங்கில் அவர் 5000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். மற்றும் சங்கக்கார ஆட்டமிழக்காது 144 ஓட்டங்களைப் பெற்றார். இது சங்கக்கூரவின் 30ஆவது சதமாகும். இதன் மூலம் கிரிக்கெட்டின் பிதாமகன் என வர்ணிக்கப்படுகின்ற பிரட்மனின் சத எண்ணிக்கையை சங்கக்கார நேற்றுக் கடந்தார். பந்து வீச்சில் யுனைட் கான் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 551/6. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

# தேசிய துப்பாக்கி சுடும் அணியில் புனர்வாழ்வு பெற்ற விஜயன்

(கொழும்பு)

இலங்கை தேசிய துப்பாக்கி சுடும் அணியில் புனர்வாழ்வு பெற்றுள்ள முன்னாள் போராளி ஒருவர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ள முன்னாள் போராளிகளில் 131 பேர் இலங்கையின் விளையாட்டுக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் குறிபார்த்து சுடும் இலங்கை தேசிய அணிக்கு விஜயன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிறப்பாக குறி பார்த்துச் சுடும் இவர் தற்போது தொழில்நுட்ப முறையிலான பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தவிர மேலும் 12 பேர் கரப்பந்தாட்டம், கிரிக்கெட், கால்பந்து, நீச்சல் போன்ற போட்டிகளுக்கு உள்வாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜேட் டேர்ண்பக் நீக்கம்

(லண்டன்)

இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2 போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் ஏனைய 3 போட்டிகளிலும் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ஜேட் டேர்ண்பக் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் பிரதான வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சனுக்கு ஏற்பட்ட காயம் காரணமாக இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணி சார்பாகப் பங்குபற்றியிருந்த ஜேட் டேர்ண்பக் இற்குக் காயம் ஏற்பட்டுள்ளதன் காரணமாக அவர் வெளியேற்றப்பட்டுள்ளது. அவருக்கு நெஞ்சுப் பகுதிக்கு அண்மையாக ஒருபுறத்தில் உபாதை ஏற்பட்டுள்ளதே அவரது வெளியேற்றத்திற்கான காரணமாகும்.

# ஷரபோவா, கிளிஸ்டர்ஸ் அதிர்ச்சித் தோல்வி





விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் 4ஆவது சுற்று ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனை ஷரபோவா, பெல்ஜியம் வீராங்கனை கிளிஸ்டர்ஸ் ஆகியோர் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார்கள். இதே வேளை, செரீனா வில்லியம்ஸ், ரோஜர் பெடரர் ஆகியோர் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர்பிரிவில் நடந்த 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் முதல்நிலை வீரர் மரியா ஷரபோவா (ரஷ்யா), 4-6, 3-6 என்ற நேர்செட்டில் 15ஆம் நிலை வீராங்கனை ஜேர்மனியின் சபின் லிசிகியிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளிஸ்டர்ஸ் 1-6, 1-6 என்ற நேர்செட்டில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரிடம் தோல்வி கண்டு வெளியேறினார். மற்றொரு ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கிவிடோடா (செக்குடியரசு) 4-6, 7-5, 6-4 என்ற செட் கணக்கில் மழையால் பாதிக்கப்பட்ட ஆட்டத்தில் இத்தாலியின் பிரான்செஸ்காவை தோற்கடித்து கால் இறுதிக்கு தகுதி பெற்றார். இன்னொரு ஆட்டத்தில் 4 முறை சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6-1, 2-6, 7-5 என்ற செட் கணக்கில் கஜகஸ்தானில் ஷிவ்டோவை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 4ஆவது சுற்று ஆட்டத்தில் உலகின் 3ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), பெல்ஜியம் வீரர் சேவியர் மலிஸ்சியை எதிர்கொண்டார்.

# ஸ்பெயின் அணிக்கு 162 கோடி பரிசு

(கிவ்)

யூரோ கிண்ணத்தை கைப்பற்றிய ஸ்பெயின் அணிக்கு மொத்தம் ரூ.162 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.


இதில் பங்கேற்பு கட்டணம் லீக் முதல் பெற்ற வெற்றிகளுக்கான பணங்களும் அடங்கும்.

2ஆவது இடத்தை பிடித்த இத்தாலி அணிக்கு ரூ.135 கோடி பரிசாக கிடைத்தது.

அரை இறுதியில் தோல்வி அடைந்த ஜேர்மனி அணிக்கு ரூ.111 கோடியும், போர்த்துக்கல் அணிக்கு ரூ.104 கோடியும், காலிறுதியில் தோல்வி கண்ட இங்கிலாந்து அணிக்கு ரூ.86 கோடியும், செக்குடியரசு அணிக்கு ரூ.83 கோடியும், பிரான்ஸ், கிரீஸ் அணிகளுக்கு தலா ரூ.80 கோடியும் கிடைத்தன. மொத்தம் ரூ.1,365 கோடி பரிசாக வழங்கப்பட்டது.

# நெகிழ்ச்சியான தருணம்

(கீவ்)



வீரர்கள் மீது நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியூரோ கிண்ணத்தை வசப்படுத்தியமை மகிழ்ச்சிக்குரிய, நெகிழ்ச்சிக்குரிய ஒரு விடயம் என ஸ்பெயின் அணியின் பயிற்சியாளர் விசென்ட் டெல் போஸ்க்யூ தெரிவித்தார்.


யூரோ கிண்ணக் கால்பந்துப் போட்டித் தொடரின் ஸ்பெயின் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கால்பந்து ஆட்டத்தில் ஒரேவிதமான ஸ்டைல் மட்டும் இல்லை. பல வகையான பாணிகள் இருக்கிறது. இதில் கோல் அடிப்பது தான் முக்கியமானதாகும். எங்கள் அணி வீரர்கள் மிகவும் புத்திசாலிகள். அணி வீரர்கள் நல்ல நிலையில் உள்ளனர். வீரர்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. அவர்கள் அதற்கு தக்கபடி விளையாடி வெற்றி கண்டனர். எங்கள் அணியில் ஸ்டிரைக்கர்கள் பலர் இருந்தாலும் எங்கள் ஸ்டைல் ஆட்டத்துக்கு பொருத்தமானவர்களை களம் இறக்கி விளையாடினோம். நாங்கள் நம்பிக்கையுடன் எங்கள் ஆட்டத்தை விளையாடினோம். இத்தாலி கடுமையாக போட்டி அளிக்க கூடிய அணியாகும். இருப்பினும் அவர்களுக்கு இந்த ஆட்டத்தில் அதிர்ஷ்டம் இல்லை.

இரண்டு யூரோ கிண்ண இறுதிப் போட்டியில் கோல் அடித்த முதல் வீரர் என்ற பெருமை ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டாரசுக்கு கிடைத்தது மகிழ்ச்சிக்குரியது. அவருக்கு எனது வாழ்த்துக்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சாதனை வெற்றிக்கு தகுதியான அணி



(கீவ்)

சாதனை வெற்றிக்கு ஸ்பெயின் அணிதகுதியானது என்று இத்தாலி அணி பயிற்சியாளர் சீசர் பிரான்டெலி பாராட்டு தெரிவித்துள்ளார்.

யூரோ கோப்பை இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணியிடம் தோல்வி கண்ட இத்தாலி அணியின் பயிற்சியாளர் சீசர் பிரான்டெலி ஆட்டம் முடிந்த பின்னர் கருத்துத் தெரிவக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்பெயின் அணி தொடர்ந்து 3 பெரிய போட்டியில் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்து இருக்கிறது. இந்த சாதனைக்கு ஸ்பெயின் அணி தகுதியானது. அந்த அணியில் அந்த அளவுக்கு திறமை வாய்ந்த சிறந்த வீரர்கள் உள்ளனர்.

அந்த அணியில் சிறந்த தாக்குதல் ஆட்டக்காரர்கள் ஆடவில்லை என்றாலும் எங்களுக்கு கடும் நெருக்கடி கொடுத்தனர். இறுதிப்போட்டியில் அவர்கள் முழுமையாக ஆதிக்கம் செலுத்தினார்கள்.

லீக் ஆட்டத்தில் நாங்கள் ஸ்பெயின் அணியுடன் விளையாடினோம். அந்த ஆட்டத்தில் நாங்கள் சிறப்பான திறனை வெளிப்படுத்தினோம்.

அந்த ஆட்டத்தின் போது எங்கள் அணியினர் முழு உடல் தகுதியுடன் இருந்தனர். ஸ்பெயின் போன்ற சிறந்த அணிக்கு எதிராக விளையாடுகையில் எல்லா விதத்திலும் அவர்களை சமாளிக்க எல்லோரும் உடல் தகுதியுடன் இருக்க வேண்டியது அவசியமானதாகும் எனத் தெரிவித்தார்.

# யூரோ கனவு அணி

(கிவ்)

யூரோ கோப்பை போட்டியின் அடிப்படையில் ஐரோப்பிய கால்பந்து சம்மேளனம் கனவு அணியை வெளியிட்டு உள்ளது. இதில் 5ஸ்பெயின் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இகர்கேசிலாஸ் (கோல் கீப்பர்), ஜோர்டி அல்பா, ஜெரார்டு பீகே (பின்களம்), இனியஸ்டா (நடுகளம்), பேப்ரிக்ஸ் (முன்களம்) ஆகியோர் இடம் பெற்று உள்ளனர்.

ஸ்பெயினுக்கு அடுத்தப்படியாக இத்தாலி, போர்த்துக்கல் அணியில் இருந்து தலா 3 பேரும் இடம் பெற்று உள்ளனர். ஜேர்மனி அணியில் இருந்து எந்த நபரும் இடம் பெறவில்லை.

2012ஆம் ஆண்டு யூரோ கால்பந்தில் கனவு அணி வருமாறு:- கோல்கீப்பர்:கேசிலாஸ் (ஸ்பெயின்)

பின்களம்: ஜோர்டி அல்பா, ஜெரார்ட் பினே (ஸ்பெயின்), பெபே, பேபியோ கோயன்ட்ரோ (போர்த்துக்கல்).

நடுகளம்: ஆண்டிரியோ பிர்லோ, டேனிலி டிரோசி (இத்தாலி), இனியஸ்டா (ஸ்பெயின்).

முன்களம்: கிறிஸ்டி யானோ ரொனால்டோ (போர்த்துக்கல்), பலோடெலி (இத்தாலி), பேப்ரிக்ஸ் (ஸ்பெயின்).

தாயகம் திரும்பிய ஸ்பெயின் அணிக்கு ரசிகர்கள் அளித்த உற்சாக வரவேற்பின் ஒரு பகுதி.




# பிரான்சில் 15ஆவது யூரோ


(கிவ்)

15ஆவது யூரோ கிண்ண கால்பந்து தொடர் பிரான்சில் நடத்தப்படவுள்ளதாக ஐரோப்பிய கால்பந்து சம்மேளனம் அறிவித்தது.

உலகக் கிண்ணப் போட்டிக்கு அடுத்தபடியான பெரிய கால்பந்து போட்டியான யூரோ போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது.

14ஆவது ஐரோப்பிய போட்டி போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளில் தற்போது நடந்து முடிந்தது. 2016ஆம் ஆண்டுக்கான 15ஆவது யூரோ கோப்பை பிரான்சில் நடத்தப்படுகிறது. இதில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை 16இல் இருந்து 24 ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் மேலும் அது தெரிவித்துள்ளது.

# குத்துச் சண்டையில் கதிரவன் தங்கம்



(பருத்தித்துறை)

வடமராட்சிக்குட்பட்டவர்களுக்கிடையே நடத்தப்பட்ட குத்துச்சண்டைப் போட்டி முதலிரு இடங்களை சகோதரர்களான என். கதிரவன், என். கஜன் ஆகியோர் கைப்பற்றியுள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தின் 16ஆவது விஜயபாகு படையணியும் பொதுமக்களும் இணைந்து நடத்திய குத்துச் சண்டை போட்டி அண்மையில் நடைபெற்றது. மின்னொளியில் நடைபெற்ற இப்போட்டிக்கு பி.எம்.ஆர்.எஸ். பண்டார தலைமை தாங்கினார்.

மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்போட்டியில் யாழ். குத்துச் சண்டை கழகத்தைச் சேர்ந்த ஆறு பேர் பதக்கங்களைப் பெற்றனர்.

சகோதரர்களான நாராஜமூர்த்தி கதிரவன், தங்கப் பதக்கத்தையும், ராஜாஜமூர்த்தி கஜன் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார். மற்றும் ஏ. அருண், பி. அருள்தீபன் ஆகியோரும் பதக்கங்களைப் பெற்றனர்.

இப்போட்டி நிகழ்வில் 52ஆவது சேனைத் தளபதி பிரிக்கேடியர் சுதசிங்க, 521 படைப்--பிரிவின் பருத்தித்துறை கேணல் டிக்கிரி திசாநாயக்க, இராணுவ கட்டளைத் தளபதி மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (116)


# மாகாண மட்ட விளையாட்டு


(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வின்போது பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்று முடிந்த பெருவிளையாட்டுப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்கள் வருகை தரவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. மேலும் பாடசாலை அணிகள் அந்தந்த விளையாட்டுக்குரிய சீருடையுடன் வருகை தரவேண்டும் எனவும், இந்நிகழ்வின்போது சகல கோட்டக் கல்வி அதிகாரிகளும் வருகைதந்து தமது கோட்டத்திற்கு கொடியை ஏற்றவேண்டும் என்றும், கோட்டக் கல்வி அதிகாரிகள் வருகை தராத பட்சத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் வருகை தரவேண்டும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்களால் கோரப்பட்டுள்ளது. (109)

# தேசிய கபடிக் குழுவில் இரண்டு யாழ். வீரர்கள்





(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய மட்டத்திலான கபடிக் குழுவில் இணைந்து விளையாடுவதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களான ச.சுஜன் மற்றும் சி.செந்தூரன் ஆகிய இருவருமே கடந்த மாதம் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற கபடி போட்டியில் யாழ்.மாவட்ட அணி சார்பில் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர். இதனை அவதானித்த தேசிய இளைஞர் சேவை மன்றத்தினர் அவர்களை தங்கள் தேசிய அணியில் இணைத்துக் கொள்வதற்கு முடிவு செய்தனர்.

மேற்படி இருவரும் பாடசாலை மட்டத்திலான கபடி போட்டிகளில் சிறந்த முறையில் தமது திறமைகளை வெளிப்படுத்தி தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய அணியில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய அணியில் இடம்பிடித்த மேற்படி இருவரும் இலங்கை தேசிய அணியில் இடம்பிடிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருப்பது மகிழ்ச்சி என்றும், இது இவர்கள் கல்வி கற்ற பாடசாலைக்கு பெருமையைத் தேடிக் கொடுத்திருக்கும் ஒரு சாதனையாகவே பார்க்கப்படும் என்றும் இவர்களின் பயிற்றுநர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய அணியில் இவர்கள் இடம்பிடித்தமை தமது பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதாக அமைவதாகவும், கபடியில் இவர்கள் மென்மேலும் வளர வேண்டும் என்றும் இளவாலை மெய்கண்டான் பாடசாலைச் சமூகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளனமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய கல்லூரி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான பளு தூக்கும் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியன் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டது.

யாழ். வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இரண்டாம் இடத்தினை தும்பளை சிவப்பிரகாசா வித்தியாசாலையும் மூன்றாம் இடத்தினை யாழ். வோலாயுதம் மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

# நீச்சல் போட்டி

(யாழ்ப்பாணம்)

இராணுவ வீரர்களுக்கு இடையிலான நீச்சல் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ். இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் 4 பிரிவுகளாக நடைபெற்ற இந்தப் போட்டியில் 47 இராணுவ வீரர்கள் பங்குபற்றினர். யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கான நீச்சல் போட்டியும் இதன் போது நடைபெற்றது.

இதற்கான நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கினார்.

இதன்போது உரையாற்றிய யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, இந்தப்போட்டி எனக்கும் இராணுவத்தினருக்கும் மகிழ்ச்சியைத் தருவதுடன், முதல் தடவையாக யாழ். மண்ணில் நடைபெறுவதையிட்டும் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் நோக்கில் அன்பளிப்பாக 25,000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை அந்தப் பாடசாலை அதிபரிடம் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வழங்கினார். (02)





தீவக வலய மழலைகள் விழா கடந்த வாரம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் தீவக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா கலந்து கொண்டு வெற்றிபெற்ற சிறார்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்தார். இதில் வினோத உடை தரித்த சிறார்கள் நிற்பதையும், வினோத உடை தரித்த ஒருவர் தினமுரசு பத்திரிகை விற்பனையாளராக வேடமிட்டுள்ளதையும் மற்றும் போட்டியில் பரிசில்கள் வென்ற சிறார்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் காணலாம். (50)

"நாங்கள் எங்களின் வழக்கமான பாதைகளிலிருந்து தூக்கி எறியப்பட்டவுடன், எல்லாம் முடிந்துவிட்டது என்று நினைக்கிறோம், ஆனால் இங்குதான் புதிதும் நல்லதும் ஆரம்பிக்கிறது."

– லியோ டால்ஸ்டாய்

# நல்லதும் புதிதுமான பார்வையும் பாதையும்

- எஸ்.எம்.எம்.பஷீர் -

இப்போதெல்லாம், லங்கையில் லக்கிய நிகழ்வுகள், நாவல்கள் சிறுகதை, கவிதைத் தொகுப்பு வெளியீடுகள் என்று நாடு களைகட்டியுள்ளது. சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு கோலாகலமாக 2011 ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்று முடிந்த பின்னர் பாரதி விழாவும் உலகத் தமிழ் இலக்கிய விழாவும் இணைந்தே 2012 இல் நடந்து முடிந்துள்ளது. எங்கு பார்த்தாலும் புத்தக வெளியீடுகள் இலக்கிய நிகழ்சிகள் நடந்து கொண்டிருக்கின்ற ஒரு சூழல் இலக்கிய ஆர்வலர்களுக்கு உற்சாகத்தை அளிக்கிறது.

அண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற உலக தமிழ் இலக்கிய மாநாட்டில் கலந்துகொண்டபோது திரு ரவீந்திரனையும், அவரின் "வாழ்க்கைப் பயணம்" சிறுகதைத் தொகுப்புக்கு அணிந்துரை வழங்கிய ஜி.ரீ.கேதாரநாதனையும் ஒருசேர சந்திக்க நேரிட்டது. அவ்விருவர்களினுடனான படைப்பிலக்கியம், அரசியல் பற்றிய கருத்துப்பகிர்வு என்னை இச் சிறுகதைத் தொகுப்பினையும் வாசிக்கத் தூண்டியது.

நாளாந்த வாழ்வில் நாம் காணும் சாமான்ய மனுஷர்களின் வாழ்க்கையோடு அமைந்ததான பண்பியல்புகளை, தான் வாழ்ந்த பிரதேச சமூக பொருளாதார, சமய, சூழலுக்குள் நின்று எடைபோடுகின்ற போக்கினை இக்கதைகளில் காணலாம். பொதுவாக படைப்பிலக்கியவாதிகளிடம் காணப்படும் பிரசாரம், உன்னத வாழ்க்கையை ஆகர்சிக்கும் கருத்து வெளிப்பாடு என்பன ஏதுமற்று ஒரு நடுநிலை பார்வையாளனாக நின்று தான் வாசித்து முடித்தபின்னர் சில கதாபாத்திரங்கள் எங்களுக்கு மிகப் பரிச்சயமானவர்களாகி விடுகிறார்கள். எங்களின் நினைவுகளில் இடம்பிடித்து விடுகிறார்கள்.

இரண்டு தசாப்தங்களாக ரவீந்திரன் கட்டுரைகள் சிறுகதைகள் என எழுதியிருப்பினும் இத்தொகுதியில் இடம் பெற்ற கதைகளில் பல, கடந்த ஓரிரு ஆண்டுகளில் இலங்கையில் சிவில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் எழுதிய கதைகளாக உள்ளன. நீண்ட காலம் கொழும்பில் வாழ்ந்த தனது அனுபவங்களையும், தனது பிறந்த மண்ணான யாழ்ப்பாணத்தில் திரும்பி மீண்டும் வாழும் புறச் சூழல்களில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் கருத்தியல்களுக்கு அப்பால் நின்று யுத்தத்தின் பின்னரான மக்களின் நாளாந்த வாழ்வியல் கூற்றின் அம்சங்களை அழகிய சிறுகதைகளாக ஆக்கித் தந்துள்ளார். கதை நிகழ்ச்சிக் கூறுகளை அபரிதமாக விவரிக்காமல், பாத்திரங்கள் அதீத உணர்ச்சி விளைவினை தோற்றுவிக்கச் செய்யாமல் மிக கவனமாக கதையோட்டத்தை, கதை மாந்தர்களை வார்ப்புச் செய்துள்ளார்.

கதைசொல்லிக்கும் வாசகனுக்குமிடையே ஓர் மெலிதான பரிச்சயம் ஏற்பட்டுவிடும் வகையில் வாசகனை தனது கதைகளுடன் நெருக்கமாக அழைத்துச் செல்கிறார். தான் காணும் மாந்தரின் சமூக பொதுமைப்பாட்டு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் உயிர்கள் மீதான வாஞ்சையை தானும் வரித்துக் கொண்டு நிஜ உலகில் தேடும் அங்கலாய்ப்பு, மு.பொன்னம்பலத்தின் கவிதை என பல, அவரின் வாழ்க்கை பற்றிய சொந்த மதிப்பீட்டுக் கருத்தியல்களை சுமந்ததாக கதாபாத்திரங்கள் பேசுவதும், எதார்த்தத்துக்கும், உன்னத தன்மைக்குமிடையிலான ஒரு பிரிவுக்கோட்டில் உள்ள நடைமுறை மனிதர்களை நம்முன் அடையாளப் படுத்துகிறார். மு.வ வின் பல சிறுகதைகளில், நாவல்களில் காணப்படும் உன்னத மனிதர்கள் உன்னத உலகு பற்றிய சிந்தனைகள் போற்றுதற்குரியவையாயினும் சிறுகதை, நாவல் உலகில் சாகாவரம் பெறுவதில்லை. அந்த வகையில் இளம் படைப்பாளியான ரவீந்திரன் தனது தோளுக்கு மேல் எதார்த்த உலகை தனது உன்னத உலகு பற்றிய அகவய சிந்தையுடன் பார்க்கும் திறன் கொண்டவராக உள்ளார். அவ்வாறான பார்வையினூடாக கதாசிரியர் மனித இருத்தலின் இயங்கு தளத்தை அடையாளம் காண முயன்றிருக்கிறார்.

சில கதைகள் வாசகர்களின் தர வேறுபாடுகளை மீறி சகல தரப்பு வாசகனையும் கட்டிப்போடும் கதைகளாயுள்ளமை குறிப்பிடத்தக்கது.




தரிசித்த அல்லது அவ்வாறான தரிசனத்தினூடாக சிருஷ்டிக்க முடிந்த கற்பனை மாந்தர்களை, உயிரோட்டத்துடன் நம்முன் கொண்டுவர முயன்றுள்ளார். கதையை



போலித்தனங்களையும் அடையாளப்படுத்தி, அவற்றின் குறியீடுகளாகவே தனது கதாபாத்திரங்களை அமைத்து அதில் வெற்றியும் கண்டுள்ளார். ஆயினும் தனது ஆழ்ந்த வாசிப்பின் மதிப்பீடுகளை ஆங்காங்கே மெலிதாக சில கதைகளில் சொல்ல வருவது பிரசாரத்தன்மையாக விமர்சர்களால் கண்டு கொள்ளப்படலாம்.

ஆணாதிக்க சிந்தனை மேவிய குடும்ப உறவு, ஜே.கிருஷ்ணமூர்த்தி பற்றிய இவரின் வாசிப்பு, பாரதியின் உதாரணமாக "சின்ன அரும்பு" எனும் கதை. "கன்னங்கரா இந்த நாட்டுக்கு இலவசக் கல்வியை அறிமுகப் படுத்தினார். அதனால்தான் ஏழைகளான அப்புஹாமி, ஐயாத்துரை, அஸ்லம் போன்றவர்களின் பிள்ளைகள் பெரிய படிப்பு படிக்க முடிஞ்சது, அதனாலதான் அவர் மக்களின்ர மனங்களில இன்றைக்கும் நிறைஞ்சிருக்கிறார்" போன்ற கருத்து வார்ப்புகளும் பிரபஞ்சனின் பாடசாலைகள் பற்றிய கருத்துக்களும் இக்கதையின் பிரசாரப் பகுதியாகவன்றி, கதைக்கு மெருகூட்டும் பாணியில் இயல்பாகவே சொல்லப்பட்டிருப்பதும் கவனிக்கப் படவேண்டியது.

"இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்பு வேலை நிமித்தம் கொழும்பு வந்தேன். ஆனால் எனது நினைவுகள் எப்போதும் யாழ்ப்பாணம் பற்றியதாகவே இருக்கிறது. உலகில் வேறெந்தப் பிரதேசமும் அதற்கு இணையாக மாட்டாது" என்று முகவுரையில் தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் ரவீந்திரனின் மனப்பாங்கினை கதை மாந்தர்கள் சிலரும் பிரதிபலிக்கிறார்கள். அவ்வாறே அவரின் சொந்த வாழ்க்கை அனுபவங்கள் ஊடே அவதானித்தை, அனுபவித்ததை தனது கற்பனையை இழைத்தே இக்கதைகளில் சிலவற்றை பின்னியுள்ளார். உதாரணமாக "பிறந்த மண்", "மறக்க முடியேல்லை", "பாசம்" போன்ற கதைகள்.


இக்கதைகள் யாழ்ப்பாண மண்வாசனையுடன், கொழும்பு வாழ்க்கை பற்றியும், யுத்தம் பற்றியும் யுத்தத்திற்கு பிற்பட்ட சூழல் பற்றியும் ஒரு தனி மனித அனுபவங்களை காட்டுகின்றதான பங்கப்புலனை மையமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளன. அரசியல் பிரசார நெடி வீசும் இலக்கியத்தினூடே கருத்துக்களை வார்க்கின்றதான எழுத்துக்களையே படைப்பிலக்கியங்கள் என்று பல்கலைக் கழக ஆசான்கள் பட்டியல் போடுகின்ற காலத்திலும் யுத்தத்தினால் சிதைந்து போன வடக்கிலிருந்து புதிதாக படைக்கப்பட்ட சராசரி மனிதர்களின் வாழ்க்கை கதையிது.

புனை கதைதான் என்றாலும், கதையில் காட்சிப்படுத்தப்படும் சம்பவங்களும், பாத்திரங்களும், கதை சொல்லியின் இறுக்கமும் இலாவகமான மொழியாட்சியும் யுத்த அவலங்கள் தொட்டுச் சென்ற நினைவுகளுக்கப்பால் வாழும் சாதாரண மனிதர்களை நிமிர்ந்து பார்க்கச் சொல்கிறது. இதுவே இக்கதாசிரியரை யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் சிறுகதை இலக்கியப் படைப்பாளிகள் பலரிலிருந்தும் வேறுபடுத்திப் பார்க்க வைக்கிறது.

முதற்தர ஒலிபரப்பாளரான மு.ரவீந்திரன், சிறுகதை இலக்கிய பரப்பில் ஒரு முதற்தர சிறுகதை எழுத்தாளராக தன்னை நிலை நிறுத்திக் கொள்வார் என்பதற்கான வீச்சினை வெளிப்படுத்தி நிற்கிறார்.


## சினிமா சினிமா

"எந்திரன்" படத்தில் கௌரவ வேடத்தில் நடித்த பிரபல கலை இயக்குநர் சாபு சிரில் மலையாளப் படம் ஒன்றில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். ஏசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து தீபேஷ் இயக்கும் பெயரிடப்படாத இந்தப் படத்தில் ஏசு கிறிஸ்து வேடம் ஏற்கிறார் சாபு சிரில்.



நடன இயக்குநர் கூல் ஜெயந்த் இயக்கி நடிக்கும் படத்திற்கு "யோ யோ" என்று பெயரிட்டிருக்கிறார். படத்தில் ஆண்ட்ரியா கதாநாயகியாக நடிப்பதாக சொல்லப்பட்டது. ஆனால், "கமலின் விஸ்வரூபம் படம் வெளியாகும் வரை வேறு படங்களில் நடிப்பது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை. அதுவரை, ஆண்ட்ரியா அந்தப் படத்தில் நடிக்கிறார் இந்தப் படத்தில் நடிக்கிறார் என்று யாராவது சொன்னால் நம்ப வேண்டாம்" என்றிருக்கிறார் ஆண்ட்ரியா.





இதுவரை நகர்ப்புறப் பின்னணியில் மட்டுமே படங்களை எடுத்து வந்த ராதாமோகன் முதல் முறையாக கிராமியப் பின்னணியில் இயக்கி வரும் படம் "கௌரவம்". வழக்கம்போல் பிரகாஷ் ராஜ்தான் தயாரிப்பாளர். "கர்ணன்" படத்தைப் போலவே "கௌரவம்" படத்தையும் டிஜிட்டலில் எடுத்து வெளியிட முயற்சிகள் நடக்கிறது.

கமல்ஹாசனின் சூப்பர் ஹிட் படமான "சகலகலா வல்லவன்" படத்தை தனது குடும்ப நிறுவனமான ஸ்டுடியோ கிரீன்ஸ் மூலம் ரீமேக் செய்யத் திட்டமிட்டிருக்கிறார் சூர்யா. அதற்காக ஏவி.எம். நிறுவனத்திடம் முறையாக உரிமையைக் கேட்க பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. "நல்ல விஷயம் நீங்களே ஹீரோவாக நடித்துவிடுங்கள்



நாங்கள் படத்தைத் தயாரிக்கிறோம்" என ஏவி.எம். நிறுவனத்தில் கூறப்பட்டதாம். 2013ஆம் ஆண்டு வரை பிஸியாக உள்ள சூர்யா அதற்குப் பிறகு சகலகலா வல்லவன் ரீமேக்கில் நடிக்கலாம்.

# அதிக உடற்பயிற்சியும் ஆபத்தே!

அதிக அளவு உடற்பயிற்சி செய்வதும் உடலுக்கு ஆபத்தே என கூறுகின்றனர் மருத்துவ ஆய்வாளர்கள். பொதுவாக அதிக உடல் எடை கொண்டவர்கள் தங்களது எடையைக் குறைக்க எண்ணி, உணவுக் கட்டுப்பாடு, கடுமையான உடற்பயிற்சி என பலவிதமாக எடைக்குறைப்பு முறையை மேற்கொள்கின்றனர். நாள் ஒன்றிற்கு ஒரு மணிநேரம் பயிற்சி செய்வதே இதயத்திற்கு பாதுகாப்பு ஆகும். அதற்கு மேல் உடற்பயிற்சி செய்தால், நாளடைவில் அது இதயத்தை பாதிக்க வாய்ப்புள்ளது என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். சாதாரணமாக இருப்பவர்கள் அதிதீவிர பயிற்சிகளிலும் போட்டிகளிலும் ஈடுபடும்போது, இதயத்துடிப்பு 120 ஆக உயர்கிறது. இதனால் இதயம் பாதிப்புக்குள்ளாகிறது. உடற்பயிற்சி என்பது பொதுவாக சுகாதார வாழ்வுக்கு நல்லதுதான். எனினும் அதிகமாக போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. கி.மு 490ஆம் ஆண்டில் ஓர் இளம் கிரேக்கச் செய்தியாளர் 2 நாட்களில் 175 மைல்கள் ஓடி வந்த பின்னர் திடீரென இறந்தார். இவரது இறப்பே நீண்ட தூர ஓட்டத்தில் பாதிக்கப்பட்ட முதல் இதயம் என மருத்துவ நிபுணர்கள் கருதுகின்றனர்.



# இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்

நாம் அனைவரும் தாயின் கருவறைக்குள்ளிலிருந்து வெளிவரும் போது எதனையும் கற்றுக்கொண்டு வெளிவருவதில்லை. எதனையும் அறியாத நிலையில் தான் பிறக்கின்றோம். வெள்ளைக் காகிதம் போன்றே எம்மனம் காணப்படுகின்றது. வெறுமையாகக் கிடக்கும் அறிவும், மனமும் பிறந்த பின் சூழலில் கிடைப்பவற்றையும், கண்ணால் பார்ப்பவற்றையும், காதால் கேட்பனவற்றையும் கிரகித்து அதனோடு எம்மறிவு வளர்கின்றது.

எம்மறிவு வளர்ச்சியிலும், உள ஆற்றல் விருத்தியிலும் பெற்றோரின் பங்கு முதன்மையானது. பிள்ளையை பெற்றெடுப்பதுடன் கடமை முடிவதில்லை. அதன் பிறகே பெரும் கடமை துவங்குகின்றது. பெற்றெடுத்த அப்பிள்ளையை உரிய முறையில் செப்பனிட வேண்டும். எந்தப் பிள்ளையும் அறிவாற்றலில் குறைந்த பிள்ளையில்லை. அவர்களின் அறிவும், ஆற்றலும் முதலில் பெற்றோரே இனங்கண்டு ஊக்கப்படுத்தி வளர்த்துவிட வேண்டும். ஒரு பிள்ளையின் முதல் ஆசான் பெற்றோரேயாவர். இவர்களின் முதற் பள்ளிக்கூடம் வீடேயாகும்.

எனவே, உரிய முறையில் வழிகாட்டப்பட்டு திறமைகள் இனங்காணப் பட்டு எக்குழந்தை வழிநடத்தப்படுகின்றதோ அக்குழந்தையே நாளைய உலகை வெற்றி கொள்ளும். இன்று, சுவரில் அக்குழந்தை வரையும் ஓவியமே நாளை இதனை ஒரு பெரும் ஓவியராக மாற்றப் போகின்றது.



எனவே, அதன் சிறு கிறுக்கல்களை தடுத்து அதன் வாழ்வில் பெரும் சுருக்கல்களுக்கு நாம் வித்திடக் கூடாது. ஒரு குழந்தையை பெரும் தலைவராக மாற்ற முதலில் ஒழுக்கத்தை விதைப்போம். பின் அதன் திறமைக்கு வித்திட்டு, தட்டிக் கொடுத்து நாளைய உலகை ஆளும் நல் மனிதராக்குவோம்!

- சிகரம்

# உசுப்புவது மட்டும் தலைவர்கள் அடி வாங்குவதோ தமிழர்கள்!

- என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து -



"வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால்..." ஆங்கிலத்தில் அறியப்படும் சிறந்த பழமொழி ஒன்றின் அழகான தமிழாக்கம் இது. இனப்போர் முடிந்து மூன்று ஆண்டுகள் முழுமையுமாக முடிந்த பின்னர், இன்றைய சூழலிலும் இ்லங்கை தமிழ் மக்களுக்கும் அவர்களின் அரசியல் தலைமைக்கும் வெகுவாக பொருந்தும் விடயம் இது. அதிலும் குறிப்பாக, அரசிற்கு எதிராக சர்வதேச சமூகம் முன்னெடுக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்த நடவடிக்கை அளித்துவரும் ஊக்கத்தின் அடிப்படையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது மொட்டவிழும் மக்கள் போராட்டங்களுக்கும் இது பொருந்தும்.

இன்று காணிப் பிரச்சினை குறித்து அடிமேல் அடி வைத்து தொடங்கப்படும் போராட்டங்கள் எங்கே சென்று முடியும் என்று அதனை தொடக்கி வைத்துள்ளவர்களுக்கு எண்ணத் தோன்றி உள்ளதா? என்பது தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில், தமிழ் மக்களின் தற்போதைய அபிலாஷைகளை சர்வதேச சமூகத்தின் முன் வைப்பதற்கு இத்தகைய போராட்டங்கள் உதவும். ஆனால், இதில் எந்தவித பயனும் ஏற்படவில்லை என்றால் அடுத்தடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன? அதற்கும் அப்பால் சென்று, எந்தவித அமைதிப் போராட்டமும் எதிர்பார்க்கும் நல்ல முடிவுகளை ஏற்படுத்தாவிட்டால், அதன் பின்விளைவுகள் என்ன? இவை குறித்து யாரும் யோசித்துப் பார்த்ததாக தெரியவில்லை.

அதாவது போராட்டம், போர்க்குணம் என்பன போன்ற விதைகளை மக்கள் மனதில் தூவி, அதனை தண்ணீர் விட்டு வளர்த்து விட்டு, பின்னர் கைகளை பிசைந்து கொண்டு நிற்கும் அவலத்தை தமிழ் அரசியல் தலைமை ஏற்கனவே ஏராள-மாக சந்தித்துவிட்டது. அதற்கான அதி உயர் விலையையும் தமிழ் சமுதாயம் கொடுத்து மாய்ந்து விட்டது. அதே வழியில் தான் தற்போதும் தாங்கள் பயணிக்கிறோமா என்று தமிழ் மக்களும் அரசியல் கட்சிகளும் சிந்தித்து செயல்பட வேண்டும். அல்லது, நிகழ்கால நிகழ்வுகளை மட்டுமே மையப்படுத்தி செயலாற்றினால், தமிழ் சமூகத்தின் எதிர்காலமும் கடந்த காலத்தை போலவே இருண்டு விடும் சூழ்நிலை உள்ளது.

முக்கியமாக தமிழ் அரசியல் தலைமை, சர்வதேச சமூகத்தின் தற்போதைய நடவடிக்கைகளையும் முடிவு-களையும் அலசி, ஆராய்ந்து, தமது மக்களின் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்புகளையும் அவை நோக்கவிருக்கும் எதிர்ப்புகளையும் குறிப்பறிந்து செயல்பட வேண்டும். தனது எதிர்பார்ப்புகளை மட்டுமே எண்ணிப்பாராமல், தனது எல்லைகளையும் உணர்ந்து அவர்கள் செயல்பட வேண்டும். இதில், தமிழ் இனத்தின் குறிக்கோளும் இலக்கும் என்ன? என்பது குறித்த குழப்ப நிலை மாற வேண்டும், மாற்றப்பட வேண்டும். இவ்வாறு செய்யத் தவறியதால் தான் கடந்த கால நிகழ்வுகள் எந்தவித கட்டுப்பாடுமின்றி தன்னிச்சையாக செயல்வடிவம் பெறும் நிலைமைக்கு தள்ளப்பட்டது.

உதாரணத்திற்கு தற்போதைய போராட்டங்கள், அரசி டம் இருந்து பயன் எதனையும் தங்களது மக்களுக்கு பெற்று தரவில்லை என்றாலும், தங்களது மக்கள் மீது காவல் துறையின ரையோ, இராணுவத்தினரையோ ஏவி விடாது என்ற நம்பிக்கையில் தமிழ் அரசியல் தலைமை நம்புவது போல் தோன்றுகிறது. இதனை மட்டுமே சர்வதேச சமூகத்தின் பார்வை தவிர்க்க முடியும் என்று தற்போதைய சூழலில் (மட்டுமே) எதிர்பார்க் கலாம். ஆனால், சர்வதேச சமூகத்தையும் மீறி, அத்தகைய அசம்பாவிதங்கள் அரங்கேறினால், அனாதரவாய் நிற்கப்போகும் தமிழ் மக்களுக்கு அவர்களது அரசியல் தலைமை செய்யப் போவது என்ன? இது குறித்து எந்த விதமான சிந்தனைகளும் தோன்றியுள்ளதாக தெரியவில்லை.

அவ்வாறு நடக்குமேயானால், அப்போது மிதவாத அரசியல் தலைமை என்ன செய்யப்போகிறது? போருக்கு முந்திய காலத்தை போலவே காணாமல் போகப் போகிறதா, அல்லது தங்களது செயல்பாடுகளினால் அல்லலுறும் மக்களுடன் தாங்களையும் "தண்டனை"-க்கு உள்ளாக்கி கொள்ளப் போகிறார்களா? மிதவாத அரசியல் தோல்விக்கு அரசையும் அடுத்தவர்களையும் சுட்டிக்காட்டி காரணம் கற்பிப்பதுடன் அவர்கள் வேலை முடிந்து விட்டது என்று கருதி மீண்டும் செயல்படாமல் விட்டுவிடப் போகிறார்களா? அப்போதும் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி தமிழ் மக்களே.

இந்த முறையும் மிதவாத அரசியல் தலைமையால் கட்டவிழ்த்து விடப்படும் போராட்ட திட்டங்கள், த்மிழ் - சிங்கள சமூகத்தினரிடையே உலாவரும் அடிப்படை வாதிகளையும் இனவாதிகளையும் உசுப்பி விடும் நிலைமைக்கு உள்ளாக கூடாது. அத்தகைய நிலைமை உருவாகுமானால், மிதவாத தமிழ் தலைமை அரசையும், சிங்கள பேரினவாதிகளையும், ஏன் சர்வதேச சமூகத்தையும் கூட குறை கூறி, குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பி விடலாம். தங்களது போராட்டங்கள் வன்முறைக்கும் வித்திட்டது என்ற குற்றச்சாட்டையும் உதறித்தள்ள முயலலாம். கடந்த காலத்தை போலவே அதில் வெற்றியும் பெறலாம். ஆனால், அதனால் எல்லா விதங்களிலும் பாதிக்கப்படப் போவதும் முன்னர் அடி மேல் அடி வாங்கி, அதிலிருந்து மீண்டெழ முடியா-மல் தொடர்ந்தும் தவித்து வரும் அப்பாவி தமிழ் மக்களே!

# இப்படியும் நடக்கிறது



## "போடா நாயே வெளியே!"

## சாதி வெறி பிடித்து சட்டத்தரணி சன்னதம்!

யாழ் நீதிமன்ற வளாக சட்டத்தரணிகள் சட்ட நூல்நிலையத்தில் வைத்து சக சட்டத்தரணி ஒருவரை 'போடா நாயே வெளியே' என கத்தி களேபரம் ஏற்படுத்தியுள்ளார் பிரபல்ய சட்டத்தரணி ஒருவர். தமிழ்த்சேியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இச்சட்டத்தரணி யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்துள் அதிரடியாக நுழைந்து யாழ் நீதிபதிக்கு வகுப்பெடுக்க முற்பட்ட வேளையில் குறிப்பிட்ட சக சட்டத்தரணியிடம் வாங்கிக் கட்டிக்கொண்டதை அடுத்தே யாழ் நீதிமன்ற சட்ட நூல் நிலையத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான சக சட்டத்தரணி ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தாலேயே ஒருமையிலும் நாயே எனவும் விளிக்கப்பட்டார் என்பது தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் யாழ் ஊடகங்கள் அனைத்தும் இந்தச் செய்தியை இருட்டடிப்புச் செய்துள்ளன.

இந்தச் சம்பவத்தின்போது சட்ட நூல் நிலையத்தில் பிரசன்னமாயிருந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த இன்னொரு சட்டத்தரணி இது பற்றி இன்று 'தேனீக்குத் தெரிவிக்கையில், 'யாழ்ப்பாண உயர்சாதியினரின் ஆதிக்கத்திலுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமையில் சாதி வெறி கலைவிரித்தாடுவது ஒன்றும் புதிதல்ல. முன்னாள் யாழ் மாநகர முதல்வர் ஒரு தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தாலேயே ஒரு சாதாரண மாநகர சபை உறுப்பினர் அவரைக் காலால் அடித்திருந்தார். மிக அண்மையில் வவுனியா நகர சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் அங்கு கடமை புரியும் சுத்திகரிப்பு ஊழியரை 'சக்கிலிய நாயே. வெளியாலை போடா' என விரட்டியடித்திருந்தார். இப்போது இப்பிரபல்ய சட்டத்தரணி சக்கிலிய என்ற சொல்லைப் பாவிக்கவில்லை. அவ்வளவுதான். ஆனால் எல்லோருக்கும் அந்த சக சட்டத்தரணி ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேரந்தவர் என்ற காரணத்தால்தான் டேய் நாயே என விளிக்கப்பட்டார் என்பது தெளிவாக விளங்கும். இன்னொரு உயர்சாதி சட்டத்தரணியை அவர் இப்படிக் கூப்பிடுவாரா?. தென் இலங்கையில் சிங்கள காடையர்கள் தமிழர்களை இருந்துபோட்டுத்தான் தாக்கியுள்ளார்கள். ஆனால் எமது சமூகம் இங்கு ஒவ்வொரு நாளும் தாக்குதலுக்கு உள்ளாகிறது. இதனால் நாங்கள் படும் வேதனையும் அவமானமும் இன்னொருவருக்கு விளங்காது' என வருத்தத்துடன் தெரிவித்தர்ர்.

எந்தவித முன் அரசியல் ஈடுபாடோ அனுபவமோ இல்லாத கோடீஸ்வரரான இச்சட்டத்தரணி தென் இந்திய திருச்சபையின் பின்பலத்துடன் பின் கதவால் அரசியலுக்கு வந்தவராவார். அவர் எந்த தேர்தலிலும் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருக்கவில்லை. உண்மையில். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் சிற்றம்பலத்திற்குப் போயிருக்கவேணடிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை எந்தவித கூச்சமும் இல்லாமல் தட்டிப்பறித்தவர் என இவரைப்பற்றிக் கூறப்படுவதுண்டு. அத்துடன் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் அடுத்த தலைவராக பா.உ. சம்பந்தனால் முன்தள்ளப்பட்டு வருபவர் என பகிரங்கமாகவே பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பணமும். பதவியும். பிரபலமும் வெகு இலகுவாக வந்தடைந்ததைத் தொடர்ந்து ஆணவம் தலைக்கேற கூட்டமைப்பின் அடுத்த தலைவர் தானென திரிகிறார் என இதர கூட்டணித் தலைவர்களால் இவர்மீது பல தடவைகள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.


தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுள் ஒருவரான திரு ஆனந்தசங்கரி அவர்கள் இச்சட்டத்தரணியை கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றுமாறு பகிரங்கமாக கோரிக்கை விடும் அளவுக்கு இவரது நடத்தைகள் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. படிப்பறிவற்றவர்களும் வேலையற்றவர்களுமே இயக்க அரசியலுக்குள் நுழைந்திருந்தார்கள் என இவர் அண்மையில் பத்திரிகைப்பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தது பலத்த கண்டனத்திற்குள்ளாகியிருந்தது. தென்னிந்திய திருச்சபையின் ஒரு முகவராகவே செயற்பட்டுவரும் இவர். தென்னிந்திய திருச்சபையின் தலைவர்களுள் ஒருவர் சந்தேகநபராகியிருந்த ஒரு பாலகியை பாலியல் வல்லுறவுசெய்து கொலை செய்ததாக சந்தேகப்பட்டிருந்த வழக்கொன்றில். அச்சம்பவத்தை மூடி மறைக்க உதவினார் என இணைய பத்திரிகைகளால் பகிரங்கமாக குற்றச்சாட்டப்பட்டிருந்தார்.

இச்சட்டத்தரணி இந்த தரக்குறைவான நடத்தைபற்றி ஒழுக்காற்று நடவடிக்கைமேற்கொள்ள வேண்டுமென யாழ் சட்டத்தரணிகள் சங்கம் உயர் நீதிமன்றை வலியுறுத்தவிருக்கிறது.

- நன்றி: தேனீ

# தலைக்கு மேலே செயற்கைக்கோள்கள்


செயற்கைக்கோள் இல்லையேல் ரிவி ஒளிபரப்பே சாத்தியமில்லை. ரிவி சனல்கள் தங்களது நிகழ்ச்சிகளை சிக்னல்கள் வடிவில் உயரே உள்ள செயற்கைக் கோளுக்கு அனுப்புகின்றன. செயற்கைக்கோள் அவற்றை வாங்கி கீழ் நோக்கி அனுப்பும் போது எல்லா இடங்களுக்கும் அந்த சிக்னல்கள் (நிகழ்ச்சிகள்) கிடைக்கின்றன.




கேபிள் ரிவி நடத்துவோர் கிண்ண வடிவ அன்ரெனாக்கள் மூலம் இந்த சிக்னல்களைப் பெற்றுப் பிறகு வீடுகளுக்கு கேபிள் மூலம் ரிவி நிகழ்ச்சிகள் அளிக்கின்றனர். நேரடியாகவும் DTH சேவை அளிக்கும் நிறுவனங்கள் வீட்டு மாடிகளில் சிறிய கிண்ண வடிவ அன்ரெனாக்களைப் பொருத்தி உங்களுக்கு ரிவி நிகழ்ச்சிகள் கிடைக்கும்படி செய்கின்றன.

எங்காவது வீட்டு மாடியில் நிறுவப்பட்டுள்ள கிண்ண வடிவ அன்ரெனாவை கவனித்துப் பாருங்கள். அது வானில் தென் கிழக்கு திசையை நோக்கி அமைந்திருக்கும். அபூர்வமாக ஓரிரு அன்ரெனாக்கள் தென்மேற்கு திசையை நோக்கி இருக்கலாம். இந்த அன்ரெனாக்கள் குறிப்பிட்ட தீர்க்க ரேகைக்கு மேலே அமைந்துள்ள செயற்கைக்கோளைப் பார்த்தபடி அமைந்திருக்கும். அந்த அன்ரெனா சிறிது கூட அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்பி விடக்கூடாது. இது செயற்கைக்கோளுக்கும் பொருந்தும்.

அன்ரெனா நகராதபடி உறுதியாக ஆணி அடித்து மாட்டி விட முடியும். செயற்கைக்கோள் அப்படி அல்ல. எந்த செயற்கைக்கோளானாலும் ஓயாமல் பூமியை சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும். வானில் எந்த செயற்கைக்கோளும் நிலையாக ஓரிடத்தில் நிற்க முடியாது. அது பூமியைச் சுற்றுகின்ற வேகம் குறைந்தாலும் இறுதியில் பூமியில் விழுந்து விடும். அப்படியிருக்கும்போது செயற்கைக்கோள் வானில் எப்படி 'நிலையாக' இருக்க முடியும்?




நம்மைப் பொறுத்த வரையில் அது 'நிலையாக' இருக்கும்படி செய்ய முடியும்.

பூமியானது தனது அச்சில் ஒரு முறை சுற்றி முடிக்க மிகச் சரியாக 23 மணி 56 நிமிஷம், நான்கு வினாடி ஆகிறது. பூமியைச் சுற்றுகின்ற ஒரு செயற்கைக்கோள் பூமியை ஒரு தடவை சுற்றி முடிக்க மிகச் சரியாக இதே நேரத்தை எடுத்துக் கொண்டால் மேலே வானில் குறிப்பிட்ட இடத்தில் தெரிகிற செயற்கைக் கோள் என்றும் அதே இடத்தில் தெரிந்து கொண்டிருக்கும்.

செயற்கைக்கோள் இப்படி ஏன் 'நிலையாக' இருக்க வேண்டும்? கீழே உள்ள ரிவி நிலையம் அனுப்புகின்ற சிக்னல் நேர் கோட்டில் செல்லும். செயற்கைக் கோள் சிறிது நகர்ந்தாலும் சிக்னல் செயற்கைக்கோளை சென்றடையாது வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கும். இவ்விதமாக வானில் குறிப்பிட்ட தீர்க்க ரேகைக்கு மேலே 'நிலையாக' இருக்கின்ற செயற்கைக்கோள்களுக்கு Geostationary Satellite என்று பெயர். இவை பூமிக்கு இணையாக பூமியைச் சுற்றுவதால் தமிழில் இவற்றை இணைசுற்று செயற்கைக்கோள்கள் என்று கூறலாம்.

பூமியை சுற்றுகின்ற எந்த செயற்கைக்கோள் ஆனாலும் அது இயற்கை விதிகளுக்கு ஏற்ப செயல்படுகின்றது. பூமியை சுமார் 400 கிலோ மீற்றர் உயரத்தில் சுற்றுகின்ற செயற்கைக்கோள் பூமியை ஒரு தடவை சுற்ற சுமார் 90 நிமிஷம் எடுத்துக் கொள்ளும். செயற்கைகோள் இருக்கின்ற உயரம்




அதிகரிக்க அதிகரிக்க அது (கெப்ளர் கூறிய விதியின்படி) மேலும் மேலும் மெதுவாக பூமியைச் சுற்றும். உதாரணமாக 20,200 கிலோ மீற்றர் உயரத்தில் அமைந்த ஒரு செயற்கைக்கோள் பூமியை ஒரு தடவை சுற்றி முடிக்க சுமார் 12 மணி நேரம் எடுத்துக் கொள்ளும்.

இந்த இயற்கை விதிகளின்படி பார்த்தால் பூமியை ஒரு தடவை சுற்றி வருவதற்கு 23 மணி, 56 நிமிஷம் 4 வினாடி எடுத்துக் கொள்கின்ற செயற்கைக்கோள் சரியாக 35,786 கிலோ மீற்றர் உயரத்தில் பறப்பதாக இருக்க வேண்டும். தவிர, அது பூமியிலிருந்து எப்போதும் அதே உயரத்தில் இருக்க வேண்டும். பூமியை வட்ட வடிவப் பாதையில் சுற்ற வேண்டும்.

இந்த உயரத்தில் அமைந்தபடி ஒரு செயற்கைக்கோள் பூமியை வட்ட வடிவப் பாதையில் சுற்றும்படி செய்யும்போது அது எந்த வேகத்தில் சுற்றுகிறது என்பது பற்றி நமக்குக் கவலையில்லை. அது எடுத்துக் கொள்கின்ற நேரம் தான் முக்கியம். ஆகவே அந்த செயற்கைக்கோள் அதே உயரத்தில் இருக்கும்படி பார்த்துக் கொண்டால் போதும். இதற்குப் பல வழிகள் உள்ளன.

ரிவி ஒளிபரப்பு, தகவல் தொடர்பு, வானிலைத் தகவல் சேகரிப்பு என பல பணிகளுக்கும் நாம் செயற்கைக்கோள்களை நம்பி இருக்கிறோம். ரிவி சனல்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. எல்லாமே இணைசுற்று செயற்கைக்கோள்களை நம்பி நிற்பவை.

பல்வேறு நிறுவனங்களின் அன்றாடப் பணிகள் இணைசுற்று செயற்கைக்கோள்கள் மூலமே நடைபெறுகின்றன. பங்குச்சந்தை வர்த்தகம் மற்றும் காசுக்கட்டளை அனுப்புவது கூட செயற்கைக்கோள் மூலம் நடக்கிறது. ரயில் பயணத்தின் போது இன்டர்நெற் இணைப்பு பெறவும் இணைசுற்று செயற்கைக் கோள்கள் உதவுகின்றன. இன்று பல நாடுகளைப் பொறுத்தவரை செயற்கைக்கோள்கள் இல்லை என்றால் நாடே ஸ்தம்பித்து விடும் என்ற நிலை உள்ளது.

உலகில் பல நாடுகள் சொந்தமாக இணைசுற்று செயற்கைக் கோள்களைப் பெற்றுள்ளன. ஆனால் பல சிறிய நாடுகளின் தேவைக்காக இன்டல்சாட் என்னும் சர்வதேச நிறுவனம் உயரே இணைசுற்று செயற்கைக்கோள் களைச் செலுத்தியுள்ளது. இவற்றைப் பயன்படுத்தும் சிறிய நாடுகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத நிலவரப்படி பூமியைச் சுற்றி பூமியின் நடுக்கோட்டுக்கு மேலே மொத்தம் சுமார் 401 இணைசுற்று செயற்கைக்கோள்கள் செயல்பட்டு வருகின்றன. மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டால் வானில் அமெரிக்க செயற்கைக்கோள்களின் எண்ணிக்கை தான் அதிகம்.



இதுதவிர, பூமியை வடக்கு தெற்காகச் சுற்றும் செயற்கைக் கோள்கள் நிறையவே உள்ளன. இவை வட தென் துருவங்களுக்கு மேலாக அமைந்துள்ளதால் துருவ செயற்கைக்கோள்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இவை பிரதானமாகப் படம் எடுக்கும் செயற்கைக்கோள்களாகும். சுமார் 600 கிலோ மீற்றர் உயரத்தில் பறக்கின்ற இந்த செயற்கைக் கோள்களின் எடை குறைவு என்பதால் இவை சாதாரண றொக்கெற் மூலம் உயரே செலுத்தக்கூடியன.

ஆனால் எடை மிக்க இணைசுற்று செயற்கைக்கோள்களை உயரே செலுத்திக் கொள்ள விசேடமான கிரையோஜெனிக் றொக்கெற் இயந்திரங்கள் தேவை. இவற்றை வைத்திருக்கும் நாடுகள் பிற நாடுகளின் செயற்கைக்கோள் களை செலுத்தித் தருவதிலும் ஈடுபட்டு நிறைய பணத்தைச் சம்பாதிக்கின்றன.

**- என்.ராமதுரை**

---

**வேவு செயற்கைக்கோளிலிருந்து ஒரு தனி மனிதனை படம் பிடிக்க முடியும். ஆனால் மேலிருந்து படம் எடுக்கப் படுவதால் முகம் தெரியாது. ஒரு கட்டடத்துக்குள் குறிப்பிட்ட பாணியில் உடை அணிந்த ஒருவர் தினமும் சென்று வருகிறார் என்றால் அதைப் படமாக்க முடியும். நீங்களாக அந்த நபருக்கு பாபு என்று பெயர் வைத்து பாபு எந்தெந்த நாளில் அக்கட்டடத்துக்குச் சென்றார் என்பதைப் பதிவு செய்து கொள்ள முடியும்.**

**ஒசாமா பின்லேடனின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க அமெரிக்க வேவு செயற்கைக்கோள்கள் இவ்விதமாக வானிலிருந்து படம் எடுத்தன.**

---

**ஒரு செயற்கைக்கோள் 35,786 கிலோ மீற்றர் உயரத்தில் இருக்குமானால் பூமி சுற்றச் சுற்ற அதுவும் சுற்றும். ஆகவே கீழிருந்து பார்த்தால் அது நிலையாக இருப்பது போலத் தோன்றும்.**

**ஆனால் அது பூமியையும் சுற்றிக் கொண்டிருக்கும். அது பூமியைச் சுற்றினாலும் வேறு எந்த நாட்டின் வான் பகுதியிலும் தென்படாது. அனுப்பிய நாட்டின் வான் பகுதியிலேயே இருந்து வரும்.**


**எல்லா செயற்கைக்கோள்களும் பூமியை சுற்றுகின்றன. ஆனால் ஒரு செயற்கைக்கோள் அது அமைந்த உயரத்தைப் பொறுத்து மெதுவாக அல்லது வேகமாகச் சுற்றும். குறைந்த உயரத்தில் அமைந்த ஒரு செயற்கைக்கோள் வேகமாகச் சுற்றும். அதாவது பூமியை அது விரைவாகச் சுற்றி முடிக்கும். சுமார் 400 கிலோ மீற்றர் உயரத்தில் அமைந்த சர்வதேச விண்வெளி நிலையம் பூமியை ஒரு தடவை சுற்றி முடிக்க 92 நிமிஷம் ஆகிறது. ஆனால் 20,200 கிலோ மீற்றர் உயரத்தில் அமைந்த ஒரு செயற்கைக்கோள் பூமியை ஒரு முறை சுற்றி முடிக்க 12 மணி நேரம் ஆகிறது. மேலும் மேலும் உயரத்தில் அமைந்த செயற்கைக்கோள் மேலும் மேலும் மெதுவாகச் சுற்றுகின்றன. 35,786 கிலோ மீற்றர் உயரத்தில் அமைந்த செயற்கைக்கோள் பூமியை ஒரு முறை சுற்றி முடிக்க 23 மணி 56 நிமிஷம் 4 வினாடி ஆகிறது. பூமி தனது அச்சில் ஒரு தடவை சுற்றி முடிக்க அதே நேரம் தான் ஆகிறது. இதெல்லாம் பூமியை வட்ட வடிவப் பாதையில் சுற்றுகின்ற செயற்கைக்கோள்கள் விஷயத்திலான கணக்கு.**

**பூமியை நீள் வட்டப் பாதையில் சுற்றுகின்ற செயற்கைக்கோளின் வேகம் ஒரே சீராக இராது. பூமியிலிருந்து அது 400 கிலோ மீற்றர் உயரத்தில் இருக்கும் போது அதன் வேகம் அதிகமாக இருக்கும். பூமியிலிருந்து 40 ஆயிரம் கிலோ மீற்றர் உயரத்தில் இருக்கும் போது அதன் வேகம் மிகக் குறைவாக இருக்கும். ஓடிப் பிடித்து விளையாடுகையில் பிடிப்பவருக்கு அருகே இருக்க நேர்ந்தால் ஒருவர் வேகமாக ஓடுவார். பிடிபடாமல் இருக்க அவர் வேகமாகத் தான் ஓடியாக வேண்டும். சற்றே தொலைவில் இருப்பவரும் ஓடிக் கொண்டிருப்பார் என்றாலும் அவர் மெதுவாகவே ஓடிக் கொண்டிருப்பார். செயற்கைக்கோள் விஷயமும் அப்படித்தான்.**

# இந்திய அரசின் உதவித்திட்டம் தமிழ் மக்களுக்கு வரப்பிரசாதம்

(யாழ்ப்பாணம்)

கிடைக்கின்ற உதவிகளை அவை வழங்கப்படும் சந்தர்ப்பத்திற்கு அமைய சரிவரப் பயன்படுத்தப்பட வேண்டுமென ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.



இந்திய அரசின் நிதியுதவியுடன் யுனிசெப் நிறுவன அனுசரணையில் மாணவர்கள் சுய தொழில் முயற்சியாளர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் விநியோகிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த முப்பது வருட கால யுத்தத்தினால் இழந்து நிர்க்கதிக்குள்ளான நிலையில் உதவிகளைப் பெற்று வாழும் நிலைக்கு எம்மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் பெருமளவான உதவிகளை இந்திய அரசே வழங்கி வருகின்றது. இவ்வாறு உதவிகளை வழங்கிவரும் இந்திய அரசிற்கு நன்றிகளை தெரிவிப்பதுடன் கிடைக்கப் பெறுகின்ற உதவிகளை நாம் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் பொதுமக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் வழங்கப்படும் துவிச்சக்கர வண்டிகளை அவை வழங்கப்படும் நோக்கத்திற்கமைய சரிவரப்பயன்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் வலிகிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஐங்கரன் கிராம அலுவலர், பயனாளிகள்,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது வலிகிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 31 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 109 பயனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச ஊடகவியலாளர்களுக்கான ஒன்றுகூடலும், பயிற்சிப்பட்டறையும்

(சிகரம்)

தினமுரசு பத்திரிகையின் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான ஒன்றுகூடலும், பயிற்சிப் பட்டறையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01.07.2012) தினமுரசு விளம்பரப்பிரிவு அலுவலகத்தில் நடைபெற்றது.



காலை 10.00 மணிக்கு தினமுரசு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.சிவகுமார் தலைமையில் ஆரம்பமான பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான ஒன்றுகூடலில் தினமுரசு தனது மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் இந்த காலப்பகுதியில் பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பத்திரிகையின் வடிவமைப்பு, பக்க அதிகரிப்பு மற்றும் ஊடகவியலாளர்களினது ஏனைய தேவைகள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 1.30 மணிக்கு சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையில், செய்தி இனங்காணல், சேகரிப்பு மற்றும் எழுத்தாக்கம் குறித்து விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. இது தொடர்பாக ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட சந்தேகங்களுக்கு உடனுக்குடன் விளக்கமும் அளிக்கப்பட்டது.

பிராந்திய செய்தியாளர்களே ஒரு ஊடகத்தின் முதுகெலும்புகள் என சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் இதன்போது தெரிவித்தார்.

இந்த பயிற்சிப்பட்டறையில் சிகரம் ஊடக இல்லத்தின் விரிவுரையாளரும், தினமுரசு பத்திரிகையின் இணைத்தொகுப்பாளருமான கே.பதிதரன் மற்றும் சிகரம் ஊடக இல்லத்தின் விரிவுரையாளர் வேல்தஞ்சன் ஆகியோரும் செய்தி எழுதுவது தொடர்பான பயிற்சியினை வழங்கினார்கள்.

இந்த பயிற்சிப் பட்டறையில் 40இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். தொடராக நடைபெறவிருக்கும் இந்தப் பயிற்சிப் பட்டறையின் அடுத்த அமர்வு ஜுலை மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# அருகிச்செல்லும் மாம்பழம்



(கிரு - சிகரம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரங்களாக அதிகரித்துகாணப்பட்ட மாம்பழம், பலாப்பழம் போன்றவை அருகிச் செல்லும் காலம் ஏற்பட்டுள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் அதிகமாகக் காணப்பட்ட விலாட்டு மாம்பழம் தற்போது கிடைப்பதில்லை எனவும் இது போன்று கறுத்தக் கொழும்பான்,புளி மாங்காய் போன்றவையும் இனி வரும் 20 நாட்களில் கிடைப்பது அரிதாகிவிடும். மாம்பழத்தின் காலம் முடிவடைந்து வரும் நிலையில் தற்போது பலாப்பழம் சீசன் ஆரம்பமாகியுள்ளது. ஒரு பலாப்பழம் 200 ரூபாவாகவும் சிறிய துண்டுகள் 50 ரூபா முதல் 100 ரூபாவரையும் விற்பனை செய்யப்படு கின்றது.

# இலத்திரனியல் விற்பனை நிலையம் திறந்து வைப்பு

(சாந்தன்-சிகரம்)


யாழ்.ஸ்ரான்லி வீதியில் 'மலபார்' இலத்திரனியல் மின்சார உபகரணங்கள் விற்பனை நிலையமொன்று புதிதாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விற்பனை நிலையத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்றதுடன் உரிமையாளர் எம்.மதீசன் இந்த விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

இங்கு அனைத்துவிதமான இலத்திரனியல் மின்சார உபகரணங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என் அதன் உரிமையாளர் குறிப்பிட்டார்.

# மெய்தான் பாருங்கோ...

## உண்மை முகங்கள்



**எங்கையெண்டாலும்** ஒரு காரியத்தில அல்லாட்டி வேறை ஏதாவது ஒரு விசயத்தில ஏதோவொரு பிழை நடந்திட்டுதெண்டால், நடந்த சம்பவத்தை என்ன ஏதெண்டு தீவிர விசாரியாமல், எழுந்தமானமாக பக்கச் சார்பாகக் கதைச்சுப்போடக் கூடாது பாருங்கோ!

எங்கட சமூகத்துக்குள்ளை சீதனக்கொடுமை எண்டதொரு பிரச்சினை பரவலாக இருக்குதல்லோ! இதுக்குக் காரணம் ஆண்கள்தான் எண்டும், இல்லாட்டி ஆம்புளைப் புள்ளையளைப் பெத்த அவேன்ர அம்மா - அப்பாதான் எண்டும், பெண்ணுக்குப் பெண்ணே எதிரி எண்டும் பல விதமாய்க் கதை இருக்கு. கதையள் எப்பிடி இருந்தாலும், வாழ வேண்டிய வயசு அனைத்தும் தப்பிப்போன நிலையில வதங்கிற பொம்புளையள் இப்பவும் பலர் இருந்துகொண்டு தானிருக்கினம் கண்டியளே!

பொடியளும், பொட்டையளுமாய் கலந்து பெத்த சில தாய், தேப்பன்மார் இருக்கினம் பாருங்கோ! இவையள் தங்கட பிள்ளையளுக்கு அதுவும் மூத்தது ஆம்புளைப் புள்ளையாக இருந்திட்டால், அந்தப் புள்ளைக்கு கலியாண வயசுவர, புறோக்கரைக் கொண்டு ஊருக்குள்ளையோ அல்லாட்டி வெளியிலையோ உடனை 'கலியாணக் கடையை' விரிக்கத் தொடங்கி விடுவினம்.

ஆம்புளைப் புள்ளையை வைத்து பொம்புளைப் பகுதியிட்டை எவ்வளவத்தைக் கறக்க முடியுமோ அவ்வளவுக்குக் 'கறந்தெடுத்து' அந்தப் பகுதியை கருவாடாக்கிப் போட்டு விட்டிடுவினம் பாருங்கோ! அதோடை இன்னுமொரு விசயம் இதுக்குள்ள அடங்கியிருக்குது கண்டியளே!

மூத்தது பொடியனாப் பிறந்து அடுத்தது பொட்டையாக இருந்துதெண்டால், அந்தப் பெட்டையின்ர கலியாண சீதனத்தையும் சேத்துக் கணக்குப் போட்டுத்தான் நல்லாக் கறப்பினம் பாருங்கோ! இப்படியான சில தாய், தேப்பன்மாருடைய செய்கை காரியங்களாலதான் இப்பவும் சீதனக்கொடுமை... ஆணாதிக்கம்... பெண்ணொடுக்குமுறை எண்டு பெண்கள் போராட வேண்டிக் கிடக்கு.

பிரச்சினைக்குரிய யதார்த்தநிலை ஒரு பக்க முகமாகக் காட்சியளித்தாலும், இந்தப் பிரச்சினைக்கு இன்னொரு முகமும் இருக்குது கண்டியளே!

சமூகத்தில பொம்புளையளுக்கு பிரச்சினையள் கனக்க இருக்குதெண்டதை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ளுற அதே நேரத்தில, பெண்கள் தங்களுக்குள்ளயும் நிறைய விழிப்புணர்ச்சி அடைய வேண்டியிருக்கு.

விரலுக்கேற்ற வீக்கத்தோடு... எண்டு சொல்லுவினம். தகுதிக்கு மீறியும், வசதிக்கு மீறியும் ஆசைப்பட்ட நிலையில மனசுக்குள்ள பரந்து விரிஞ்ச கனவுகளோடை... தங்கடை காலத்தைக் கானல் நீராக்குகிற சில பொம்புளையளும் இருக்கினம்தான்.

எனக்குத் தெரிஞ்ச ஒரு பெட்டை இருந்தவள் பாருங்கோ. தாய் - தேப்பனுக்கு இவள்தான் ஒரு பிள்ளை. தேப்பன் ஒரு வருத்தக்காரன் கண்டியளே! பெட்டைக்கு கலியாண வயசு வந்ததும், தேப்பன் பேசிவாற சம்மந்தமெல்லாத்தையும் வேண்டாமெண்டு சொன்னபடி, பெட்டை உயர்படிப்புப் படிச்ச உத்தியோக மாப்பிளையை எதிர்பார்த்துக் கொண்டிருந்திருக்குது. பெட்டையின்ர படிப்புக்கும் தகுதிக்குமான மாப்பிளைக்கு, தேப்பன் ஓடியாடித் திரிஞ்சும் ஒண்டும் கூடாமல் போட்டுது.

காலப்போக்கில தாய் - தேப்பனுக்கு பெட்டைமேல வெறுப்பு வந்திட்டுது. தேப்பனும் கடுமையான நோயாளியாகி கண்ணைமூடிப் போனான். ஆனால் பெட்டை...? முப்பத்தெட்டு வயசு வரைக்கும் தன்ர பிடிவாதத்திலயிருந்து விலகாதவளாக... இப்பவும் தனக்குரிய மாப்பிளைக்காக கனவுகண்டபடி... காலத்தைப் போக்காட்டிக் கொண்டிருக்கிறாள்.

இந்தப் பெட்டையின்ர வாழ்க்கையை வெளியிலயிருந்து பாக்கிற ஆக்களுக்கு, சீதனப்பிரச்சினைதான் இப்பிடி வாழா வெட்டியாக்கியிருக்குது... எண்ட தோற்றத்தைக் காட்டும். ஆனால், உண்மைமுகம் வேறை சிக்கல்களோடையும் இருக்குது எண்டது விளங்குதுதானே?

ஒரு பிரச்சினைக்கு எப்பவும் ஒரு பக்க முகம் கிடையாது. ஆழமாப் பாக்கேக்கை அதே பிரச்சினைக்கு வேறு பல முகங்களும் இருக்கிறது தெரியவருவரும் கண்டியளே! நாங்களும் அதே பழைய வாய்ப்பாட்டு முறையளில சிந்திச்சுக் கொண்டிராமல், எங்கட சிந்தனை முறையளிலையும் மாற்றம் வர வேணும் கண்டியளே! - **சின்னக்குட்டி சின்னச்சாமி.**

## இலங்கைக்கு நிதியுதவி

# முதலிடத்தில் இந்தியா நான்காம் இடத்தில் சீனா

(கொழும்பு)

இலங்கைக்கு வெளிநாட்டு நிதியுதவிகளை வழங்குவதில் கடந்த ஆண்டில் முன்னிலை வகித்த சீனாவை பின் தள்ளிவிட்டு, இந்தியா அந்த இடத்தைக் கைப்பற்றியுள்ளது.

2012 ஆம் ஆண்டின் முதல் மாதங்களிலும் இலங்கைக்கு மொத்தம் 1015 மில்லியன் டொலர் வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைத்துள்ளதாக இலங்கையின் அதிகாரபூர்வ புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இந்த ஆண்டில் இந்தியா மட்டும் 740.8 மில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதில் 275.1 மில்லியன் டொலர் நன்கொடையாகும்.

இலங்கையின் அண்மைய வரலாற்றில் வழக்கத்துக்கு மாறாக கிடைத்துள்ள மிகப் பெரிய நன்கொடை இதுவாகும்.

இதன்மூலம் வடக்கு, கிழக்கு, மலையகத்தில் 49,000 வீடுகள் கட்டப்படவுள்ளன.

ஜப்பான் 12.6 மில்லியன் டொலர் நன்கொடை உள்ளிட்ட 175.3 மில்லியன் டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

மூன்றாவது இடத்தில் நெதர்லாந்து உள்ளது. இந்தநாடு 102.5 மில்லியன் டொலரை




நிதியுதவியாக அளித்துள்ளது.

கடந்த ஆண்டில் முதலிடத்தில் இருந்த சீனா இம்முறை நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. சீனா இந்த ஆண்டில் 32.5 மில்லியன் டொலரையே, இலங்கைக்கு வழங்கியுள்ளது.

# புகை கக்கும் வாகனங்களுக்கு யாழ். மாவட்டத்தில் ஆபத்து



(கொழும்பு)

வாகனங்களை புகை சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கையை வட மாகாணத்திலும் செயற்படுத்த சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

வடமாகாணத்தில் வாகனங்களை புகை சோதனைக்கு உட்படுத்தும் நிலையங்களை அமைப்பதற்கான காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பி.எம்.யூ.டி.பஸ் நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள வாகனங்களை புகை சோதனைக்கு உட்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை செயற்படுத்துவதற்கான நிறுவனங்களை தெரிவுசெய்யும் நடவடிக்கையை இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்ய உத்தேசித்துள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் வாகனங்களை புகை சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முடக்கப்பட்ட இணையத்தளங்களின் கணினிகளை பரிசோதிக்க ஏற்பாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா மிரர் மற்றும் லங்கா எக்ஸ் நியூஸ் ஆகிய இணையத்தள நிறுவனங்களின் கணினிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும், அரசாங்கத்திற்கும் எதிராக போலியானதும், அவதூறானதுமான தகவல்களை இந்த இணையதளங்கள் பிரசுரம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மக்களை திசை திருப்பும் வகையில் செயற்பட்ட இந்த இணையத்தளங்களின் கணினிகளை பரிசோதனை செய்து, உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ், புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கணினிப் பீடத்திடம் குறித்த கணினிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# சுயேச்சைக் குழுக்களிடம் கட்டுப்பணம் ஏற்கும் நடவடிக்கை

(கொழும்பு)

கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேச்சைக் குழுக்களிடம் இருந்து கட்டுப்பணம் ஏற்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.




எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேச்சைக் குழுக்கள் இம் மாதம் 18 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணம் செலுத்த முடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க கூறியுள்ளார்.

தற்போது கலைக்கப்பட்டுள்ள மூன்று மாகாண சபைகளினதும், மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகங்களில் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனு ஏற்கும் நடவடிக்கை எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகள் அண்மையில் கலைக்கப்பட்டன.

இந்த மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

# திருமலையில் பிரெஞ்சுக் கப்பல்

(கொழும்பு)

பிரெஞ்சு கடற்படை கப்பலான "டுபே டி லோம்" நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்திற்கு இத்தகைய விஜயமொன்றை பிரெஞ்சு கடற்படை கப்பலொன்று வந்தமை இதுவே முதல் தடவை என இலங்கை கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வை குறிக்கும் முகமாக இக்கப்பலின் கட்டளைத் தளபதி கமாண்டர் கிறகோல்வ் ஜேர்மைன், இலங்கைக்கான பிரெஞ்சு தூதுவர் கிறிஸ்டைன் ரொசோன் சகிதம் கிழக்குமாகாண கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயந்த கொலம்பகேவை சந்தித்து கலந்துரையாடினர்.

102 அடி நீளமான "டுபே டி லோம்" கப்பலில் 11 அதிகாரிகள் உட்பட 102 கடற்படை வீரர்கள் உள்ளனர். இக்கப்பல் நாளை மறுதினம் இலங்கையில் தரித்துநிற்கும்.

# பொருளாதாரக் கொள்கையில் பிரச்சினை; குற்றம் சாட்டுகிறது மக்கள் ஐக்கிய முன்னணி

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொருளாதாரக்கொள்கை காரணமாக முரண்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளதாக ஆளும் ஐக்கிய முன்னணியின் பங்காளிக்கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது

இந்த கருத்தை அந்த முன்னணியின் செயலாளர் கருணாதிலக்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

பொருளாதார அபிவிருத்தியின் போது சாதாரண மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் வகுக்கப்படுவது அவசியம்.

அவ்வாறு இல்லாத போது அது முழுமையாக முதலாளித்துவத்துவத்தின் பக்கத்துக்கு செல்ல கூடிய வாய்ப்புள்ளது.

எனவே பொருளாதார கொள்கை சாதாரண மக்களை பாதிக்க கூடிய வகையில் அமைந்துள்ளதை மறுக்க முடியாது.

விவசாயத்தை பொறுத்த வரையில் உரிய களஞ்சிய வசதிகள் இல்லாமை காலம் தொட்டு பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

இதேவேளை, நாட்டில் வருமான இடைவெளி பாரிய ஏற்ற தாழ்வுடன் இருப்பதை எவராலும் மறுக்க முடியாது.இதற்கு, பொருளாதார கொள்கை முதலாளித்துவ மட்டத்தை நோக்கி நகர்த்தப்படுகின்றமை காரணமாகும் என்றும் மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் கருணாதிலக்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

## பலதுறைகளும் பின்னடைவதாக குற்றம்சாட்டுகிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக சகல துறைகளும் பின்னடைவைச் சந்தித்து வருவதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியாக பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. கல்வி, விவசாயம், பொருளாதாரம், தனியார் துறை, போக்குவரத்து போன்றவற்றில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எங்கு சென்றாலும் பாரிய வீழ்ச்சியினையே எதிர்கொள்ள வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்.

எனினும் அரசாங்கம் அது குறித்து எந்த பொறுப்பினையும் ஏற்காமல் உள்ளது. இதன் காரணமாக பொது மக்கள் ஐக்கிய தேசிய கட்சியின் கொளகைகளை ஏற்றுக்கொண்டு, தற்போது ஐக்கிய தேசிய கட்சியினை நோக்கி வருகின்றனர் என்றார்.

## மலையகத்தில் அமைக்கப்படும் வீதியால்

# உயிரியல் பல்வகைத் தன்மை அழியும் அபாயம் இருப்பதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

மத்திய மலைநாட்டை ஒட்டியுள்ள கித்துல்கல பிரதேசத்தில் மழைக்காடுகளுக்கு குறுக்காக அமைக்கப்படும் பாலம் மற்றும் வீதியினால் அப்பகுதியின் உயிரியல் பல்வகைத் தன்மை அழிந்துபோகும் அபாயம் இருப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

பெருமளவிலான காடுகள் அழிக்கப்படுவதால் நீர் ஊற்றுக்கள் அழியக்கூடும் என்றும் அதனால் அப்பிரதேசத்துக்கே உரித்தான தாவரங்கள், பறவையினங்கள் மற்றும் விலங்கினங்கள் அழிந்துவிடும் அபாயம் ஏற்படும் என்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிதியம் என்ற அரச சார்பற்ற நிறுவனம் முறைப்பாடு செய்திருக்கிறது.

குறித்த பகுதியில் போக்குவரத்துக்குத் தேவையான சிறந்த வீதிகள் ஏற்கனவே இருக்கின்றபோது, பிரதேச மக்களுக்கு தேவைப்படாத வீதியொன்றை சுமார் 170 இலட்சம் ரூபா செலவில் அரசாங்கம் அங்கு அமைத்துவருவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் செல்வாக்குமிக்க அரசியல்வாதிகளின் சொந்தத் தேவைகளுக்காகவே முக்கிய மழைக்காடுகளுக்கு நடுவே இந்த வீதி அமைக்கப்படுவதாகவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியத்தின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இநத வீதி அமைக்கப்படுவதன் மூலம் மழைக்காடுகளிலிருந்து மரங்கள் வெட்டப்பட்டு கடத்தப்படக்கூடிய ஆபத்து உள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலரும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிதியத்தின் பணிப்பாளர்களில் ஒருவருமான எஸ்.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

கித்துல்கல, மாகந்தாவ காட்டுப்பகுதி உலகில் காணப்பதற்குரிய முக்கிய உயிரினங்கள் மற்றும் தாவர இனங்களுக்கு இருப்பிடமாக இருக்கிறது.

உலகில் வேறெங்கும் காணப்படாத மீன் இனமொன்று இந்தக் காடுகளிலுள்ள நீர்நிலைகளிலிருந்து அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டும் விஸ்வலிங்கம், அந்தப் பகுதி அழிந்து போவதை தடுப்பதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்த இலங்கை அரசாங்கத்தின் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் இயக்குநர் ஹிட்டிசேகர, பிரதேச மக்களின் தேவைக்காகவே வீதி அமைக்கப்படுவதாகக் கூறினார்.

அரசியல்வாதிகளின் தேவை அந்த வீதி அமைப்பில் இருப்பதாகக் கூறப்படுவதையும் அவர் மறுத்தார்.

Grade - 12

GIT

நேரம் : 2 மணித்தியாலம்

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

கல்வி முரசு

02 | T | II

AJ. Nimalrajan
(mcse, ccna)

1. what is tha maximum capacity of a 3.5 inch diskette?
   a) 100 Kilobytes  b) 250 Kilobytes
   c) 1.2 Magabytes  d) 1.44 Megabytes

2. Punched cards were invented by
   a) Joseph marie jacquard  b) Charies babbage
   c) Herman Hollerith  d) Howard Aiken

3. What is the term used to allow you to quickly run a command by pressing a key or combination of keys (i.e.ALT-S)?
   a) Quick keys  b) Shortcut keys
   c) Sticky keys  d) Fast keys

4. Saving a file from the internet onto your computer is called
   a) downloading  b) uploading
   c) transferring  d) storing

5. A Kilobyts in equal to
   a) 1024 bytes  b) 1000 bytes
   c) 1024 bites  d) 1000 bits

6. The ......... operation says if any input is on then the output will be on.
   a) OR  b) NOT  c) NOR  d) XOR

7. An operating system is best described as
   a) Hardware  b) Software
   c) Liveware  d) Shareware

**Answer questions 26, 27 and 28 using the information in the spreadsheet shown below**

| | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|
| 1 | Cultural Food Popularity Results | | | | | |
| 2 | | Number of | | | | |
| 3 | | Boys | Girls | % Boys | % Girls | % Total |
| 4 | English | 267 | 230 | 53.4 | 46.0 | 49.7 |
| 5 | Indian | 123 | 101 | 24.6 | 20.2 | 22.4 |
| 6 | Chinese | 56 | 67 | 11.2 | 13.4 | 12.3 |
| 7 | Thai | 6 | 16 | 1.2 | 3.2 | 2.2 |
| 8 | Italian | 48 | 86 | 9.6 | 17.2 | 13.4 |
| 9 | | | | | | |
| 10 | Total | 500 | 500 | 100 | 100 | 100 |

This spreadsheet records the results of a survey to investigate the food preforences of O/L students. The percentage of bouys prefeences is calculated by dividing the number of votes for a particular type of food by the total number of boys and multiplying by 100. Absolute well refences are used. (Hint the dollar sign (s) is used in the formula to permit copying down or replication.

8. The total number fo boys participating in the survey is calculated by
   a) = Sum (B4:B8)  b) = SUM (A4:B8)
   c) = SUM (A4: A9)  d) = B 4:B8

9. The formula for calculatin the percentage number of boy who prefer chinese food is
   a) =B4 /B10 * 100  b) =B6/BS10* 100
   c) =B6/ B10* 100  d) = B4/BS10* 100

10. The formula for calculating the % total of boys and girls who prefer italian food is
    a) = (B4+C4) /(Bs10+CS10)*100
    b) = (B8+C8) /(BS10+CS10)*100
    c) = D8+E8/2
    d) = Sum ((B8+C8) /(B10+C10)*100

11. Single category of infomation in a databese is a
    a) record  b) field
    c) filter  d) file

12. In mocrosoft word, what tool can be used to check the number of words that have been typed into the document
    a) Spelling and Grammer
    b) Speech
    c) Word count
    d) autosummarise

13. The type of information system which deal with recruitment, placement, performance evaluation, career development is called
    a) Mangament information system
    b) Decision Support System
    c) Human Resource System
    d) Transaction Processing System

14. Wich of these is not part of the System Development Life Cycle (SDLD)
    a) Planning  b) Analysis
    c) Design  d) Auditing

15. Checking a computer program for errors is called
    a) bugging  d) debugging
    c) correcting  d) syntaxing

16. in HTML, what tag is used when you want to creata a name for the page you are creating, so it appears in the title bar of the user's internet brower?
    a) PAGE  b) FORMAL
    c) NAME  d) TITLE

17. Anti - virus software should be used requlariy to check
    a) Floppy disks and hard drives
    b) Files downloaded form the internet, emails
    c) Any new floppy disk inserted into c computer
    d) E-mail attachments, all disks and rewritable CDs

18. What is a disadvantage of Computer Networks?
    a) Speed of sharing data
    b) Cost of individual license copies
    c) Open to hackers
    d) Centralised Software Management

19. Which of the following might be considered ergonomic concerns is not an input device?
    a) Environmental noise
    b) Indoor air quality
    c) An uncomfortable office chair
    d) All of the above

20. Which of the following is not an input device?
    a) Graphics tablet  b) Light pen
    c) Keyboard  d) Visual Display Unit

21. Which of the following is a valid example for an email address?
    a) wgt@gihanbookshop.com
    b) www.hahoo.com
    c) ftp://file.amazon.com
    d) yahoo/emailaddress/user

22. 'ASCII' stands for
    a) American Standard Code for information Interchange
    b) American Standard Coding Intelligent Information
    c) All Stars Code for Information Interchange
    d) All Stars Coding Intellgent Information.

23. If all the inputs are on, the output will be off. This is called
    a) NAND  b) Truth Tables
    c) AND  d) NOR

24. The formula (A3/A7) + (A7*A3) is stored in cell A 10 in a Microsoft Excel worksheet what will be the value displayed in A 10 if the values in A 3 and A 7 are as shown in the following table.

| Cell | Value |
|---|---|
| A3 | 4 |
| A7 | 2 |

    a) 20  b) 15  c) 10  d) 25

25. In Microsoft Access, a report can be created from a
    a) Table  b) Form
    c) Module  d) Macro

26. In Microsoft word, what is the shortcut to find an item in a document
    a) Alt + S  b) Ctrl + F

27. Integration testing involves
a) Verifying that separate systerms can work together
b) Testing individual units of pieces of code for the system
c) Determining if the system satisfies the business requirements
d) Writing the test conditions

28. What is the prefix used in visual Basic for form?
a) form b) frm
c) cmd d) fm

29. In HTML what doed the tag 'TR' stand for?
a) Table Roll d) Table Rank
c) Table Row d) Table Register

30. The best way to position your wrist while typing is
a) resting on the desk
b) wrists arched upward
c) straight across, not resting
d) it doesn't matter

31. 'CPU' stands for?
a) Central Processing Unit
b) Computer Programming Unit
c) Central Programming Utility
d) Computer Processing Utility

32. 1 Byte is equal to
a) 2 bits b) 4 bits
c) 8 bits d) 16 bits

33. What is the easy way to make sure a s sign shows up in a cell that has money values?
a) Type it in every time
b) insert a column and paste is into all the columns
c) Modify the cell type to whole number
d) Modify the cell type to money

34. If you want to view only one record at a time from a database, you can use a (n)
a) Mask b) Form
c) Field d) Object

35. In microsoft word, when you want to view multiple pages at one time you would use:
a) Print Preview b) Normal View
c) Page Layout View d) Outline View

36. The type of information system which maintain records concerning the flow of funds in the firm and produce financial statements is called
a) Finance & Accounting System
b) Decision Support System
c) Executive Support System
d) Transaction Processing System

37. Which of the following is not true for the syntax of a variable in Visual Basic.
a) Must begin with a letter
b) Must not exceed 555 characters.
c) Cannot use a reserved word of visual Basic.
d) Can't contain an embedded period or embedded type declaration character.

38. In HTML, what tag is used when you want to create a horizontal
a) HL b) HR
c) HD d) HA

39. The best position for your mouse is:
a) Next to your keyboard
b) Next to your computer monitor
c) Behind your keyboard
d) On top of your keyboard

40. In Microsoft Powerpoint to have your logo in the same position on every slide, automatically, where do you insert it?
a) Handout master
b) Notes Master
c) Slide Master
d) Logo Master

## Part II

1) A In Excel 2007, I was wondering if there was somehow to link 2 cells based on their values being equal? So if I clicked on cell E9 (which has a value of 41), it would take me to cell C2 (which also has the value of 41), based on the date below.

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| 1 | Apples | 37 | TEST 10 | 36 |
| 2 | Bananas | 41 | TEST 70 | 36 |
| 3 | Oranges | 42 | TEST 71 | 36 |
| 4 | Tangarines | 43 | TEST 72 | 36 |
| 5 | Grapes | 146 | TEST 5C | 36 |
| 6 | Pineapple | 38 | TEST 20 | 37 |
| 7 | Pears | 39 | TEST 30 | 38 |
| 8 | Strawberries | 40 | TEST 40 | 39 |
| 9 | Blueberries | 44 | TEST 73 | 41 |
| 10 | Peaches | 45 | TEST 74 | 42 |

**I need to do this for each cell in column E, so that when I click on the value in column E, it will take me to the matching value in column C.**

B In Excel, I need a formula for the following


IF cell A 1= PRADIP then value will be 100
IF cell A 1= PRAVIN then value will be 200
IF cell A 1= PRATHA then value will be 300
IF cell A 1= PAVAN then value will be 400
You can write an IF statement?

C. In Excel, I want to calculate following using an 'if' formula:

if A 1 < 100, 000 then A 1 * . 1% but minimum 25 and
if A 1 > 1,000,000 then A 1 *.01% but maximum 5000

you can write a nested IF statement?

2. a The diagram below shows the main components of a computer system. Write in the space provided below the name of the parts marked 1 to 8.




1) ..................................
2) ..................................
3) ..................................
4) ..................................
5) ..................................
6) ..................................
7) ..................................
8) ..................................

3.

a) What is the internet?
..................................
..................................


b) what do you need to get connected to the internet?
..................................
..................................

c) What sort of facilities is currently being provided?
..................................
..................................

d) The internet has now become so large that illegal activities are obviously taking place. Should access to such a network be restricted? If not, how can we curb the activities of criminals using the net?
..................................
..................................

e) What does HTTP stand for?
..................................
..................................

# சீன - இந்திய எல்லையில் பாதுகாப்பு அதிகரிப்பு



(சென்னை)

இந்திய எல்லைப் பகுதியில் சீனாவின் அட்டூழியம் அதிகரித்து வருவதால் பாதுகாப்புப் படையினரை அதிகப்படுத்தி கண்காணிக்குமாறு இராணுவ தலைமை தளபதிக்கு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோணி உத்தர விட்டுள்ளார்.

வட கிழக்கு மாநில எல்லைப்பாதுகாப்பு, உள்கட்டமைப்பு குறித்த ஆய்வுக்கூட்டம் புதுடில்லியில் நடந்தது.


இதில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி, இராணுவ தலைமை தளபதி பிக்ராம் சிங், இராணுவ அமைச்சக செயலர் சசிகாந்த் சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட கிழக்கு எல்லைப் பகுதியில் பாதுகாப்பு உள்கட்டமைப்பு விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.


இதற்கு முன்பு, இராணுவ தலைமை தளபதியாக இருந்த வி.கே.சிங், இராணுவத்திற்கு கூடுதலாக ஆயுதங்கள் தேவை எனவும் இந்திய இராணுவத்தை நவீனப்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார்.

அதன்படி, சீன இராணுவத்தின் நடமாட்டம் இந்திய எல்லைக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக புகார் எழுந்தது. இதனை தற்போதைய இராணுவ தலைமை தளபதியான பிக்ராம் சிங், முன்னர் கிழக்கு கொமாண்டராக இருந்த போதே கூறி வந்தார்.

இதைத்தொடர்ந்து இந்திய-சீன எல்லையான லடாக் பகுதியில் ஆளில்லா கண்காணிப்பு வாகனங்கள், ஹெலிகப்டர்கள் வாயிலாக கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்துமாறும் கூடுதலாக ஜவான்களை நிறுத்துமாறும் மலைத் தொடர்களில் நவீன தொழில்நுட்ப கருவி மூலம் கண்காணிக்குமாறும் அந்தோனி உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.




# 9 அமைச்சர்களின் இராஜினாமா வாபஸ் கர்நாடக அரசியலில் புதிய திருப்பம்



(புதுடில்லி)

கர்நாடக முன்னாள் முதல்வர் பி.எஸ். எடியூரப்பா ஆதரவு அமைச்சர்கள் 9 பேரும் தங்களது இராஜிநாமா கடிதங்களை நேற்றுமுன்தினம் திரும்பப் பெற்றதனால் கர்நாடக அரசியலில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கர்நாடக முதல்வர் பதவியிலிருந்து சதானந்த கவுடாவை நீக்கக் கோரி, எடியூரப்பா ஆதரவு அமைச்சர்கள் 9 பேர் ஜூன் 29 ஆம் திகதி தங்கள் பதவிகளை இராஜிநாமா செய்தனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண பா.ஜ.க. மேலிடம் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் தர்மேந்திர பிரதானை பெங்களூருக்கு அனுப்பி வைத்தது.

கடந்த 30 ஆம் திகதி பெங்களூர் வந்த அவர், கர்நாடக முதல்வர் சதானந்த கவுடா, முன்னாள் முதல்வர் எடியூரப்பா, பா.ஜ.க மாநிலத் தலைவர் கே.எஸ்.ஈஸ்வரப்பா, இராஜிநாமா செய்த 9 அமைச்சர்களிடமும் தனித்தனியே கருத்துக்களைக் கேட்டறிந்தார். ஆனால், அவர் மேற்கொண்ட முயற்சி வெற்றியைத் தரவில்லை.

இந்நிலையில், 9 அமைச்சர்களும் இராஜிநாமா கடிதங்களை திரும்பப் பெற்றால் மட்டுமே கோரிக்கைகள் குறித்துப் பேச்சு நடத்த முடியும் என பா.ஜ.க மேலிடம் எடியூரப்பா கோஷ்டியினருக்கு எச்சரிக்கை விடுத்தது.

இதனிடையே கர்நாடக முதல்வர் மாற்றம் தொடர்பான கோரிக்கையை மூன்று நாள்களில் பரிசீலிப்பதாக மேலிடம் உறுதி அளித்து, டில்லி வருமாறு கேட்டுக் கொண்டதால் 9 அமைச்சர்களும் தங்கள் இராஜிநாமா கடிதங்களைத் திரும்பப் பெற முடிவு செய்துள்ளதாக ஜெகதீஷ் ஷெட்டர் கூறினார்.

# ஜனாதிபதி தேர்தலில் வெற்றிவாகை சூடுவேன்

(புதுடில்லி)

நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் வெற்றிவாகை சூடுவேன் என்று அ.தி.மு.க. தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் களமிறங்கியுள்ள புருனோ அஜிடோக் சங்மா கூறியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டியளித்த சங்மா கூறுகையில், அமெரிக்காவில், கறுப்பர் இனத்தை சேர்ந்த பாரக் ஒபாமா அதிபர் ஆகும் போது, இந்திய திருநாட்டில், பழங்குடியினத்தை சேர்ந்த நான் ஜனாதிபதி ஆக முடியாதா?

நான் இதுவரை நடைபெற்றுள்ள அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட்டுள்ளேன்.



இதுவரை, நான் போட்டியிட்ட எந்த தேர்தலிலும் தோலவியடையவில்லை. ஒவ்வொரு தேர்தலின் போதும், எனக்கு ஓட்டு வித்தியாசம் அதிகரித்துள்ளது. இதற்கு மக்கள் மற்றும் கடவுளின் கிருபைதான் காரணம்.

அ.தி.மு.க, பாரதிய ஜனதா உள்ளிட்ட கட்சிகளுடன் ஆதரவைப் பெற்ற நான், தேர்தலில் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக உள்ளது என்று அவர் கூறினார்.

# எல்லைப் பிரச்சினை குறித்து இந்தியா - பாகிஸ்தான் பேச்சு

(புதுடில்லி)

எல்லைப் பிரச்சினை குறித்து இந்தியா-பாகிஸ்தான் பேச்சு வார்த்தை தொடங்கியுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் தற்போது வரை அமுலில் உள்ள போது சில நேரங்களில் ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் துப்பாக்கிச் சண்டை நடத்துகின்றது.

இந்நிலையில், இரு நாட்டு எல்லைப் பாதுகாப்புப்படை தலைவர்கள் மட்டத்திலான பேச்சு வார்த்தை நேற்றுமுன்தினம் புதுடில்லியில் தொடங்கியது.

நான்கு நாட்கள் நடைபெறும் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள பாகிஸ்தான் எல்லைப் பாதுகாப்புப்படை (பி.எஸ்.எப்) தலைவர் மேஜர் ஜெனரல் ரிஸ்வான் அக்தர் தலைமையில் 18 பேர் கொண்ட குழு, நேற்று முன்தினம் வாகா எல்லை வழியாக இந்தியா வந்தனர்.

அவர்களை, இந்திய எல்லைப் பாதுகாப்புப்படை (பி.எஸ்.எப்) இயக்குனர் ஜெனரல் யு.கே. பன்சால் வரவேற்றார். இரு தரப்பிலும் இந்திய எல்லைப் பாதுகாப்பு தலைமையகத்தில் நடந்து வருகிறது.

அப்போது எல்லைப் பிரச்சினையில் ஏற்படும் போதை மருந்து கடத்தல், பயங்கரவாதிகள் ஊடுருவல் உள்ளிட்ட சிக்கல்களுக்கு தீர்வு எட்டப்படலாம் என்றும் ஜூலை 5 ஆம் திகதி வரை நடக்கும் இறுதி பேச்சுவார்த்தையில் இரு தரப்பிலும் முக்கிய உடன்பாடுகள் கையெழுத்தாகலாம் எனவும் தெரிகிறது.

மீண்டும் தரைவழி போக்கு வரத்து.

இதற்கிடையே கடந்த ஜூன் 11 ,14 ஆம் திகதிகளில் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அருகே இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 2 ஜவான்கள் இறந்தனர். இதனால் பூஞ்ச் மாவட்டம் வழியாக பாகிஸ்தானுக்கு பேருந்து போக்கு வரத்து நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் நேற்று மீண்டும் பேருந்து போக்குவரத்து தொடங்கியது. இதில் 90 பயணிகள் சென்றனர்.

# அப்துல் கலாம் போலி வேஷக்காரர் பால்தாக்கரே பகிரங்க குற்றச்சாட்டு



(புதுடில்லி)

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் போலி வேஷக்காரர், சுயநலமிக்கவர் என்று சிவசேனா தலைவர் பால் தாக்கரே கடுமையாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி அப்துல் கலாம் டர்னிங் பாயிண்ட்ஸ் என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

தான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் முக்கிய முடிவுகள் எப்படி எடுக்கப்பட்டது குறித்து கலாம் இப்புத்தகத்தில் எழுதியுள்ளார்.

இதன் அடிப்படையில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்றதையடுத்து சோனியாவை தாம் பிரதமராக்க விரும்பியதாகவும் இருப்பினும் சோனியா கேட்டுக்கொண்டதன் காரணத்தினால் மன்மோகனை பிரதமராக்கியதாகவும் எழுதியுள்ளார்.

இதற்கு நாடு முழுவதும் அரசியல் தலைவர்கள் மத்தியில் எதிர்ப்பு எழுந்து வருகின்றன. இதுகுறித்து சிவசேனா தலைவர் பால்தாக்கரே, இத்தாலிய நாட்டை சேர்ந்தவரான சோனியா காந்தியை இந்தியாவின் பிரதமராக்குவதில் ஆட்சேபனை இல்லை என கலாம் கூறியிருப்பது அவரை கேலிக்கு ஆளாக்கியுள்ளது.

அவர் ஜனர்திபதியாக இருந்த காலத்தில் அவர் மீது அனைவரும் மரியாதை வைத்திருந்தனர். அவரது பதவி காலம் முடிவடைந்தாலும் அவர்மீதான மதிப்பும் மரியாதையும் குறையாமல் இருந்தது.

மேலும், கலாமின் அனுமதி கிடைக்காததால்தான் சோனியா பிரதமராகவில்லை என மக்கள் நினைத்திருந்தனர்.

ஆனால் அவரது புத்தகத்தில் இதுகுறித்து அவர் எழுதியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 10 வருடங்களாக அவர் இதனை வெளியிடாதது அவர் சுயநலமிக்கவர் மற்றும் போலி வேஷக்காரர் என்பதை காட்டுகிறது என கூறியுள்ளார்.




கோவை, காந்திபுரம் பகுதியில் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகள் மற்றும் சிசுக்கொலைகளை எதிர்த்து பாடசாலை, கல்லூரி மாணவிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியைக் காணலாம்.

# பாகிஸ்தானில் மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படலாம்

## -முன்னாள் ஜனாதிபதி முஷாரப்



பாகிஸ்தானில் மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படும் நிலை உள்ளதாக அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அறிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் வசித்து வரும பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப், அமெரிககாவின் கொலராடோ மாகாணத்தில் உள்ள ஆஸ்பென் நகரில் உரை நிகழ்த்தினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், பாகிஸ்தான் பழைய நிலைக்கு(இராணுவ ஆட்சி) திரும்பிக் கொண்டிருக்கிறது. நாட்டைக் காப்பாற்றுவதற்கு மக்கள் இராணுவத்தையே மீண்டும் நாடுகின்றனர்.

பாகிஸ்தானின் அரசியல் சட்டம் மிகவும் புனிதமானது. எனினும் அதற்கு மாறாக(இராணுவ ஆட்சி) எதையாவது செய்தால் மட்டுமே நாட்டைக் காப்பாற்ற முடியும். நாம் அதைச் செய்யப் போகிறோமா? அல்லது அரசியல் சட்டத்தைத் தாங்கிப் பிடித்து, நாட்டைக் கவிழ விடப் போகிறோமா?


நான் எனது சொந்த விருப்பப்படி தாய்நாட்டிற்கு நிச்சயம் திரும்புவேன். என்னை இன்டர்போல் மூலம் கைது செய்ய வேண்டும் என்று பாகிஸ்தானில் பலராலும் கோரப்படுகிறது.

எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. இந்த ஆண்டில் தேர்தல் நடக்கும் என்று நான் கருதுவதால் நிச்சயம் நாடு திரும்புவேன். கைதாவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

உயிருக்கு ஆபத்து என்றாலும் அதைப் பொருட்படுத்தாமல் நாடு திரும்புவேன் என்று கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

# ஹோர்மூஸ் கால்வாயை மூட ஈரானில் புதிய சட்டம்



ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது என்று குற்றம் சுமத்தியதுடன், அமெரிக்கா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் பொருளாதார தடையையும் விதித்துள்ளன.


இந்நிலையில் ஈரானின் தேசிய பாதுகாப்பு குழு மற்றும் வெளியுறவு கொள்ளை ஆணையக தலைவர் இப்ராஹிம் அகாஹ் முகம்மாதி, ஈரான் நாடாளுமன்றத்திற்கான மஜிலிசில் மசோதா ஒன்றை கொண்டுவந்தார்.

அதில் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி, பொருளாதாரத் தடை விதித்துள்ளனர். அதற்கு பதிலடியாக பாரசீக வளைகுடாவின் ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள ஹோர்மூஸ் கால்வாயினை மூட வேணடும் என வலியுறுத்தினார். இதற்கு 290 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 100 பேர் ஒப்புதல் அளித்தனர்.

ஹோர்மூஸ் கால்வாய் வழியாகவே ஆசிய, ஐரோப்பிய நாடுகள் தங்களது எண்ணெய் வர்த்தகத்தை மேற்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் ஏற்பட்ட விபத்தில் 15பேர் உடல் கருகிப் பலி

சீனாவில் ஏற்பட்ட விபத்தில் 15பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர். சீனாவின் வடக்குப் பகுதி கடற்கரை நகரம் டையான்ஜினில் பிரம் மாண்ட வர்த்தக வளாகத்தில் நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அடுத்த சில விநாடிகளில் தீ பரவி, அந்த வளாகம் முழுவதும் எரிந்தது.



அந்தப் பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. தகவல் அறிந்து தீயணைப்பு வண்டிகள் வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன. மீட்பு குழுவினர் கட்டடத்துக்குள் இருந்தவர்களை ஏணி, கிரேன்கள் மூலம் மீட்பதில் ஈடுபட்டனர். சுமார் 7 மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீயில் கருகி பலியான 15 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 20 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மின் கசிவால் தீப்பற்றியதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# பயங்கரவாத நாடாக பாகிஸ்தான் மாறப்போகிறது

## -எச்சரிக்கிறது அமெரிக்கா




ஆப்கானிஸ்தான் விடயத்தில் பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுகிறது என அமெரிக்கா குற்றம் சுமத்தி உள்ளது.

ஹக்கானி பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளை துண்டிக்குமாறு அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால் அமெரிக்காவின் நிதி உதவியை பெறுவதற்காக நடவடிக்கை எடுப்பதுபோல் நடித்து விட்டு, ஆப்கான் தலிபான்களுக்கு பாகிஸ்தான் உதவுகிறது என்று நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

'முடங்கிய, குழப்பமான பாகிஸ்தான்' என்ற தலைப்பிலான தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது: கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தும் விடயங்களை பாகிஸ்தான் தொடர்ந்து நிராகரித்து வருகிறது.

பாகிஸ்தானிலிருந்து ஆப்கானுக்குச் சென்று அமெரிக்க படையினர் மீது தாக்குதல் நடத்தும் பயங்கரவாதக் குழுவைக் கட்டுப்படுத்தமாறு பலமுறை கோரியும் அதை கேட்கவேயில்லை.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது என்பது ஒரு பொது நோக்கத்துக்கான விஷயம் என்பதை பாகிஸ்தான் உணர வேண்டும். ஆனால் பாகிஸ்தானின் இராணுவ தலைவர்கள் இதை உணர்வதேயில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஹக்கானி குழுக்களுடனான தொடர்பை துண்டிதத்துக் கொள்ளவும் தயாராக இல்லை. இந்தத் குழுக்கள்தான் ஆப்கானில் அமைதியை ஏற்படுத்த அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு மிகப் பெரும் சவாலாக விளங்குகின்றது என்றும் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானால் நாளுக்கு நாள் அரசியல் சூழல் மிகவும் மோசமாகி வருகிறது. மொத்தத்தில் அரசு எந்திரம் செயலிழந்து விட்டது.

இதனாலேயே எல்லை விவகாரத்தில் அவசரமான முடிவு எடுக்க வேண்டியிருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் பாகிஸ்தான் ஹக்கானி குழுவுடன் தொடர்பை தொடர்ந்து வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

# ஜப்பான் வரியை உயர்த்தியதால் 52 உறுப்பினர்கள் இராஜினாமா



ஜப்பானில் தற்போது ஜனநாயகக் கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது பிரதமராக யோசிஹிகோ நோடா பதவி வகிக்கிறார்.

இந்நிலையில் அவர் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க 10 சதவீதம் விற்பனை வரியை உயர்த்தத் தீர்மானித்தார்.

இதற்கான மசோதா நாடாளுமன்ற கீழ் சபையில் தாக்கல் செய்து நிறைவேறியது. நாடாளுமன்ற மேல் சபையில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

இந்நிலையில் ஆளுங்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இஷிரோ ஒசாவா இந்த வரி உயர்வுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்.

நேற்று முன்தினம் அவரும், அவருடைய ஆதரவாளர்களான 52 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆளுங்கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். இதில் கீழ்சபை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேரும், மேல்சபை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12 பேரும் ஆவார்கள்.

இதனால் மொத்தம் 480 உறுப்பினர்களை கொண்ட கீழ்சபையில் ஆளுங்கட்சியின் பலம் 289இல் இருந்து 249 ஆக குறைகிறது. தனி பெரும்பான்மைக்கு மேல் அதிக இடம் இருப்பதால் தற்போது ஆட்சிக்கு ஆபத்து எதுவும் இல்லை.

# ரஷ்ய விண்வெளி வீரர்கள் பூமிக்குத் திரும்பினர்



அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு கூடம் அமைத்து வருகின்றன. அதற்கான பணி நடந்து வருகிறது. இந்த நிலையில் ரஷ்யாவின் சோயுஷ் டி.எம்.ஏ. -03 எம் என்ற விண்கலத்தின் மூலம் ரஷ்யாவைச் சேர்ந்த ஒலேக் கொனென்கோ, டொனால்டு பெட்டிட், நெதர்லாந்தைச் சேர்ந்த ஆண்ட்ரூ குயி பெர்ஸ் ஆகிய 3 வீரர்கள் விண்வெளிக்கு புறப்பட்டு சென்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் 21ஆம் திததி கஜகஸ்தானில் உள்ள ரஷ்யாவின் பைகானூர் விண்வெளித் தளத்தில் இருந்து இவர்கள் புறப்பட்டனர். 2 நாள் பயணத்துக்கு பிறகு சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்தை அடைந்தனர். அங்கு இவர்கள் ஆய்வுக்கூடம் அமைக்கும் பணியை மேற்கொண்டனர். இந்த நிலையில் 193 நாட்களுக்கு பிறகு அங்கிருந்து புறப்பட்டனர். இந்த நிலையில் இவர்களது சோயுஷ் விண்கலம் மாஸ்கோ நேரப்படி நேற்று முன்தினம் இரவு 12.14 மணிக்கு கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெளி தளத்தில் பத்திரமாக தரை இறங்கியது.

இதைத் தொடர்ந்து அதில் பயணம் செய்த 3 வீரர்களும் பத்திரமாக திரும்பினார்கள். சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்தில் ஜோ அகாபா, கென்னடி படால்கா, செர்ஜி ரெவின் ஆகிய 3 பேர் தங்கியுள்ளனர். அவர்கள் வருகிற 14ஆம் திகதி பூமிக்கு திரும்புகின்றனர். அவர்களை தொடர்ந்து அமெரிக்கா நாசா விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் யூரி மலர் சென்கோ (ரஷ்யா) அகினோ ஹோஷிட் (ஜப்பான்) ஆகிய 3 பேரும் சோயுஷ் விண்கலம் மூலம் புறப்பட்டு செல்கின்றனர். அங்கு வருகிற நவம்பர் மாதம் வரை தங்கி பணிபுரிகின்றனர்.

# யாழ். உயர் தொழில் நிறுவனம் மூடவேண்டிய நிலைக்கு சென்றுள்ளது

## மாணவர் சமூகம் கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும்போது உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய வர்த்தக, முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரிகளைப் புறக்கணித்தமையானது எதிர்காலத்தில் யாழ். மாவட்ட உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தை மூடப்பட வேண்டிய நிலைக்கு இட்டுச்சென்றுள்ளதாக யாழ். மாவட்ட உயர் தொழில்நுட்ப கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சமூகம் கவலை தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக குறித்த மாணவ சமூகத்தினர் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமது நியமனம் இரத்தானது குறித்து உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர் ஆகியோரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர்கள் குறிப்பிட்ட சில தொழிற்தகமைகளுக்கான நியமனத்தின் போது மட்டுமே எமது பட்டதாரிகள் உள்வாங்கப்படலாம் எனவும் தற்போது வழங்கப்படும் நியமனத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட முடியாது எனவும் கூறினார். அப்போது எமது பிரதிநிதிகள் ஏனைய மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் MNDA, HNDM பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியபோது ஏனைய மாவட்ட நியமனங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளதாகக் கூறியிருந்தார்கள் எனினும் அதன் பின்னரும் ஏனைய மாவட்ட நியமனங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளதாகக் கூறியிருந்தார்கள். எனினும் அதன் பின்னரும் ஏனைய மாவட்டங்களில் 2010, 2011 HNDA, HNDM பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2005 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 45 ஆயிரம் பட்டதாரிகள் நியமனத்தின்போது எமது பட்டதாரிகள் நியமனத்திற்குள் உள்வாங்கப்பட்டிருந்தனர். அத்தோடு 2008 ஆம் ஆண்டு ஆசிரிய நியமனத்திலும், 2011 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை பட்டதாரி நியமனத்திலும் உள்வாங்கப்பட்டனர். இவ்வாறு இருக்கையில் 2012 ஆம் ஆண்டு பட்டதாரி நியமனத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் எமது பட்டதாரிகள் புறக்கணிககப்பட்டனர்.

## முன்னாள்...

ஆற்றிய மிக சொற்பளவிலான தமிழ் அதிகாரிகளில் ஒருவராக குருபரன் கருதப்படுகின்றார். யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட சில வாரங்களில் அதாவது 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் குருபரன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் குருபரன் தனது குடும்பத்தாருடன் கனடாவில் புகலிடம் கோரியிருந்தார். தனக்கும், தனது குடும்பத்திற்கும் ஆபத்து இலங்கையில் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தினால் புகலிடம் கோருவதாக அவர் தெரிவித்திருந்தார்.

எனினும், இந்தப் புகலிடக் கோரிக்கையானது யதார்த்தமானதாக கருதமுடியாது என கனேடிய நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றச் செயல்களுடன் குறித்த அதிகாரிக்கு தொடர்பு இருக்கலாம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனவே, குருபரனினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

குறித்த முன்னாள் கடற்படை அதிகாரியும் அவரது. குடும்பத்தினரும் இலங்கைக்கு நாடுகடத்தப்படக் கூடுமெனத தெரிவிக்கப்படுகிறது.

## பட்டதாரி...

இவ்வாண்டு பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியோர் என்ற காரணத்தால் நியமனம் வழங்கப்படாதவர்கள், கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பிற்கான நிறைவுச்சான்றி தழ் வழங்குவது தாமதமடைந்தமையால் பயிலுனர் பட்டதாரி நியமனத்திற்கு விண்ணப்பிக்க முடியாதவர்கள், கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தில் பட்டப்படிப்பை தொடர்ந்தவர்கள், கற்கையாண்டுக்கான பாடங்களை பூர்த்தி செய்யாதவர்கள் என பல்வேறு காரணங்களையுடைய பட்டதாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினிடம் (உதயன்) மேற்படி விடயம் தொடர்பான மகஜர் ஒன்றினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கென நேற்றைய தினம் கையளித்திருந்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், பயிலுநர் பட்டதாரி நியமனம தொடர்பாக பட்டதாரிகளின் பதிவுகள் பெறப் பட்டு, அவர்களது கோரிக்கைகள் கவனத்திலெடுக்கப்படும் பட்டதாரிகளினது கோரிக்கையினை சாதகமான வகையில் பரிசீலிப்பதாகவும், பட்டதாரிகளின் நியமனம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன், அமைச்சரினால் மட்டுமே பட்டதாரிகளிற்கான தீர்வினை பெற்றுத்தர முடியும் எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிழக்கு, சப்ரகமுவ பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறிய நூற்றுக் கணக்கான பட்டதாரி மாணவர்கள் இதன்போது கலந்து கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஊழலை...

கல்லூரி அதிபர் திருமதி ரஜனி முத்துக்குமாரன், பிரதி அதிபர் திருமதி செல்வகுணாளன் ஆகியோரும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் சட்டபூர்வ மற்றது, ஊழல் மிகுந்தது. கடந்த அதிபர் காலத்தில் நிறைய விடயங்களில் தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளது.

இதனைத் தற்போதைய அதிபர் தடுக்க முனைந்தபோது அதிபருக்கும் பழைய மாணவர் சங்கத்திற்கும் இடையில் முரண்பாடுகள் ஆரம்பித்திருந்தன. இதன் பின்னணியிலேயே தற்போதைய புதிய அதிபர் நியமனம் நிகழ்ந்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தற்போதைய அதிபர் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் அதிபரைவிட தாம் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுவதில் எதுவித உண்மையும் இல்லை எனவும் குறிப்பிட்ட அவர்கள், பொதுவாக இவ்வாறான நியமனங்கள் கல்வியமைச்சின் செயலாளரினாலேயே வழங்கப்படுகின்றது. புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரிடம் கல்விச்சேவை ஆணைக்குழுவின் கடிதம் மட்டுமே உள்ளது. கல்வியமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதம் எதுவும் இல்லை. திட்டமிடப்பட்டு உயரதிகாரிகள் மட்டத்தில் இத்தகைய பிழை விடப்பட்டுள்ளது. அதன்படி யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வராசா, திருமதி ரஜனியிடம் அதிபர் பதவியைத் தொடருமாறு தொலைபேசியில் அறிவித்திருந்தார்.

வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சட்ட பூர்வமற்றது. ஊழல் மிகுந்தது கடந்த அதிபர் காலத்தில் தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளது எனவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

கல்லூரியின் கணினிக்கூட நிர்மாணத்திற்கு செலவிடப்பட்ட நிதி கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால கல் லூரிக்கு வழங்கப்பட்ட பத்து இலட்சம் ரூபா நிதிக்கு என்ன நடந்தது என்று காட்டப்பட வில்லை போன்ற குற்றச்சாட்டுக்கள் பழைய மாணவர் சங்கத் தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. முன்னாள் அதிபர் திருமதி க.பொன்னம்பலம் காலத்தி லேயே பழைய மாணவர் சங்கம் ஊழல் புரிந்தது. தற்போதைய அதிபர் இதன் செயற்பாடுகளைத் தடுக்கவே முரண்பாடு தொடங்கியதாகவும் தெரிவித்தனர்.

மேலும் தற்போதைய அதிபர் திருமதி ரஜனி முத்துக்குமாரன் இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் III (பொது) சேர்ந்தவர். வேமபடி பிரதி அதிபர் இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் II/III இற்கு உரியது. ஆகவேதான் இவர் பிரதி அதிபராகக் கல்வியமைச்சால் 2009 இல் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

நேற்று முன்தினம் கல்லூரிக்கு வந்த புதிய அதிபர் பிற்பகல் 1.30 மணியளவில் முறையான அனுமதியின்றித் தினவரவுப் பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளார். இதனைப் பிரதி அதிபர் செல்வக்குணாளன் உறுதிப்படுத்தியுள்ளார்.

புதிய அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் யாழ். இராமநாதன் கல்லூரியில் ஒன்பது மாதங்கள் மட்டுமே அதிபராக இருந்திருக்கின்றார். வடக்கு மாகாணப் பாடசாலையில் மூன்று வருடங்கள் தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றியிருந்தால் மட்டுமே வேறுபாட சாலைக்கு அதிபராக முடியும் என்ற ஒழுங்கு பின்பற்றப்படுகின்றது. அத்துடன் அந்தப் பாடசாலையில் இருந்தும் அவர் விடுவிக்கப்படவில்லை எனவும் வேமபடி மகளிர் கல்லூரியின் அபிவிருத்திக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் நலன் விரும்பிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். (பா)

# நந்திக்கடல் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நிறுத்தப்படவேண்டும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நந்திக்கடல் நீரேரிப் பகுதியில் சட்டத்திற்கு முரணான வகையில் தங்கூசி மற்றும் ஏனைய நூல் வகைகளைப் பயன்படுத்தி தொழிலை மேற்கொள்வோர் உடனடியாக நிறுத்திக்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அறிவித்துள்ளார்.

நந்திக்கடல் நீரேரிப் பகுதியில் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் வலைப்படுக்கை போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றது. இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையெனில் வலைப்படுக்கை மேற்கொள்ளும்போது பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் சம்மேளத்துடன் கலந்துரையாடி எதிர்வரும் 9 ஆம் மாதத்திற்குப் பின்னர் நந்திக்கடல் கடல்நீரேரியில் ஓரளவு வற்றியபின் வலைப்படுக்கை மேற்கொள்வதற்கான அனுமதி வரும்வரை வலைப்படுக்கை நடவடிக்கைகளை மீனவர்கள் நிறுத்தவேண்டும். அனுமதி கிடைத்து குறித்த மாதத்திற்குப் பின்னர் அதனை மேற்கொள்வது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (04)

# இராஜதந்திர ரீதியாகவே இந்தியாவை அணுகவேண்டும்

## ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு

இந்தியாவின் தற்போதைய நடவடிக்கைகளை இராஜதந்திர ரீதியாகவே அணுகவேண்டுமென ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சியை நிறைவுசெய்த 140 அதிகாரிகளின் அணி வகுப்பு நிகழ்வில் பங்கேற்ற அவர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, விடுதலைப் புலிகளுக்கு எதிராக இறுதிக்கட்ட போரை வடக்கு, கிழக்கில் முன்னெடுத்தபோது, போர் நடவடிக்கைகளை நிறுத்துமாறு வெளிநாடுகள் பல ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்தன. எனினும் இந்தியா அவ்வாறு அழுத்தம் கொடுக்காமல், மிகவும் அமைதியாக அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புகளை வழங் கியது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## வற்றியது...

தற்போதைய வறட்சி நிலைமையில் குளத்தில் குறிப்பிட்ட அளவு நீர் மட்டத்தைப் பேணுவதும், செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்காணிகளுக்கு நீர் வழங்குவதும் கடினமான காரியமாகியிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் சிவபாதசுந்தரம் விகிர்தன் தெரிவித்தார்.

காலபோக நெற்செய்கைக்கென வங்கிகளில் பெற்ற கடன்கள் கட்டி முடியவில்லை. காலபோகத்தில் அறுவடை செய்த நெல்லை இலாபத்திற்கு விற்கவும் வழியில்லை. இந்த நிலையில் சிறுபோக நெல் விளையுமா அதனை அறுவடை செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியாக உள்ளதாக மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (பா)

## மூதூரில்...

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தில் அரசாங்கம் உறுதியளித்திருந்தது. இந்தநிலையில் இலங்கைக்கான பிரெஞ்சுத் தூதுவர் கிறிஸ்ரின் றொபிசோன் சட்டமா அதிபரைச் சந்தித்து இந்தப் படுகொலைகள் குறித்த மீள் விசாரணையின் முன்னேற்றங்கள் தொடர்பாக விசாரித்துள்ளார். இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத் தினருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதன் மூலம் இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தத்தை தவிர்த்துக் கொள்ள முடியுமென திணைக்கள அதிகாரியொருவர் கூறினார். இது தொடர்பாக பல சர்வதேச அமைப்புகளின் முன்னிலையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச பொதுமன்னிப்புச்சபை இப்பிரச்சினையை எழுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## விசாரணைகளில்...

வருகைதந்த அவர் வைத்திய நிபுணர்கள மற்றும் பணிப்பாள பவானி பசுபதிராஜா ஆகியோரை உள்ளக்கி கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியிருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் போதனா வைத்தியசாலையின் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறப்படும் விடங்கள் தொடர்பில் விரைவில் விசாரணை துரிதப்படுத்தவிருப்பதாகவும், அதுவரை பொறுமையாக இருக்கும்படியும் வைத்திய சங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

வருகைதந்த அமைச்சின் அதிகாரியாகிய ஆனந்த குணசேகராவின் கலந்துரையாடல் ஒரு சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாக இருந்ததே அன்றி முறைகேடுகள் தொடர்பான ஆரோக்கியமான கருத்துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை பணிப்பாளர் தொடர்பாக 202 வைத்தியர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தம்து கோரிக்கைகளை முன்வைத்து கையொப்பம் இட்டுள்ளனர்.

இவ்வாறு கையொப்பம் இட்ட அனைவரும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் வருகைதந்த அதிகாரியின் செயற்பாட்டில் தமக்கு திருப்தி அளிக்கவில்லை என்றும் திட்டமிட்டபடி எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமது அடையாள வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

# வட, கிழக்கு இராணுவ முகாம்கள் அரசே தீர்மானிக்க வேண்டும்

## பொன்சேகா அல்ல என்கிறார் லால்காந்த



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எந்த இடங்களில் இராணுவ முகாம்கள் இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது இலங்கை அரசாங்கம் எனவும் ஏகாதிபத்தியவாதிகளின் தேவைக்கு அமையவே சரத் பொன்சேகா மட்டுமல்லாது, சம்பந்தன் போன்றோர் வடக்கில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோருவதாகவும் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற ஜே.வி.பியின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இலங்கையில் இராணுவ முகாம்கள், வடக்கில், வன்னியில், கிழக்கில், மாத்தறையில் எந்த இடங்களில் இருக்க வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கும்.

அரசாங்கத்துடன் இருக்கும் நல்லது கெட்டவையை நாங்கள் தீர்த்து கொள்கிறோம். அது மக்களின் வேலை. சரத் பொன்சேகா சிறையில் இருந்து விடுதலையானதும் வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என் தெரிவித்திருந்தார்.

அடுத்து சம்பந்தன் இதனைத் தொடர்ந்தும் கூறிவருகிறார். சம்பந்தன் என்பவர் சர்வதேசத்துடன் இணைந்து ஈழத்தை உருவாக்க போவதாக கூறி வருபவர். அதனை அவர் அண்மையில் கூட தெரிவித்திருந்தார். ஆனால் இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் எனக் கூறும் பொன்சேகா அதற்கான அடிப்படை காரணத்தைத் தெரிவிக்க வேண்டும்.

ஏனெனில் அவர் தற்போது அரசியலில் ஈடுபட்டுள்ளார் எனவும் லால்காந்த குறிப்பிட்டுள்ளார்.

# கத்தோலிக்க திருச்சபையின் புதிய மறைமாவட்டம் மட்டக்களப்பு

## பாப்பரசரால் பிரகடனம்

கத்தோலிக்க திருச்சபையின் புதிய மறைமாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் நேற்றைய தினம் பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பரினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

சுமார் 117 வருடங்களாக திருகோணமலை மறைமாவட்டத்திற்குள்ளேயே மட்டக்களப்பு, அம்பாறை நிர்வாக மாவட்டங்கள் உள்ளடங்கியிருந்தன.

இந்நிலையில் மட்டக்களப்பு புதிய மறைமாவட்டம் வத்திக்கான் நேரப்படி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு (இலங்கை நேரம் பிற்பகல் 3.30 மணி) வத்திக்கான் திருக்கூடத்தில் பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பரினால் பிரகடனம் செய்யப்பட்டது.

நீண்ட காலமாக மட்டக்களப்பு - அம்பாறை கத்தோலிக்க மக்களாலும் துறவற சபைகளாலும் இலங்கைத் திருச்சபையினூடாக பாப்பரசருக்கு விடுக்கப்பட்டிருந்த கோரிக்கையின் பயனாகவே இப்புதிய மறைமாவட்டம் உருவாக்கப்பட்டதாக மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க அருட்தந்தையொருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் திருகோணமலை மறைமாவட்டம் தனியாகவும் மட்டக்களப்பு மறைமாவட்டம் தனியாகவும் நிர்வாக ரீதியாக இயங்கவுள்ளதுடன் திருகோணமலையின் ஆயராக அதி வணக்கத்திற்குரிய ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினாலும் மட்டக்களப்பு மறைமாநிலத்தின் முதல் ஆயராக அதி வணக்கத்திற்குரிய பொன்னையா ஜோசப் ஆண்டகையும் இறைபணிபுரிவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வறிவிப்பு வெளியானதை வழக்கப்படி பங்கு ஆலயங்கள் அனைத்திலும் மணி ஒலிக்கப்பட்டது.

# மனிதக் கடத்தல்களுக்கான இடைத்தங்கல் நிலையம் இலங்கை

(கொழும்பு)

மனிதக் கடத்தலுக்கு இலங்கை ஒரு இடைத்தங்கல் நிலையமாக பயன்படுத்தப்படுவதாக தேசிய கடத்தல் முறியடிப்புப் பிரிவின் தலைவர் பிரபாத் அளுத்கே கூறியுள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் அவுஸ்ரேலியாவுக்குச் செல்வதற்கான இடைத்தங்கல் நிலையமாக இலங்கையை அடையாளம் கண்டுள்ளனர். இது ஒரு புதிய போக்காகும் என குடிவரவு, குடியகல்வு பணியகத்தின் கடத்தல் முறியடிப்புப் பிரிவின் தலைவரான பிரபாத் அளுத்கே தெரிவித்தார்.

மனிதக் கடத்தலை தடுப்பது தொடர்பாக இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உயிர்ப்புள்ளியியல் அடிப்படையிலான கடவுச்சீட்டுகளை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகவும் மனிதக்கடத்தலை கட்டுப்படுத்த இது உதவும் எனவும் அவர் கூறினார்.

# கைதான தமிழக மீனவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 10 பேரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி யூட்சன் நேற்று உத்தரவிட்டார்.

இந்தியா - இராமேஸ்வரம் வேர்கோடு கரையத்தெரு என்ற கிராமத்தைச் சேர்ந்த குறித்த 10 மீனவர்களும் சட்டவிரோதமான முறையில் இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்து நேற்று முன் தினம் இரவு தலைமன்னார் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டனர்.

இதன் போது ஒரு படகு பழுதடைந்த நிலையில் மற்றைய படகில் 10 மீனவர்களும் பயணிக்க முயற்சித்த நிலையில், அப்பகுதியூடாக வந்த கடற்படையினர் இம்மீனவர்களைக் கைது செய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தலை மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் நேற்று மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் குறித்த 10 மீனவர்களையும் ஆஜர்படுத்திய போது குறித்த மீனவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த மீனவர்கள் சார்பாக சட்டத்தரணி பிரிமுஸ் சிராய்வா ஆஜராகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்ரேலியா செல்லும் அகதிகள் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் அவுஸ்ரேலியா செல்லும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை ஆறு மடங்கால் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு முழுவதிலும் மொத்தமாக 211 இலங்கை அகதிகளே அவுஸ்ரேலியா சென்றிருந்தனர். எனினும் இந்த ஆண்டில் இது வரையிலான காலப் பகுதியில் 1346 இலங்கை அகதிகள் அவுஸ்ரேலியாவை சென்றடைந்துள்ளனர். குறிப்பாக இறுதி மூன்று வாரத்துக்குள் மாத்திரம் இந்த எண்ணிக்கையில் பாதி அளவான அகதிகள் அங்கு சென்றிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரையில் ஒரு ஆண்டில் அவுஸ்ரேலிய சென்ற இலங்கை அகதிகளின் உச்ச எண்ணிக்கை 708 ஆகக் காணப்பட்டது.

எனினும் தற்போது இந்த எண்ணிக்கை இந்த வருடத்தின் முதல் அரையாண்டு காலப்பகுதியிலேயே இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் இருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அவுஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தென்னிந்தியா மற்றும் இலங்கையின் சில பிரதேசங்களின் ஊடாகவே தற்போது இலங்கையர்கள் அதிக அளவில் வருவதாக அவுஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல்கள் ஆணையாளருடன் கட்சி செயலர்கள் சந்திப்பு

(கொழும்பு)

அரசியல் கட்சிச் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பு தேர்தல்கள் செயலகத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து கலந்துரையாடவே தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் இச்சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தேர்தல் நடைபெறவுள்ள மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளை சந்திக்கவுள்ளார்.

# காலாவதியான 1000 சீமெந்து பைகள் திடீர் சுற்றிவளைப்பில் சிக்கின

பண்டாரகம - களுத்துறை வீதியிலுள்ள தனியார் களஞ்சியச் சாலை ஒன்றில் இருந்து காலாவதியான சுமார் 1000 சீமெந்து மூடைகளை நுகர்வோர் விவகார அதிகார சபையினர் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

களஞ்சியச்சாலையில் இருந்து லொறியில் ஏற்றிக் கொண்டிருக்கையில் நேற்று முற்பகல் இந்த சீமெந்து மூடைகள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரசபையின் திடீர் சுற்றிவளைப்புப் பிரிவின் பிரதம அதிகாரி ஏ.ஏ.ஜகர் தெரிவித்தார்.

இதற்கமைய சீமெந்து மூடைகள் மற்றும் லொறி ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ள அதேவேளை, களஞ்சிய சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான அறிக்கை நாளையதினம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் ஜகர் கூறினார்.

# இணையத்தள முற்றுகை கவலையடைகிறது ஐ.நா.

ஸ்ரீலங்கா மிரர் மற்றும் லங்கா எக்ஸ் நியூஸ் இணையத் தளங்களின் அலுவலகங்கள் திடீர் சோதனையிடப்பட்டு 9 ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கு ஐ.நா. தனது கவலையை வெளியிட்டுள்ளது.

மேற்படி இணையத்தளங்களின் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டதை ஐக்கிய நாடுகள் அறிந்துள்ளதாக ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெஸர்க்கி தெரிவித்துள்ளார்.

நாம் கூறியிருப்பது போன்று இலங்கையில் மாத்திரமின்றி வேறு பல நாடுகளிலும் ஊடகவியலாளர்கள் தங்களது கடமையை எந்தவித தலையீடுமின்றி செய்யக்கூடியதாக இருப்பது அவசியமாகும். இது இலங்கைக்கும் பொருந்தும் எனவும் அவர் கூறினார்.

# ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் ஐ.தே.க.வில் போட்டியிட ஆர்வம்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் ஐ.தே.க.வுடன் இணைந்து போட்டியிட விரும்பும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சிலர் தொடர்பாக ஐ.தே.க. தீர்மானம் எதையும் மேற்கொள்ளவில்லை என அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும்கட்சி அரசியல்வாதிகள் சிலர் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட விரும்புவதாக தெரிவித்துள்ளதாகவும் அவர்களில் சிலர் மாகாண சபைகளில் சில பதவிகளைக் கோரியுள்ளதாகவும் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.



பெண் எம்.பிகள் சிலரை முதலமைச்சர் வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளதாக வெளியான செய்திகள் குறித்து ஊடகவியலாளர்கள் கேட்டபோது,

இந்தத் தேர்தல் தொடர்பான தீர்மானங்கள் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும் என அவர் கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.